DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
PROPERTY MAX
416-948-0693

CAMSONICS
SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999
RE/MAX MLS

26ம் ஆண்டில்...
26 years of publishing

www.uthayannews.ca

# UTHAYAN உதயன்

திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்

Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices

$1.00

416-752-1524 www.uthayannews.ca

Canadian Media Circulation Audit

PYRAMID GROUP
UTHAYAN SIVARAJAH 416.301.5555
ignite
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
PROPERTY MAX
MohanTeam.com
6888-14th Avenue
Markham ON, L6B 1A6

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurence;
Citizenship;
Permanent resident card renewal;
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road
Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

TEAM SMART
REAL ESTATE PROFESSIONALS
VARATHAN ANUSHAN
THIRU GOBIRAJ
416.219.3333

உதயம் 1446 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday December 22, 2023

## ரொறன்ரோவில் கடந்த பல வருடங்களாக இயங்கிவரும் HOMELIFE FUTURE REALTY INC நிறுவனத்தின் வருடாந்த கிறிஸ்த்துமஸ் விழா



கனடா ரொறன்ரோ நகரில் கடந்த பல வருடங்களாக வெற்றிகரமாக இயங்கிவரும் **HOMELIFE FUTURE REALTY INC** வீடு விற்பனைத்துறை நிறுவனத்தின் வருடாந்த கிறிஸ்த்துமஸ் விழா **Brighton Convention Centre** விழா மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. விழாவிற்கான ஏற்பாடுகளை நிறுவனத்தின் தலைவர் செல்வா வெற்றிவேல் அவர்கள் தனது துணைவியார் புதல்விகள் மற்றும் பணியாளர்கள் மற்றும் நண்பர்கள் சகிதம் சிறப்பாகச் செய்திருந்தார். இங்கே காணப்படும் படத்தில் நிறுவனத் தலைவர் செல்வா வெற்றிவேல் தனது விற்பனை முகவர்கள் சகிதம் ஸ்ரோவில் வைத்தியசாலைக்கு நிதி அன்பளிப்பை வழங்குவதைக் காணலாம்.

(உள்ளே விபரமான செய்தி 19ம் பக்கத்தில்)

## ரொறன்ரோவில் இயங்கிவரும் ROYAL LEPAGE IGNITE நிறுவனத்தின் வருடாந்த விற்பனையாளர் விருதுகள் வழங்கும் விழா



கனடாவில் ரொறன்ரோ மாநகரப் பகுதிகளில் உள்ள மக்களுக்கு வீடு விற்பனைத்துறையில் நன்கு அறிமுகமான **ROYAL LEPAGE IGNITE** வீடு விற்பனைத்துறை நிறுவனத்தின் வருடாந்த நத்தார் தினக் கொண்டாட்டமும் விற்பனையாளர்கள் விருதுகள் வழங்கும் விழாவும் கடந்த சனிக்கிழமையன்று **Scarborough Convention Centre** விழா மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

இங்கே காணப்படும் படத்தில் நிறுவனத் தலைவர் சுகன் சிவராஜா மற்றும் அவரது சகோதரர்கள் ஆகியோர் சிறந்த விற்பனை விருதுகளைப் பெற்ற பின்னர் கனடிய அமைச்சர் ஹரி ஆனந்தசங்கரியுடன் நிற்பதைக் காணலாம்.

(உள்ளே விபரமான விளம்பரம் 19ம் பக்கத்தில்)

BIG BILLIARD INSURANCE GROUP
Great Coverage. BIG Savings.
Home · Auto · Life · Business
Iggy Thuray
Insurance Broker
5.0 Google Reviews
416.814.7470
iggy@thebig.ca thebig.ca/iggy

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
Sales Representative
RE/MAX COMMUNITY

RE/MAX ACE REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

Sri Nadarajasundram
Real Estate Broker
416-276-6666 srinada21@gmail.com
RE/MAX ACE

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT
Purchase & Refinance
First Mortgage
Second Mortgage
Commercial Mortgage
Equity Loan
ACCOUNTING
Personal Income Tax
Corporate Income Tax
HST Returns
Bookkeeping Service
Payroll Service
Audit preparation
Business Startup service
Mobile: 416.710.9150

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222
905-794-4404
online service: www.remitbee.com

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

வீடு, வர்த்தக ஸ்தாபனங்கள் வாங்க விற்க அல்லது அவற்றின் பெறுமதியை சட்டப்பூர்வமாக மதிப்பிட்டு அறிக்கையை பெற்றுக்கொள்ள (Appraisal Report) 24 வருட அனுபவம் வாய்ந்த என்னை அழையுங்கள்.
S.K. Bales (Broker) MVA (Market Value Appraiser), FRI, CRES
email: skbales@hotmail.com
Bus: 416-270-1111 Cell: 416-801-3219
3-1286 Kennedy Road, Toronto ON M1P 2L5
RE/MAX ACE REALTY INC., BROKERAGE


Wishing you and your family a
Merry Christmas &
a Happy New Year!
VT INCEPIT FIDELIS SIC PERMANET
Ontario
VIJAY
THANIGASALAM
MPP - Scarborough-Rouge Park
8130 Sheppard Avenue East, Unit 105, Scarborough, ON M1B 3W3
416-283-8448 • vijay.thanigasalam@pc.ola.org
vijaythanigasalam.ca


19th January Friday 2024 7PM
செந்தில் குமரனின் நிவாரணம் அமைப்பு பெருமையுடன் வழங்கும்
பொன்மனச் செம்மல், ஏழைகளின் இதய தெய்வம் எம்.ஜி.ராமச்சந்திரன்
அவர்களின் வாழ்வை கொண்டாடும் முகமாக
SCAN ME
MGR 107
மாபெரும் இன்னிசை விருந்து
Metropolitan Centre
3840 Finch Ave East
Scarborough
அவர்களின் அட்டகாசமான பாடல்களுடன், அவரின் சில அபிமான நடிகர்களின் முத்தான பாடல்களையும்
பாடி உங்களை மகிழ்விக்க ஆவலோடு உள்ளோம். வருகை தந்து உயிர்கள் காத்திடுவீர்
Life-Saving Surgeries | Hospital Equipments | Livelihood Assistance | Mobile Medical Clinic
416-200-7652, 647-526-7652
www.Nivaranam.com
$30, $60, $100
திரட்டப்படும் நிதி முழுவதும் தாயகத்தில் நலிந்த நோயாளிகளின் இருதய – சிறுநீரக் சத்திரசிகிச்சைகளுக்காகவும், மருத்துவ கட்டுமானங்களுக்காகவும்,
கிளிநொச்சியில் மாற்றுத் திறனாளிகளுக்கான நடமாடும் மருத்துவ சேவைக்காகவும், வாழ்வாதர உதவிகளுக்கும், இதர தேவைகளுக்கும் பயன்படுத்தப்படும்.
100% of proceeds will be used for projects without any expenses deducted
முழு நிதி விபரங்களும் சமூக வலைத்தளங்களில் பகிரப்படும் | Thanks to all our Media Partners
செந்தில் குமரனின் நிவாரணம் (கனடா)
FREE PARKING
tvi HD
LANKASRI
IBC தமிழ்
Cineulagam
Our Digital Partners
east
CTR
உதயன்
குரல்

## உதயன் கதிரோட்டம்

# போதிக்கும் நிறுவனங்கள் பிரகாசித்த தமிழர் தாயகத்தில் போதை மருந்துகளின் பிரவாகம் பெருகியுள்ளமை திட்டமிட்ட சதிச் செயலா?

வடக்கும் கிழக்கும் இணைந்த பிரதேசம் ஒன்றே தமிழர் தாயகமாய் ஒளிர வேண்டும் என்ற தாகத்தோடு இருந்த எமக்கு 2009ம் ஆண்டிற்கு பின்னர் அந்த பிரதேசம் எம்மவர்களின் கைகளுக்குள் இல்லாது போய்விடும் என்ற நினைப்பு பெருமளவில் இல்லாமல் இருந்தது என்றே கூற வேணடும்.
நாம் எதிர்பார்த்த அந்த ஒளிமயமான எதிர்காலம் மறைந்து போனாலும் எம் மண்மீது உலாவிய வண்ணம் அதன் பெருமைதனை இயன்றளவு காத்துக்கொள்வோம். கொண்டாடுவோம் என்றே திட்டங்கள் தீட்ட முனைந்தனர் எம் மத்தியில் தோன்றிய நம்பிக்கையான நட்சத்திரத் தலைவர்கள். ஆனாலும் பாராளுமன்றக் கதிரைகளில் அமர்ந்ருந்து சுகபோகங்களை அனுபவிக்கத் துடித்தவர்கள் அவர்களின் சகாக்களும் மண்ணின் சுகந்தத்தில் சேற்றின் வாசம் கலந்தாலும் பரவாயில்லை, ஆட்சிக் கதிரை இருந்தால் போதும் என்ற எண்ணத்தோடு .அரசியலை நகர்த்தத் தொடங்கினார்கள்.

தொடர்ந்து எம் மண்ணின் இருப்பு தளர்ந்து போகும் அளவிற்கு ஆரோக்கியமான விடயங்கள் தொடர்வதற்கு பதிலாக 'புதிய வரவுகள்' ஈசல்கள் போல பறக்கச்சுகத் தொடங்கின. அவைகளின் தாக்கத்தினால் எம் மண்ணின் இயல்பான நகர்வு திசை மாறியது.
அவற்றில் ஒன்றுதான் 'போதை மருந்துகளின்' பிரவேசமாகத் தொடக்கத்தில் இருந்தது. கல்வியில் திளைத்து நின்ற எம் மாணவச் சமூகமும் 'குறி' வைக்கப்பட்டது. வடக்கும் கிழக்கும் இணைந்த மண்ணின் மகத்துவத்தை காப்போம் என்று எண்ணியவர்களுக்கு மாறாக அங்கு சமூகத்தை சீரழிக்கும் சாக்கடைகள் நிறைந்தன.
ஆனால் நாட்கள் நகர நகர நம் மண்ணில் நாசப் பயிர்களின் நாற்றுக்கள் நடுகைக்கு வந்தன. தினமும் வரும் செய்திகள் நம் மண்ணில் போதை மருந்துப்பாவனையை விட அவற்றின் விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை உயர்ந்து கொண்டுபோவதை கண்கூடாகப் பார்க்க முடிகின்றது. காந்தியின் தேசத்திலிருந்து தான் எம் புனித மண்ணுக்கு போதைப் பொருட்கள் கடல் தாண்டி வருகின்றன என்பது எம் செவிகளுக்கு அருகில் வந்து போகின்றன.
நாடுகளைப் பிரிக்கும் கடற்பரப்பில் பெருமளவில் 'உலா' வருகின்ற போது எவ்வாறு இவை நம் மண்ணுக்கு வரமுடியும் என்ற கேள்வியை நாம் முன்வைக்க தவறிவிட்டோம்.
இறுதியில் இன்று தினமும் நூறு இடங்களில் 'போதைகளின்' பாதிப்பால் வாழ்க்கையை இழக்கும் இளைய சமூகத்தினர் சீரழிந்து போவதைக் காண்கின்றோம். ஆமாம்! நாம் தலைகுனியும் அளவிற்கு நம் மண்ணில் 'போதை' கூடாரங்கள் அமைத்து குடிகொண்டு விட்டது. நாம் இனிமேல் தலை குனிந்துதான் வீதிகளில் நடக்கலாம்.

# மாணவர்களை இலக்கு வைத்து யாழ்ப்பாணத்தில் போதைப்பொருள் விநியோகம் – அறுவர் கைது!




யாழ்ப்பாணம் - கொக்குவில் பிரதேசத்தில் உள்ள பிரபல பாடசாலை மாணவர்களை இலக்குவைத்து போதை மாத்திரைகள் மற்றும் கஞ்சா போதைப்பொருளை விற்பனை செய்த ஆறு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.
தொலைபேசியில் whatsapp சமூக ஊடகம் மூலம் தொடர்பை எற்படுத்தி இவ்வாறு விற்பனை செய்து வந்த 06 சந்தேகநபர்கள் இன்று, மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவின் பொலிஸ் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் தெய்வனாயகம் மேனன் தலைமையிலான பொலிஸ் குழுவினரால் கைது செய்யப்பட்டு உள்ளனர்.
இவர்களில் இருவரை மூன்று நாட்களுக்கு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரிக்க நீதிமன்ற கட்டளை பெறப்பட்டுள்ளது. அத்துடன் போதைப்பொருள் பாவனையில் ஈடுபடும் மாணவர்களின் விபரங்கள், சந்தேக நபர்களை விசாரணை செய்து பெறப்படவுள்ளது.

Canada
We acknowledge the financial support of the Government of Canada

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்
உதயன் வெளியீட்டாளர்கள் — உதயன் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,
Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

# தமிழ் கட்சிகள் ஜனாதிபதியின் சந்திப்பை சரிவர பயன்படுத்த வேண்டும் என்கிறார் சுரேன் ராகவன்

தமிழ் கட்சிகள் ஜனாதிபதி சந்திப்புக்களை பயனுள்ள விதத்தில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் தெரிவித்தார்.
நேற்று வியாழக்கிழமை ஜனாதிபதிக்கும் தமிழ் கட்சிகளுக்கும் இடையிலான சந்திப்பு தொடர்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதியுடன் தமிழ் கட்சிகள் மூன்றுக்கும் மேற்பட்ட சந்திப்புகளை மேற்கொண்டுள்ளன சந்திப்புகள் பல விடயங்களுக்கு தீர்வுகளை பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தது.
குறிப்பாக நேற்றைய சந்திப்பில் வலி வடக்கு காணிகள் விடுவிப்பது மாகாண சபை நேரடி நிதிகளைப் பெறும் தொகையை அதிகரிப்பது யாழ்ப்பாண விமான நிலைய அபிவிருத்தி மற்றும் காங்கேசன் துறைமுக அபிவிருத்தி ஜனாதிபதி தனது கரிசனை வெளியிட்டுள்ளார்.

யாழ்ப்பாண சர்வதேச விமான நிலைய அபிவிருத்தி தொடர்பில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை தொடர்பிலும் கிளிநொச்சி நவீன நகராக்கத் திட்டம் தொடர்பில் ஆராய்வதற்கு என்னை நியமித்துள்ளார்.
மேலும் நேற்று சந்திப்பில் காணாமல் ஆக்கப்பட்ட விவகாரம் தொடர்பிலும் ஆராயப்பட்ட நிலையில் குறித்த விடயங்களை கையாள்வதற்கு விசேட நீதிபதிகளை உள்ளடக்கிய விசேட நீதிமன்றம் ஒன்றை நடைமுறைப்படுத்துவதாக தெரிவித்தார்.
லாது மாகாண சபை அனுமதியுடன் உயர்கல்வி நிறுவனங்களை ஆரம்பித்து மூன்று வருடங்களின் பின் பல்கலைக்கழகமாக மாற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்தார்.

ஆகவே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் சந்திப்புக்களை தமிழ் கட்சிகள் உரிய வகையில் பயன்படுத்துவதன் மூலம் மக்களுக்கான அபிவிருத்தியை முன்னெடுக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

**Basement for Rent**
Queen / James Potter in Brampton
3 bedroom, 2 washrooms with seperate entrance
Available on January 1st 2024
Call: 289-654-7141

**For All your Renovation Needs!**
- Drywall Installation
- Painting
- Hardwood Installation
- Bathroom Reno
- Kitchen Reno
Call - Siva
416-706-8160

**ROOM FOR RENT**
Scarborough Town Ctr அருகில் தனி அறை, 2 bedroom 2 bath condoல் வாடகைக்கு உள்ளது. Share with Tamil senior male. TTC at door step. Gym, Swim pools, Tennis, BBQ area, and more. Available January 1st. Prefer Tamil male.
Contact: 647 273 2053

**வீட்டில் உள்ள முதிய உறவுகளைப் பராமரிக்கும் சேவை (PSW SERVICE)**
உங்கள் வீட்டில் உள்ள முதியவர்களான உறவுகளைப் பராமரிக்கும் சேவையை (PSW Service) நாங்கள் செய்து வருகின்றோம்.
தொடர்புகளுக்கு- 647 701 9809 அல்லது 437 782 8776 ஆகிய இலக்கங்களை அழைக்கவும்

**பெண் சமையல் உதவியாளர் தேவை**
ஸ்காபுறோவில் உள்ள வீடொன்றில் சிறு குடும்பம் ஒன்றுக்கு பெண் சமையல் உதவியாளராக பணியாற்ற ஒருவர் உடனடியாகத் தேவை. சம்பளம் பேசித் தீர்க்கலாம். மேலதிக விபரங்களுக்கு
பாலா மாஸ்டர்:- 416 418 8425

**வேலை வாய்ப்பு**
**Cook and Kitchen Help Wanted**
Cobourg நகரத்திலும் Downtown Toronto விலும் அமைந்துள்ள கனடிய உணவகங்களுக்கு Cook மற்றும் Kitchen Help ஆகியோர் உடனடியாகத் தேவைப்படுகின்றார்கள். அனுபவம் விரும்பத்தக்கது. Cobourg நகரத்தில் வேலை செய்ய விரும்புவர்களுக்கு தங்குமிடம் மற்றும் போக்குவரத்து ஆகியன வழங்கப்படும்.
மேலதிக விபரங்களுக்கு:-
416 294 7887

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# யுத்தத்திற்கு பின்னர் எமது அரசியல் அதிகாரத்தை பெற திரட்சியாக ஒன்றுபட முடியாத நிலையில் உள்ளோம் என்கிறார் பேராசிரியர் ரகுராம்



அரசியலிலே பல பரிமாண அர்த்தங்கள் இருக்கின்றன. ஒவ்வொருவருடைய நடத்தையிலும் அரசியல் இருக்கின்றது. ஒவ்வொருவருடைய வார்த்தையிலும் அரசியல் இருக்கின்றது. உடல் சார்ந்தும், உடல் மொழி சார்ந்தும் அரசியல் இருக்கிறது. ஆனால் துரதிஷ்டவசமாக இங்கே நாங்கள் அரசியலை ஒரு தேர்தல் முறைமைக்குள் மாத்திரம் அல்லது அதிகார கட்டமைப்புக்குள் மாத்திரம் நாங்கள் தொடர்புபடுத்தி பார்க்கின்றோம் என யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் கலைப்பிட பீடாதிபதி பேராசிரியர் ரகுராம் அவர்கள் தெரிவித்துள்ளார்.

15-12-2023 வெள்ளிக்கிழமை அன்றையதினம் சங்கனை சிவப்பிரகாசம் வித்தியாலயத்தில் நடைபெற்ற அதிகாரம் 2 நூல் வெளியீட்டு விழாவிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

உண்மையில் அரசியல் என்ற சொல்லுக்குள் உள்ள ஆழமான அர்த்தங்களை உற்று நோக்க வேண்டும். அந்த வகையில் இந்த அதிகாரம், அரசியல், அரச அறிவியல் இந்த பதங்களுக்கு பின்னால் உள்ள மிகப்பெரிய வெளியை மாணவர்கள் தாராளமாக பயன்படுத்திக் கொள்ளலாம்.

அந்த வகையில் அரசியல் என்பது கற்றுத் தேர்ந்த துறையாக இல்லாமல் வாழ்க்கை முறையாகவும், வாழ்வினுடைய பல பரிமாணங்களில் நகர்த்தப்படும் ஒரு வெளியாகவும் இருக்கின்ற போது அரசியலை நாங்கள் எவ்வாறு உருவாக்க வேண்டும் என்ற அந்த பெரிய விழிப்புணர்வு எங்களுக்கு தேவையாக இருக்கின்றது.

உண்மையில் ஒரு முரண்நகையான விடயம் வடக்கு கிழக்கு மாகாணங்களை பொறுத்தவரையில் அதிகமான மாணவர்கள் தேர்ந்தெடுத்து படிக்கின்ற துறையாக அரச அறிவியல் இருக்கின்றது. அதேபோல பல்கலைக்கழகத்திலும் அரச அறிவியலை தேர்ந்தெடுத்து படிக்கின்ற மாணவர்களது எண்ணிக்கை அதிகம். ஆனால் எங்களுடைய சமூகத்தில் அந்த அரசியல் விழிப்புணர்வு இருக்கின்றதா என்ற மிகப்பெரிய கேள்வி இருக்கின்றது.

இந்த இடைவெளி எப்படி அமைந்திருக்கின்றது என்றால், 30 வருட கால அல்லது அதற்கும் அதிகமான விடுதலைப் போராட்டம் மௌனிக்கப்பட்டதன் பின்னர் எங்களுக்கான அரசியல் அதிகாரத்தை பெறுவதற்கான ஒரு முழு முயற்சியிலே நாங்கள் திரட்சியாக ஒன்று படமுடியாத ஒரு துர்பாக்கியசாலிகளாக இன்றைக்கும் இருக்கின்றோம்.

பாராளுமன்ற கதிரைகளை சூடேற்றியவாறு இன்றைக்கும் எமது அரசியல்வாதிகள் இருக்கின்றார்கள். ஒரு கட்சி சார்ந்து அதைச் சொல்லும் பொழுது, எங்களுடைய கட்சி சார்பிலே ஒரு விளக்குமாறினை நிறுத்தினால் கூட மக்கள் அவரை தெரிவு செய்து கொள்வார்கள் என்று சொல்கின்ற அளவுக்கு எங்களுடைய மக்களை முட்டாள்கள் ஆக்கக்கூடிய அந்த அரசியல் விழிப்புணர்வினுடைய அந்த பரிணாம எல்லை இங்கு காணப்படுகின்றது.

ஆகவே கற்றுத் தேர்ந்த பாடங்களுக்கும், பல்கலைக்கழக கல்வி முறைக்கும் அப்பாலே மக்கள் மத்தியில் இருக்கக்கூடிய அரசியல் விழிப்புணர்வு சார்ந்து நாங்கள் சிந்திக்க வேண்டி இருக்கிறது. அரசியல் எங்களிடமிருந்து பிடிக்கப்பட முடியாத ஒரு விடயம் என்றார்.

# மன்னார் மாவட்டத்தில் தாழ் நில பிரதேசங்கள் வெள்ள அனர்த்தத்திற்கு உள்ளாகும் நிலை

## மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் மாவட்ட உதவி பணிப்பாளர் கே. திலீபன்

**- மன்னார் நிருபர் (16-12-2023)**







மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக மழை பெய்து வருகின்ற மையினால் மாவட்டத்தில் பெரும்பாலான தாழ் நில பிரதேசங்கள் வெள்ள அனர்த்தத்திற்கு உள்ளாகுவதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் மாவட்ட உதவி பணிப்பாளர் கே. திலீபன் தெரிவித்துள்ளார்.

மேலும் வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் தொடர்ச்சியாக மழை பெய்து வருகின்ற மையினால் பாலியாறு மற்றும் பரங்கியாறு போன்ற ஆறுகளின் நீர் மட்டங்கள் உயர்வடையும் நிலை ஏற்பட்டுள்ளது.

அவ்வாறு நீர் மட்டம் அதிகரிக்கும் சந்தர்ப்பங்களில் மன்னார் - யாழ்ப்பாணம் (ஏ-32) பிரதான வீதி வெள்ள நீரில் மூழ்கும் வாய்ப்பு காணப்படுகின்றது.

எனவே குறித்த வீதியூடாக பயணம் செய்யும் மக்கள் மிகவும் அவதானத்துடன் செயற்படுமாறு வேண்டப்படுகிறார்கள்.

பொலிஸார் மற்றும் இராணுவத்தின் அறிவுறுத்தல்களுக்கு அமைய குறித்த வீதியூடாக பயணங்களை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

மன்னார் தீவு மற்றும் பெருநிலப்பரப்பு பகுதியில் உள்ள தாழ் நிலப்பரப்புக்கள் வெள்ளத்தில் மூழ்கும் வாய்ப்பு காணப்படுகின்றது.குறித்த பகுதியில் உள்ள மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்ல நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

மேலும் வெள்ள நீர் வடிந்தோட வடிகான்களை துப்பரவு செய் வெள்ள நீரை கடலுக்குள் செல்ல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள தேவன் பிட்டி, பகுதியில் 72 குடும்பங்களைச் சேர்ந்த 161 நபர்கள் இடம் பெயர்ந்து தற்காலிக முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.இவர்களுக்கான உணவு இராணுவத்தினரால் வழங்கப்பட்டுள்ளது.

எனவே தொடர்ச்சியாக மழை பெய்து வருகின்ற மையினால் மக்களை பாதுகாப்புடன் செயல்படுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# தலைமன்னார் கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட 8 இந்திய மீனவர்கள் நிபந்தனையின் அடிப்படையில் விடுதலை




**- மன்னார் நிருபர் (20-12-2023)**

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட ராமேஸ்வரம் மீனவர்கள் 8 பேரை நிபந்தனையின் அடிப்படையில் விடுதலை செய்ய மன்னார் நீதவான் நீதிமன்றம் புதன்கிழமை (20) உத்தரவு பிறப்பித்துள்ளது.

கடந்த மாதம் 6 ஆம் திகதியன்று இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட ராமேஸ்வரம் மீனவர்கள் 8 பேரை இலங்கை கடற்படையினர் தலைமன்னார் கடற்பரப்பில் வைத்து கைது செய்தனர்.

கைதான 8 மீனவர்களும் மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலை படுத்தப்பட்டதன் பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இந்நிலையில், இந்த மீனவர்கள் புதன்கிழமை (20) மீண்டும் மன்னார் நீதிமன்றத்தில் முன்னிலை படுத்தப்பட்டனர்.

இதன் போது விசாரணைகளை மேற்கொண்ட நீதவான் நிபந்தனையின் கீழ் அவர்களை விடுதலை செய்தார்.

இதனைத் தொடர்ந்து விடுவிக்கப்பட்ட மீனவர்கள் இந்தியத் துணைத் தூதரக அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

# வெள்ள அனர்த்தம் காரணமாக யாழ்ப்பாணத்தில் இதுவரை 1514 குடும்பங்கள் பாதிப்பு!



தொடர்ச்சியாக பெய்துவந்த அடைமழை காரணமாக யாழ்ப்பாணத்தில் இதுவரை 1514 குடும்பங்களைச் சேர்ந்த 5160 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண அனர்த்த முகாமைத்துவ பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வெள்ளப்பெருக்கு காரணமாக கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 241 குடும்பங்களைச் சேர்ந்த 760 பேரும், உடுவில் பிரதேச செயலர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஆறு பேரும், சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் 63 குடும்பங்களைச் சேர்ந்த 215 பேரும், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 79 குடும்பங்களைச் சேர்ந்த 259 பேரும், பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் 212 குடும்பங்களைச் சேர்ந்த 712 பேரும், சங்கானை பிரதேச செயலர் பிரிவில் 654 குடும்பங்களைச் சேர்ந்த 2264 பேரும், தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் 117 குடும்பங்களைச் சேர்ந்த 439 பேரும், கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் 42 குடும்பங்களைச் சேர்ந்த 144 பேரும், காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் 79 குடும்பங்களைச் சேர்ந்த 260 பேரும், யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவில் 14 குடும்பங்களைச் சேர்ந்த 57 பேரும், வேலணை பிரதேச செயலர் பிரிவில் 12 குடும்பங்களைச் சேர்ந்த 44 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் கடந்த 24 மணித்தியாலத்தில் யாழ்பபாண மாவட்டத்தில் அதி கூடிய மழை வீழ்ச்சியாக 73.2 மில்லிமீட்டர் மழைவீழ்ச்சி அச்சுவேலி பகுதியில் பதிவாகியது என்றார்.

416 283 6232
இப்பொழுது உங்கள் GEETHAVAANI RADIO வை
தொலைபேசி அழைப்பில் கேளுங்கள் !



# மன்னாரில் 18 ஆயிரம் போதை வில்லைகளுடன் இருவர் கைது

**- மன்னார் நிருபர் (20-12-2023)**

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட சட்டவிரோத போதை வில்லைகளுடன் இருவர் புதன்கிழமை (20) காலை மன்னாரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்ட குறித்த இருவரிடமிருந்து 18, ஆயிரம் சட்டவிரோத போதை வில்லைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர்கள் தோட்டவெளி மற்றும் தாழ்வுபாடு பகுதிகளை சேர்ந்தவர்கள் என தெரிய வந்துள்ளது.

இதன்போது கைப்பற்றப்பட்ட போதை வில்லைகளின் பெறுமதி 21 லட்சம் ரூபா என பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களும்,போதை வில்லைகளும் மன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளது.





# ஜனாதிபதி மற்றும் வடக்கு – கிழக்கு மாகாண தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்குமிடையில் நடைபெற்ற சந்திப்பு

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் வடக்கு - கிழக்கு மாகாணங்களை பிரதி நிதித்துவப் படுத்தும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பு ஜனாதிபதி அலுவலகத்தில் வியாழக்கிழமை (21) நடைபெற்றது.

இதன் போது நல்லிணக்கம் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் கலந்தாலோசிக்கப்பட்டதன.

காணி, மீள் குடியமர்த்தல், நல்லிணக்கத்திற்கு அமைவாக சட்டத்தை நடைமுறைப்படுத்தல், தமிழக அகதி முகாம்களில் இருக்கும் இலங்கையரின் பிரச்சினைகள் மற்றும் வடக்கு, கிழக்கு அபிவிருத்தி தொடர்பில் கலந்துரையாமேற்படி கலந்துரையாடல் இடம்பெற்றது என அறியப்படுகின்றது.



# கிளிநொச்சி மாவட்டத்தில் 2023 ஆம் ஆண்டுக்கான பெரும் போக நெற்செய்கை பாதிக்கப்பட்டுள்ளது

நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் 2023 ஆம் ஆண்டுக்கான பெரும் போக நெற்செய்கை பாதிக்கப்பட்டுள்ளது.

குறித்த பாதிப்பினால் விவசாயிகள் பலர் நட்டத்தை எதிர்கெண்டுள்ளனர். செய்கை மேற்கொண்டு இரண்டு மாதம் கடந்த நிலையில் நெற் கதிர்கள் நீரில் மூழ்கியுள்ளன.

முரசுமோட்டை, பன்னங்கண்டி, கண்டாவளை, பெரியகுளம் உள்ளிட்ட பகுதிகளில் இவ்வாறு பாதிக்கப்பட்ட விவசாயிகள் ஆதங்கம் வெளியிட்டுள்ளனர்.

தொடர்ச்சியாக இடம்பெறுகின்ற வெள்ள அனர்த்தங்களில் விவசாயிகளின் நெற்செய்கை அழிவுறும் நிலையில், உரிய நஷ்ட ஈட்டினை பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் தெரிவித்துள்ளனர்.

மேலும் இம்முறை இரணைமடு குளத்தின் நீர் வரத்து அதிகமாக காணப்பட்டதன் காரணமாக பலரது நெற்செய்கை மூழ்கியுள்ளதாகவும், விவசாயம் மேற்கொள்ளப்பட்ட வயல் நிலங்கள் பாதிக்கப்படாத வகையில் ஆரம்பத்திலேயே இரணைமடு குளத்தின் நீரை திறந்து விடப்பட்டிருந்தால் இவ்வாறு பாதிப்பினை தவிர்த்திருக்கலாம் எனவும் கவலை வெளியிடுகின்றனர்.

இனிவரும் காலங்களிலாவது விவசாய நிலங்கள், விவசாயிகள் பாதிக்கப்படாத வகையில் இரணைமடு குளத்திலிருந்து வெளியேற்றப்படுகின்ற மேலதிக நீரை வெளியேற்றுவதற்குரிய வகையில் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.





# தமிழ் சமூக சிவில் குழுக்கள் இமயமலை பிரகடனத்தை நிராகரிக்கின்றன

## வேலன் சுவாமிகள் தெரிவிப்பு

இலங்கை செய்திகள் Sri Lanka News



தமிழ் குறைகளை நிவர்த்தி செய்யாததற்காக "இமயமலை பிரகடனத்தை" தமிழ் சிவில் சமூக குழுக்கள் நிராகரிக்கின்றன என சிவகுரு ஆதீனம் - யாழ்ப்பாணம்,

பொலிகண்டி பேரணி இணைப்பாளர் பொத்துவில் தவத்திரு வேலன் சுவாமிகள் தெரிவித்தார்.

குறித்த விடயம் தொடர்பாக அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது. அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

தமிழ் பல்கலைக்கழக மாணவர்கள், காணாமல் போனோர் குடும்பங்கள் உட்பட பாதிக்கப்பட்ட குழுக்கள், சமய குழுக்கள், தொழிற்சங்கங்கள், கல்விமான்கள் மற்றும் பலர் அடங்கிய தமிழ் சிவில் சமூக குழுக்கள் சங்காவின் சிறந்த இலங்கை (SBSL) மற்றும் உலகத் தமிழ் மன்றம் (SBSL) மற்றும் உலகளாவிய தமிழ் மன்றம் (இமயமலை பிரகடனத்தை" கூட்டாக நிராகரித்துள்ளன. GTF).

இமயமலைப் பிரகடனத்தை ("பிரகடனம்") ஆர்வத்துடன் படித்தோம். ஆனால், சுதந்திரத்திற்குப் பிறகு தமிழர்கள் அனுபவித்து வரும் வேதனைகள் மற்றும் வேதனைகள் மற்றும் தமிழர்களின் குறைகளையும், வேதனைகளையும் முற்றிலும் புறக்கணித்ததற்காக ஏமாற்றமடைந்தோம்.

வெளிப்படையாக, பௌத்த மதகுருமார்களுக்கு தமிழர்களின் குறைகள் பற்றி தெரியாது, ஏனெனில் அவர்கள் தமிழர் பகுதிகளுக்கு வெளியே சிங்களவர்களிடையே வசிப்பதால், நாம் என்ன கடந்து வந்தோம், தொடர்ந்து கடந்து வருகிறோம்.

பதினான்கு வருடங்களுக்கு முன்னர் யுத்தம் முடிவடைந்த பின்னர், P2P (பொதுவில் முதல் பொலிகண்டி வரை) போன்ற வெகுஜன பேரணிகள் மூலம் நேரடியாக எமது குறைகளை வெளிப்படுத்தியுள்ளோம். பாதுகாப்புப் படையினரின் மிரட்டல் மற்றும் தாக்குதல்களுக்கு மத்தியிலும் சுமார் அரை மில்லியன் தமிழர்கள் இணைந்து தமிழ்ப் பகுதிகளில் ஐந்து நாள் அணிவகுப்பை P2P வழிநடத்தியது. தமிழ்ப் பல்கலைக்கழக மாணவர்களும், காணாமல் போனவர்களின் குடும்பங்கள் போன்ற பாதிக்கப்பட்ட குழுக்களும் தமிழர்களின் குறைகளை வெளிப்படுத்தும் வகையில் ஏராளமான போராட்டங்கள், உண்ணாவிரதப் போராட்டங்கள் மற்றும் ஊர்வலங்களை நடத்தினர். அவர்களின் குறைகள் எதுவும் இந்த "பிரகடனத்தில்" கவனிக்கப்படவில்லை. பதினான்கு ஆண்டுகளுக்கு முன்னர் யுத்தம் முடிவடைந்த பின்னர் தமிழர்களால் வெளிப்படுத்தப்பட்ட பின்வரும் தமிழ்க் குறைகளை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறோம்.

1. போருக்கு முந்தைய 1983 நிலைகளுக்கு தமிழர் பகுதிகளில் ஆயுதப் படைகளின் இருப்பைக் குறைத்தல். யுத்தம் முடிவடைந்து பதினான்கு வருடங்களுக்கு மேலாகிவிட்டது, ஆனால் மே 2009 இல் போரின் உச்சக்கட்டத்தில் இருந்ததைப் போலவே மோசமான இராணுவப் புலனாய்வுப் பிரிவு உட்பட பாதுகாப்புப் படைகளின் பிரசன்னம் பராமரிக்கப்பட்டு வருகிறது. அமைதிக் காலத்தில் பொதுமக்கள் மத்தியில் அவர்களின் இருப்பு இனப்படுகொலை மற்றும் தமிழ்ப் பெண்களை பாதுகாப்புப் படையினரால் பெருமளவிலான கற்பழிப்பு உள்ளிட்ட கடுமையான அட்டூழியக் குற்றங்களை எதிர்கொண்ட தமிழர்களுக்குப் பல பாதுகாப்பு மற்றும் சமூகப் பிரச்சினைகளை உருவாக்குகிறது.

2. சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு (ICC) இலங்கையைப் பார்க்கவும்: போர் முடிவடைந்து பதினான்கு ஆண்டுகள் கடந்துவிட்டன, ஆனால் ஒரு பாதுகாப்புப் படை அதிகாரியோ அல்லது அரசியல் தலைவரோ நீதியை எதிர்கொள்ளவில்லை - ஐ.நா உள் ஆய்வு அறிக்கையின்படி, சுமார் எழுபதாயிரம் தமிழர்கள் 2009 இல் நடந்த போரின் இறுதி ஆறு மாதங்களில் கொல்லப்பட்டனர். மேலும், குழந்தைகள் மற்றும் குழந்தைகள் உட்பட ஆயிரக்கணக்கான தமிழர்கள் காணாமல் போனார்கள். மனித உரிமைகளுக்கான ஐ.நா உயர்ஸ்தானிகர் உட்பட பல ஐ.நா அதிகாரிகளின் கோரிக்கையின்படி இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு (ஐ.சி.சி) பரிந்துரைக்குமாறு நாங்கள் கோருகிறோம்.

3. புராதன இந்து இடங்கள் உட்பட இந்துக் கோவில்களை அழிப்பதை நிறுத்தவும், பௌத்தர்கள் யாரும் வசிக்காத தமிழ் பகுதிகளில் புத்த கோவில்கள் கட்டுவதை நிறுத்தவும்.

4. தமிழர் பிரதேசங்களில் அரச அனுசரணையுடன் சிங்களக் குடியேற்றங்களை நிறுத்துதல் மற்றும் தமிழர் நிலங்களை அபகரிப்பதை நிறுத்துதல்.

5. நீடித்து வரும் தமிழர் மோதலைத் தீர்க்க சர்வதேச அளவில் வாக்கெடுப்பு நடத்தவும்: சுதந்திரம் பெற்றதில் இருந்து நீடித்து வரும் தமிழர் மோதலுக்கான அடிப்படைக் காரணம் அர்த்தமுள்ள அரசியல் தீர்வு இல்லாததுதான். இந்த மோதலின் விளைவாக 1958, 1977, 1983 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் தமிழர்கள் பெருமளவில் கொல்லப்பட்டனர். தமிழ்த் தலைவர்களுக்கும் சிங்கள மேலாதிக்க அரசாங்கங்களுக்கும் இடையிலான பல ஒப்பந்தங்கள் ஒருதலைப்பட்சமாக அடுத்தடுத்த அரசாங்கங்களால் ரத்து செய்யப்பட்டன மற்றும் இந்தியா மற்றும் நோர்வேயின் சர்வதேச மத்தியஸ்தம் கூட தோல்வியடைந்தது. உலகெங்கிலும் உள்ள பல நாடுகளில் உள்ளதைப் போலவே, ஜனநாயக ரீதியில் அரசியல் தீர்வைக் காண்பதற்கு சர்வதேச அளவில் பொதுவாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று தமிழர்கள் பலமுறை கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த விடையத்திற்கு கையொப்பம் ஈட்ட அறிக்கையும் வெளியீட்டனர்

1. தவத்திரு அகத்தியர் அடிகளார் தென்கயிலை ஆதீனம் - திருகோணமலை
2. Rev. Fr. ஜோசப் மேரி (எஸ் ஜே) மட்டக்களப்பு
3. தவத்திரு வேலன் சுவாமிகள்
சிவகுரு ஆதீனம் - யாழ்ப்பாணம்,
பொலிகண்டி பேரணிக்கு இணைப்பாளர் பொத்துவில்
4. Rev. Fr. ஜெயந்தன் பச்செக் ஓஎம்ஜ ஓப்லேட்ஸ் ஆ்.ப் மேரி இம்மாகுலேட் யாழ்ப்பாணம்
5. Rev. Fr. கந்தையா ஜெகதாஸ் மட்டக்களப்பு இணைப்பாளர் பொத்துவில் பொலிகண்டி பேரணிக்கு
6. திருமதி ஒய்.கனகரஞ்சினி
தலைவர் - வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களுக்கான சங்கம் - வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள்
7. திரு. ஏ. விஜயகுமார்
தலைவர் - மாணவர் ஒன்றியம் - யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
8. விக்னேஸ்வரன் கஜரூபன் மாணவர் ஒன்றியம் - கலை மற்றும் கலாச்சார பீடம் கிழக்கு பல்கலைக்கழகம்
9. திரு. த. தங்கராஜா தலைவர் - ஊழியர் சங்கம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
10. திருமதி. விமலேஸ்வரி ஸ்ரீகாந்தரூபன் மகளிர் ஐக்கிய கண்காணிப்புச் சங்கம் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள்
11. திருமதி. மிதிலைச்செல்வி ஸ்ரீபத்மநாதன் உழைக்கும் பெண்கள் சங்கம்
12. திருமதி. சரோஜா சிவச்சந்திரன் பெண்கள் மற்றும் மேம்பாட்டு மையம்



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# யாழ்ப்பாண விவசாயிகளுக்காக அனுப்பிவைக்கப்பெற்ற நோய்த் தொற்றுக்குள்ளான விதை உருளைக்கிழங்கு குறித்து பல விடயங்கள் அம்பலம்!



"எங்களது விவசாயிகளுக்காக வழங்கப்பட்டுள்ள விதை உருளைக்கிழங்கில் ஏற்பட்டுள்ள பக்டீரியா, பங்கஸ் தாக்கம் சம்பந்தமான பிரச்சனை ஒன்று யாழ்ப்பாண மாவட்டத்தில் பேசப்படுகின்றது. இந்த உருளைக்கிழங்கு உண்மையிலே அவுஸ்திரேலியாவில் இருந்துதான் வந்ததா? என்ற சந்தேகம் வலுத்துள்ளது" என யாழ்ப்பாண மாவட்ட நவீனமயமாக்கல் செயல்திட்ட உருளைக்கிழங்கு உற்பத்தியாளர் சங்கத்தினுடைய தலைவர் செ. துஷ்யந்தன் தெரிவித்துள்ளார்.

21ம் திகதி வியாழக்கிழமை தினம் புன்னாலைக்கட்டுவன் பகுதியில் அமைந்துள்ள அவரது அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஏற்கனவே விவசாயத் தொற்று ஏற்பட்டிருப்பதாக எமது கிளிநொச்சி விவசாய ஆராய்ச்சி நிலையம் மற்றும் திருநெல்வேலி ஆராய்ச்சி நிலையத்திலிருந்து எமக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் இந்த உருளைக்கிழங்கு விவசாயிகளுக்கு வழங்கினால் விவசாயிகளினுடைய வாழ்வாதாரம் பாதிக்கப்படும் என்று கூறப்பட்டது.

அதாவது இந்த உருளைக்கிழங்கின் மூலம் மண்ணில் ஏற்படும் பாக்டீரியா தாக்கம் ஏனைய பயிர்களையும் பாதிக்கும் என்று உத்தியோகபூர்வமாக யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபரின் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கூறப்பட்டது.

எங்களுடைய சங்கத்தில் உள்ள அங்கத்தவர்கள் அனைவரும் சேர்ந்து சென்று எமது களஞ்சியசாலையில் பார்வையிட்ட பொழுது அந்த கிழங்குகள் மிகவும் அழுகிய நிலையில் இருந்தது. ஆகையால் இந்த கிழங்குகள் நமது விவசாயிகளுக்கு கொடுக்க பொருத்தமற்றவை என நாங்கள் முடிவு செய்தோம். 5000 கிலோ கிழங்குகள் அழுகிய நிலையில் காணப்பட்டன. மிகுதி கிழங்குகள் வரும்போது ஒரு நிறத்திலும் பின்னர் வேறொரு நிறத்திற்கும் மாற்றம் அடைந்திருந்ததை அவதானிக்க முடிந்தது.

இந்தக் கிழங்குகள் உண்மையிலேயே அவுஸ்திரேலியாவில் இருந்துதான் வந்ததா என்ற சந்தேகம் எங்களுக்கு எழுகின்றது. ஆஸ்திரேலியாவில் இருந்து வந்தால் அந்த கம்பெனியின் முகவரி யார்? இந்தப் பிரச்சினை ஆரம்பித்து பத்து நாட்கள் கடந்து விட்டன. ஆனால் இன்று வரைக்கும் அந்த கம்பனியின் முகவரோ அல்லது அந்த கிழங்கினை கொண்டு வந்து எமது களஞ்சியசாலைக்கு வழங்கியவரோ இதுவரைக்கும் எம்மை வந்து சந்திக்கவில்லை.

கடந்த காலங்களில் பெட்டியில் தான் கிழங்குகள் எமக்கு கிடைக்கப்பெறும். இந்த முறை சாக்கிலேயே எமக்கு கிழங்குகள் வழங்கப்பட்டன. அந்த சாக்கில் அடைக்கப்பட்ட லேபலில் தொலைபேசி இலக்கம் இல்லை, மின்னஞ்சல் முகவரி இல்லை, இணையதள முகவரி இல்லை, ஆதாரத்துக்கு எந்த ஒரு விடயங்களும் அதில் இல்லை. ஆகையால் இந்த கிழங்கானது எங்கிருந்து வந்தது என்ற கேள்வி எமக்கு எழுகின்றது.

அடுத்ததாக இந்த கிழங்கானது சாதாரண ஒரு அளவில் வந்தால் தான் இதனை நாங்கள் நிலத்தில் புதைக்கலாம். நவீன மயமாக்கல் முறை செய்யத் திட்டத்தில் நாங்கள் நிலத்தில் புதைப்பதற்கு 2000 கன்றுகளுக்கு (அரை ஏக்கர் நிலம்) எங்களுக்கு 650 கிலோ கிழங்குகள் தேவை. சிறிய அளவில் வந்தால் தான் நாங்கள் அப்படி விவசாய நிலத்தில் தாழ்க்க முடியும். எமக்கு வழக்குவதற்காக கொண்டுவரப்பட்ட இந்த கிழங்கின் அளவிற்கு வந்தால் 13 அந்தருக்கு பதிலாக 26 அந்தருக்கு மேற்பட்ட கிழக்குகள் தேவைப்படும். அவர்கள் வழங்குவதற்கு கொண்டு வந்த கிழக்கினைப்போல விதை கிழங்கினை நாங்கள் இதுவரை காணவும் இல்லை.

நவம்பர் மாதம் 17ஆம் திகதி வந்த கிழங்குகள் டிசம்பர் மாதம் 1ஆம் திகதிவரை களஞ்சியசாலையில் இருக்கும். அதாவது அந்த நிறுவனம் களஞ்சியசாலையில் வைத்து, அவர்களே அதனை பராமரித்து எங்களிடம் ஒப்படைக்கும் வரை களஞ்சியத்தில் இருக்கும். ஆனால் இதுவரை உத்தியோகபூர்வமாக யாருமே அந்த கிழங்கினை எங்களிடம் ஒப்படைகாகவில்லை. டிசம்பர் 1ஆம் திகதி களஞ்சியசாலை திறப்பு எங்களது கைகளுக்கு வந்த பின்னர் நாங்கள் குறித்த கிழங்குகளை 12ஆம் திகதி விவசாயிகளுக்கு வழங்குவதற்காக 11ஆம் திகதி களஞ்சியசாலையை திறந்தோம். அவர்களது களஞ்சியப்படுத்தல் காலம் முடிவடைந்தது 10நாட்கள் தான் அந்த கிழங்குகள் களஞ்சியசாலையில் இருந்தன. 11ஆம் நாள் பார்த்தவேளை கிழங்குகள் அழுகிய நிலையில் இருந்தன.

இந்நிலையில் நாங்கள் கிட்டத்தட்ட 200 வேலையாட்களை வேலைக்கு அமர்த்தி ஏழு நாட்களாக அந்த கிழங்குகளை தெரிந்தெடுத்தோம்.

வழமையாக வருகின்ற கிழங்குகள் மூன்று மாதங்கள் வரை களஞ்சியத்தில் இருக்கும். ஆனால் பழுதடைவதில்லை. கிழக்கு பழுதடைவதற்கு களஞ்சியசாலை காரணமாக இருக்க முடியாது. ஏனென்றால் இதற்கு முன்னரும் நாங்கள் அந்த களஞ்சியசாலையை தான் பயன்பயுத்தினோம்.

யாழ்ப்பாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் விவசாய அமைச்சுக்கு, எமது யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள 500 விவசாயிகளுக்கு விதை கிழங்குகள் தேவை என கடிதம் ஒன்றை அனுப்பி உள்ளார். இந்நிலையில் இவ்வாறு வழங்குவதற்கு விதைக்கிழங்குகள் கைவசம் இல்லை என அந்த நாடாளுமன்ற உறுப்பினருக்கு விவசாய அமைச்சினால் பதில் வழங்கப்பட்டுள்ளது. அவருக்கு பதிலளித்து ஒரு மாதத்திற்குள் இந்த கிழங்குகள் எமக்கு வழங்குவதற்காக கொண்டுவரப்பட்டுள்ளது. இல்லை என்று கூறப்பட்ட கிழங்குகள் திடீரென எவ்வாறு கிடைத்தன?

இந்த கிழங்கில் ஏற்கனவே பங்கஸ் மற்றும் பக்டீரியா தாக்கம் இருந்ததனால் தான் எமது களஞ்சியசாலைக்கு வந்த பின்னர் அழுகியுள்ளது. எனவே விவசாயிகளுடைய வாழ்வாதாரத்தில் யாரும் விளையாட வேண்டாம் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.


THANA INSURANCE Inc.

# Thana Insurance Inc

## NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 10 K | 22 | 20 | 22 | 20 | 25 | 23 | 34 | 29 | 45 | 37 |
| 25 K | 37 | 34 | 47 | 40 | 54 | 49 | 76 | 64 | 106 | 84 |
| 50 K | 69 | 62 | 89 | 75 | 104 | 92 | 147 | 123 | 206 | 162 |
| 100 K | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 318 |
| 200 K | 260 | 231 | 337 | 282 | 398 | 353 | 572 | 476 | 807 | 631 |

## 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 32 | 26 | 50 | 40 | 86 | 60 | 140 | 94 | 265 | 171 |
| 200 K | 60 | 46 | 103 | 74 | 166 | 115 | 275 | 182 | 468 | 321 |



Call us Today

Cell : 416-728-5772
Office : 416-519-3896

**20 வருடம் மட்டுமே பணம் செலுத்தும் காப்புறுதி**

**மருத்துவ பரிசோதனை இல்லாத காப்புறுதி**

**சாரதி அனுமதிப்பத்திரம் பறிமுதல் செய்யப்பட்டு காப்புறுதி செய்யமுடியாமல் இருப்பவர்களிற்கும்**

**உங்கள் காப்புறுதி முகவர் தற்போது சேவையில் இல்லாவிடின் உங்கள் திட்டத்தை இரத்து செய்யாமல் அதில் இலவசமாக மாற்றங்களை செய்ய என்னை அழையுங்கள்**

**Thana Manickavasagar**
Insurance Broker
thana7@gmail.com
www.thana.ca
fax : 647-547-8147
80 Nashdene Road ,#D218,
Scarborough,ON,M1V 5E4

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# இமாலயப் பிரகடனம் அல்ல : இமாலயப் பிரட்டுருட்டு : ஈழத்தமிழர் தேசிய அடிப்படைகளுக்கு எதிரான அரசியல் இரண்டகம் — அனந்தி சீற்றம்!

பு. கஜிந்தன்

இமாலயப் பிரகடனம் என்பது ஈழத்தமிழர்கள் ஒரு தேசிய இனம் என்ற அடிப்படையை வலியுறுத்தவில்லை, ஒத்துக்கொள்ளவில்லை. வரலாற்று ரீதியான தனித்துவமான இறைமைக்கு ஈழத்தமிழர்கள் உரித்துடையவர்கள் என்பதை அது உரைக்கவில்லை, உதறிவிட்டுள்ளது என வடக்கு மாகாண சபையின் முன்னாள் அமைச்சர் அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.

18-12-2023 அன்று அவர் வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவ் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

சனநாயக ரீதியில் சுயநிர்ணய உரிமையைப் பயன்படுத்தி ஈழத்தமிழர்கள் மட்டுமல்ல பெரும்பான்மையான தமிழ் பேசும் மக்கள் தந்தை செல்வாவின் தலைமையில் மேற்கொண்ட வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் அற வலிமையை அழித்துவிடலாம் என்ற கற்பனையில் உலகில் உயரமான மலையில் இருந்து கனவு காண வைக்கப்பட்டிருக்கிறார்கள் வெள்ளையும் காவியும் தரித்தவர்கள் சிலர்.

இந்த வெண்ணிற ஆடைக் காரருக்கும் காவித் தரப்பினருக்கும் சில செய்திகளை சர்வதேச நீதிக்காகத் தொடர்ந்து குரல் கொடுத்துவரும் நான் இங்கே தெளிவாக முன்வைக்க விரும்புகிறேன்.

முதலில் தென்னிலங்கை பௌத்த மதபீடங்களுக்கு நான் சொல்ல விரும்பும் செய்தி. ஈழத்தமிழர்கள் நல்லிணக்கத்தை எப்போதும் விரும்பியவர்கள். ஈழத்தமிழர்களின் நல்லிணக்கத்தை சீரழித்து இன அழிப்புச் சிந்தனைக்கு வழிகோலிய மகாவம்ச மனநிலையை நீங்கள் மாற்றினால் ஒழிய உண்மையான நல்லிணக்கம் ஏற்படாது. உண்மையான நல்லிணக்கம் தான் உங்கள் நோக்கம் என்றால் அதை ஆரம்பிக்கவேண்டிய புள்ளிகள் எவை என்று எனது பார்வையில் உங்களுக்கு இரண்டு விடயங்களைச் சொல்லுவேன்.

உங்களுக்கு பௌத்த தந்த தாதுவைப் பேணும் தலதா மாளிகை எவ்வளவு புனிதமானதோ அதைப்போல உண்மையான வித்துடல்களை விதைத்த எமது மாவீரர் துயிலும் இல்லங்கள் எமக்குப் புனிதமானவை. அவற்றைத் துவம்சம் செய்த சிங்கள இராணுவத்தின் மன்னிக்கமுடியாத குற்றத்தை முதலில் போக்குங்கள்.

எமது மாவீரர்களை அவர்களது பதவி நிலைகள் பொறித்த நடுகற்களோடு மீண்டும் துயிலும் இல்லங்களை உடைக்கப்பட்ட கற்களைப் பொறுக்கி எடுத்து முதலில் கட்டுங்கள். அது தான் நீங்கள் நல்லிணக்கத்தை ஆரம்பிக்கவேண்டிய புள்ளி.

மகாவம்ச எடுத்துரைப்பில் கூட தமிழ் அரசனான எல்லாளனை போர்முனையில் இடறிக் கொன்ற துட்டகெமுனு பின்னர் தமிழ் மன்னனை வணங்கச் செய்த நல்லிணக்க வரலாறு இருக்கிறது. அதைக் கூட மீண்டும் செய்ய இயலாதவர்கள் நீங்கள்.

வடக்கு கிழக்கில் வரலாற்று ரீதியான தமிழ்ப் பௌத்த வரலாற்றையும் நிராகரித்து, தேரவாத சிங்கள பௌத்த வரலாற்று அடையாளங்களாக அவற்றை மாற்றும் நாகரிக இன அழிப்புச் செயற்பாடுகள் இன்றும் தொடருகின்றன. இவற்றை நிறுத்தி, எமது வரலாற்றை நாமே பேணும் சமத்துவத்தை உருவாக்குங்கள். இதுதான் உங்களது நல்லிணக்கத்துக்கான ஆரம்பப் புள்ளி.

வெண்ணிற ஆடை அணிந்த சில புலம் பெயர்க் கறுப்பு ஆடுகளோடு கைகோர்த்து எங்களுக்கு நல்லிணக்கப் பாடம் நடத்த நீங்கள் முயல்வது புனிதமற்ற செயற்பாடு.

வெண்ணிற ஆடை அணிந்து மத குருக்களோடும் கோர்ட் சூட்டில் அரசியல்வாதிகளோடும் படம் காட்ட வைக்கப்பட்டுள்ள சில புலம்பெயர் தமிழர்கள் மக்கள் அங்கீகாரமும் ஆணையும் அற்ற வெள்ளையடிக்கப்பட்டுள்ள ஆசாமிகளாகவே எங்கள் கண்ணுக்குத் தெரிகிறார்கள். இவர்கள் நேபால் நாட்டின் நாகர்கோட் நகரில் இந்தவருடம் ஏப்ரல் மாதம் இரகசியமாகக் கூட்டப்பட்டு புரிந்திருப்பது ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரை இமாலயப் பிரகடனம் அல்ல, இமாலயத் தவறு.

எம்மைப் பொறுத்தவரை இது ஒரு பிரகடனமே அல்ல, ஈழத்துத் தமிழ் வழக்கில் இதைப் "பிரட்டுருட்டு" என்றே சொல்லமுடியும். ஆயுதப் போராட்டத்துக்கு முன்னரே திட்டமிட்ட இன அழிப்பு ஆரம்பிக்கப்பட்ட வரலாற்றை இந்தப் பிரட்டுருட்டுப் பிரகடனம் பிரட்டியும் பார்க்கவில்லை.

ஆயுதப் போராட்டம் இன அழிப்புப் போர் ஊடாக அழிக்கப்பட்ட பின்னரும் பண்பாட்டு இன அழிப்பும், கட்டமைக்கப்பட்ட இன அழிப்பும் இன்றுவரை தொடர்வதை அது எடுத்துரைக்கவில்லை.

ஈழத்தமிழர்களுக்கு எதிரான இன அழிப்பின் வரலாறு சொல்லப்படவில்லை. இன அழிப்புக்கு சர்வதேச நீதி ஏன் அவசியம் என்பது சொல்லப்படவில்லை. சுயநிர்ணய உரிமை பற்றி இம்மியளவும் இதில் எதுவும் இல்லை.

நான் ஏற்கனவே குறிப்பிட்ட எமது தேசிய விடுதலைக்கான அடிப்படைகள் அனைத்தையும் அடியோடு உருட்டிப் பிரட்டிப் போடும் நோக்கோடு இது தயாரிக்கப்பட்டிருக்கிறது.

இந்த வெண்ணிற ஆடைக் கூட்டம் ஆட்டுவிக்கப்படும் கூட்டம். ஆட்டுவிப்பவர்கள் யார் என்பதும் அவர்களின் திட்டம் எவ்வளவு ஆபத்தானது என்பதும் போகப் போக மேலும் துல்லியமாகத் தெரியவரும்.

இதற்குப் பின்னால் நீண்ட காலமாக ஈழத்தமிழர்களைக் குறிவைத்து இயங்கி, தமது கஜானாக்களைத் திறந்துவிட்டு, பலவீனமான நம்பிக்கை இழந்த செயற்பாட்டாளர்களை அடையாளம் கண்டு அவர்களை மேசையில் இருத்தி சனநாயகம், வெளிப்படைத் தன்மை, உண்மைத் தேடல், ஒப்புக்கொள்ளல், நல்லிணக்கம் என்ற சொற்களின் உள்ளடக்கத்துக்கு எதிராக இரகசியமாகச் செயற்படும் இந்த அமைப்புகளால் ஏவி விடப்பட்டு அவர்களின் பரிசோதனைக்குப் பலியாகி, வெள்ளை ஆடுகள் போலத் தோற்றமளிக்கும் கறுப்பு ஆடுகள்.

நல்லிணக்கம் என்ற போர்வையில் தமக்கு வர இருக்கும் ஆபத்தை உணராமற் செய்து ஈழத்தமிழர்களைப் "பிராக்காட்ட" இந்தப் பிரகடனம் முயல்கிறது. ஆனால், இது சரிவரப் போவதில்லை. பிராக்காட்ட உருவாக்கப்படும் பிரட்டுருட்டுப் பிரகடனங்கள் ஒருபோதும் எடுபடப் போவதில்லை.

மிகவும் அகலமாகப் பொருள்படுகின்ற, பரந்துபட்ட பொருள் தருகின்ற பொறுப்புக்கூறல், கூட்டு உரிமைகள், அதிகாரப் பங்கீடு, புதிய அரசியலமைப்பு என்பவற்றை ஆங்காங்கே பிரட்டி உருட்டி, அதற்குள் அதுவும் இருக்கிறது இதுவும் இருக்கிறது என்று சொல்லித் தப்பித்துக்கொள்ளும் நோக்கில் தயாரிக்கப்பட்டிருக்கிறது இந்த இமாலயப் பிரட்டுருட்டு.

இதனை எந்த ஒரு வலுவுள்ள புலம்பெயர் ஈழத்தமிழர் அமைப்புகளும் ஏற்றுக்கொள்ளவில்லை. நாளாந்தம் மறுப்பு அறிக்கைகள் கூட்டாகவும் தனித்தனியாகவும் வந்துகொண்டிருக்கின்றன. தங்களுக்குள்ளே ஒற்றுமை இல்லாது சிதறடிக்கப்பட்டிருந்தாலும் புலம் பெயர் சூழலில் இயங்கும் பல அமைப்புகள் இதை மறுத்துவிட்டார்கள். தாயகத்திலும் ஈழத்தமிழர் தேசத்துக்கான அரசியலுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் மக்கள் அமைப்புகளும் அரசியல் பிரதிநிதிகளும் இதை ஏற்றுக்கொள்ளவில்லை.

ஆனால், பிரட்டுருட்டு நாடகம் தொடருகிறது. ஏதோ மாநாடுகளும் கலந்தாலோசனைகளும் செய்வது போன்ற தோரணையில் சந்திப்புகளும், ஊடக அறிக்கைகளும் வெளிவந்துகொண்டிருக்கின்றன.

இதற்கு சில மேற்கு நாடுகளின் தூதரலாயங்களும் வரவேற்பு வெளியிட்டுக்கொண்டிருக்கின்றன. வலிந்து காணமலாக்கப்பட்டோரின் உறவுகளையும் இதற்குப் பயன்படுத்தி இணங்கவைக்க என்ன செய்யலாம் என்று ஆராய்ச்சிகளும் சந்திப்புகளும் நடக்கின்றன.

இது ஒரு புறம் இருக்க, இன்னொரு புறத்தில் இந்திய மத்திய அரசை அல்லது இந்திய இந்துத்துவவாத தரப்புகளை நோக்கி அணிவகுக்கச் செய்யப்பட்டுள்ள சில ஈழத் தமிழ் அரசியல், மத, சிவில் சமூக, கல்விச் சமூக கருத்துருவாக்கிகளும் மக்கள் பிரதிநிதிகளும் இந்த இமாலயப் பிரகடனத்தை மறுதலித்துள்ளார்கள். இதையும் நாங்கள் கூர்மையாக அவதானித்து வருகிறோம்.

இமாலயப் பிரகடனம் அடுத்துக் குறிவைக்கப் போவது தமிழ்நாட்டை. குறிப்பாக தமிழ் நாட்டு அரசை. மறைந்த முதல்வர் செல்வி ஜெயலலிதா அவர்கள் ஈழத்தமிழர்களின் நிலை கண்டு, தனது கடந்த கால நிலைப்பாடுகளில் இருந்து முழுமையான மனமாற்றம் கண்டு முன்வைத்த தீர்மானத்தின் வலுவை தமிழ் நாட்டு அரசியலில் இருந்து அகற்றிவிடவேண்டிய தேவை வெண்ணிற ஆடைகளை இயக்கும் சக்திகளுக்கு ஏற்பட்டுள்ளது. இதற்காக அவர்கள் இயங்கிவருகிறார்கள்.

இப்படியெல்லாம் விரைவில் நடைபெறும் என்பதை முன்கூட்டியே உணர்ந்த நிலையில்தான் கடந்த ஆண்டு மார்ச் மாதத்திலும் ஏப்ரல் மாதத்திலும் தமிழ்நாட்டில் நீண்டகாலம் ஈழத்தமிழர் அரசியல் விடுதலைக்காகக் குரல் கொடுத்தவர்களை இணைத்து அவர்களுக்குச் சில அடிப்படைகளை மீண்டும் தெளிவாக வலியுறுத்துமாறு வேண்டிக்கொண்டேன். இதற்கான பயணத்தை மேற்கொண்டு தமிழ்நாட்டில் வேண்டிய கதவுகளைத் தட்டினேன். இறுதியில் தெளிவான தீர்மானங்களும் அங்கே வெளியிடப்பட்டன. அவற்றை மீண்டும் ஒருமுறை ஈழத்தமிழர்கள் அனைவரும் மீண்டும் வாசித்து அசை போட்டுப் பார்த்தால் உண்மை புரியும். அந்தத் தீர்மானங்களை மறுதலிக்கச் செய்யும் நோக்கத்தோடு தான் தற்போது இமாலயத் தீர்மானம் முன்வைக்கப்படுகிறது.

தமிழ்நாட்டின் ஆளும் தரப்பு ஈழத்தமிழரின் நீதிப் பயணத்துக்கும் விடுதலைக்கும் குரல்கொடுக்காமல் மாற்றப்பட்டு இலங்கை அரசுக்கும் வெளிச் சக்திகளுக்கும் ஏற்ற வகையில் கையாளப்படும் நோக்கில் எரிக் சொல்கைம் இயங்கி வருகிறார். அவர் தமிழ் நாட்டிலும் ஆலோசகர், இங்கே ரணிலுக்கும் ஆலோசகர். சீனாவிடமும் அவர் சம்பளம் வாங்குகிறார். இந்தியாவிலும் இயங்குகிறார். இவருக்குச் சமாந்தரமாக மறைமுகப் பேச்சுவார்த்தைகள் என்ற போர்வையில் சில மேற்கு நாடுகளின் நலனுக்காக இயங்கும் அமைப்புகளும் அதேபோன்ற வேலைத் திட்டத்தில் நீண்டகாலமாகச் செயற்படுகின்றன. இவர்கள் அனைவரும் குறிவைப்பது வடக்கு கிழக்கை மட்டுமல்ல, தமிழ் நாட்டையும் கூட. இதற்காகவே புலம் பெயர் சூழலில் தனித்துப் போயுள்ள சில ஆடுகள் பலியிடப்படுகின்றன.

தமிழ்நாட்டில் பல குழப்பங்கள் இருந்தாலும் கடந்த வருடம் எடுத்துக்கொண்ட முயற்சியால் பெரும்பாலனவர்கள் ஒரே மேடையில் சந்திக்கச் செய்து பல தரப்புகளின் பொது இணக்கப்பாட்டுடன் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இதேபோல புலம் பெயர் தரப்புகளும் பொதுவாக ஒரு மேடையில் இணைந்து தீர்மானங்களை இனியாவது வெளியிடவேண்டும். அடக்குமுறைக்கும் ஆக்கிரமிப்புக்கும் உள்ளாகி, கருத்துச் சுதந்திரம் மறுக்கப்பட்டுள்ள தாயகத்திலும் இவ்வாறு ஒரே மேடையில் தமிழ்த் தேசியத் தரப்புகள் அனைத்தும் ஒன்றிணைந்து தீர்மானங்களை இயற்ற வேண்டும். ஆனால், அந்தச் சிந்தனையை இங்குள்ள சில அரசியல் கட்சிகள் கொன்று தின்றுவிட்டன. உருவாக்கப்பட்ட தமிழ் மக்கள் பேரவையும் முடக்கப்பட்டுவிட்டது. இருந்தாலும் மீண்டும் முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

2015 ஆம் ஆண்டு மக்களாணை பெற்ற வடமாகாண சபையில் இன அழிப்புக்குச் சர்வதேச விசாரணை வலியுறுத்தப்பட்டு ஏகோபித்த ஆதரவுடன் தீர்மானம் வெளியிடப்பட்டது என்பது முக்கியமான ஒரு விடயம். இதைப் போலப் பெரும் நெருக்கடிகள் இருந்த காலத்தில் தான் அதுவும் நடந்தது என்பதை நாங்கள் நினைத்துப் பார்க்கவேண்டும். ஆகவே, மீண்டும் தேர்தல் அரசியலுக்கு அப்பாற்பட்டு ஒரு தளத்தில் அனைவரும் கூடி ஈழத்தமிழர் நிலைப்பாட்டை வலியுறுத்தவேண்டும். தகுந்த மக்கள் தரப்பு இதை முன்வந்து முன்னெடுத்தால், மீண்டும் தெளிவாக ஒரு செய்தியை உலகுக்கு உரைக்கமுடியும்.

ஆனால், அவ்வாறு முன்னெடுக்கும் தரப்பு ஒரு போதும் குறிப்பிட்ட எந்த ஒரு வெளிநாட்டின் நிகழ்ச்சிநிரலுக்குள் மட்டும் இயங்கக் கூடாது. இந்தியா மட்டுமே எமக்குத் தேவை என்றோ, மேற்கு நாடுகள் தான் எமக்கு நீதி தரும் என்றோ தனித்தனி வழிகளில் போலி நம்பிக்கைகளோடு இயங்கக்கூடாது. அதேவேளை, தனித்தனி வழிகளில் இயங்கும் அனைத்துத் தரப்புகளும் ஈழத்தமிழர் தேசிய விடுதலைக்காக ஒரு மேடையில் அடிப்படைகளை வலியுறுத்துவதற்காகவேனும் ஒன்று கூடி எமது நிலைப்பாடுகளை வலியுறுத்தவேண்டும்.

விரைவாக மாறிவரும் உலக சூழலில் திறக்கப்படக் கூடிய புதிய கதவுகளைத் திறக்கும் வகையில் சுயாதீனமாக ஈழத்தமிழர் தரப்புக்குரிய மக்கள் சக்தி திரட்டப்படவேண்டும்.

எனது கடமையாக சர்வதேச நீதியே பொறுப்புக்கூறலின் முக்கிய நகர்வு என்பதை 2013 ஆம் ஆண்டில் இருந்து ஒவ்வொரு முறையும் ஜெனீவாவில் நடைபெறும் கூட்டத் தொடர்களில் பங்கேற்று இன அழிப்புக்கான நீதியை வலியுறுத்திவந்துள்ளேன்.

இவ்வருடம் கூட இறுதியாக நடைபெற்ற அமர்விலும் நேரடியாகக் கலந்துகொண்டு அதையே வலியுறுத்தினேன்.

அதுமட்டுமல்ல, இன அழிப்புப் போரில் இலங்கை அரசுக்கு முட்டுக்கொடுத்த சர்வதேச தரப்புகள் இன அழிப்புக்கான சர்வதேச விசாரணையை முன்னெடுக்காது இலங்கை அரசுக்குக் கால நீடிப்பைத் தொடர்ந்துவருவதால் தொடர்ந்தும் ஈழத்தமிழர் மீது சர்வதேச அநீதியே கட்டவிழ்த்துவிடப்பட்டிருக்கிறது என்பதை மக்கள் தீர்ப்பாயம் தனது தீர்ப்பாக ஜேர்மனியில் வழங்கியிருந்தது. அந்த வரலாற்று முக்கியத்துவமான நிகழ்வில் கலந்துகொண்டு, அங்கு வெளியான தீர்ப்பையும் மனித உரிமைப் பேரவையில் எடுத்துரைத்தேன்.

(தொடர்ச்சி _10_ பக்கம்)

இலங்கை செய்திகள் Sri Lanka News

# வடக்கு மாகாண அதிபர், ஆசிரியர் இடமாற்றங்களில் பாரபட்சம் இடம்பெற அனுமதிக்க முடியாது – கௌரவ ஆளுநர், ஆசிரியர் – அதிபர் சங்கங்களுக்கு அறிவிப்பு

பு. கஜிந்தன்

வடக்கு மாகாணத்தில் காணப்படும் ஆசிரியர் பற்றாக்குறை, இடமாற்றங்கள் வழங்கப்படாமை, அதிபர் நியமனங்கள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் இலங்கை ஆசிரியர் சங்கம் மற்றும் வட மாகாண கடமை நிறைவேற்று அதிபர்கள் சங்கம் ஆகியவற்றின் உறுப்பினர்கள், வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் அவர்களை தனித்தனியாக சந்தித்து கோரிக்கைகளை சமர்பித்தனர். இதன்போது வடக்கு மாகாண கல்விச் செயலாளர் பெற்றிக் நிரஞ்சனும் சமூகமளித்திருந்தார். யாழ்ப்பாணத்திலுள்ள வடக்கு மாகாண கௌரவ ஆளுநரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் 15.12.2023 அன்று அன்றுமுற்பகல் இந்த சந்திப்புகள் இடம்பெற்றன.

புதிய அதிபர் நியமனத்தால், இதுவரை பதில் கடமை ஆற்றியவர்கள் பாதிப்புக்குள்ளகியுள்ளதாகவும், கடினமான காலப்பகுதியில் பாடசாலை சமூகத்தை கட்டியெழுப்ப பாரிய முயற்சிகளை மேற்கொண்டதாகவும் வட மாகாண கடமை நிறைவேற்று அதிபர்கள் சங்கம், கௌரவ ஆளுநரிடம் தெரிவித்தனர். போட்டிப் பரீட்சையூடாக தெரிவு செய்யப்பட்ட அதிபர்களுக்கான நியமன கடிதங்கள் வழங்கப்பட்டுள்ள நிலையில், அடுத்த வாரம் அவர்கள் கடமைகளை பொறுப்பேற்கவுள்ளனர். இதனால் பல வருடங்களாக பதில் கடமை புரிந்த அதிபர்கள், உள ரீதியாகவும், சமூக ரீதியாகவும் பாதிக்கப்படுவதாக அவர்கள் கூறினர். இந்நிலையில் ஏனைய மாகாணங்களில் நிலவும் அதிபர் வெற்றிடங்களுக்கு தங்களை நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறும் வட மாகாண கடமை நிறைவேற்று அதிபர்கள் சங்கத்தினர் கோரிக்கை முன்வைத்தனர்.

விடயங்களை கேட்டறிந்த வடக்கு மாகாண கௌரவ ஆளுநர், கோரிக்கைகளை பரிசீலிப்பதாகவும், தேவை ஏற்படின் ஜனாதிபதியின் கவனத்திற்கும் விடயங்களை கொண்டு செல்வதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை, வடக்கு மாகாணத்தில் உயர்தர வகுப்புகளுக்கான ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுவதாகவும், சில ஆசிரியர்களின் இடமாற்றங்களில் சிக்கல் காணப்படுவதாகவும் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உறுப்பினர்கள் கௌரவ ஆளுநரிடம் தெரிவித்தனர். அத்துடன் பாடசாலைகளில் காணப்படும் அபாயகரமான கட்டடங்கள் தொடர்பில் முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள், மாணவர்களுக்கான போசாக்கு திட்டம், தொண்டர் ஆசிரியர் நியமனம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் கௌரவ ஆளுநரால் மேற்கொள்ளப்பட்டுள்ள திட்டங்கள் குறித்து இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உறுப்பினர்கள் கேள்வி எழுப்பினர்.



பாடசாலைகளில் காணப்படும் அபாயகரமான கட்டடங்கள் தொடர்பில் தரவுகள் சேகரிக்கப்படுவதாகவும், ஒரு சில கட்டடங்களுக்கு சீல் வைக்கப்பட்டுள்ளதாகவும் இதன்போது வடக்கு மாகாண கல்விச் செயலாளர் பெற்றிக் நிரஞ்சன் தெரிவித்தார். மாகாணத்தில் உள்ள உயர்தர வகுப்புகளுக்கான ஆசிரியர்கள் தவிர, ஏனைய ஆசிரியர்களின் எண்ணிக்கை மேலதிகமாகவே காணப்படுவதாகவும், கௌரவ ஆளுநரின் பணிப்புரைக்கு அமைய, இடமாற்றக் கொள்கை அமுல்படுத்தப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

ஆசிரியர் இடமாற்றத்தில் எவ்வித பாரபட்சமும் தேவையில்லை எனவும், இடமாற்றக் கொள்கை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் இதன்போது கௌரவ ஆளுநர் தெரிவித்தார். இந்த விடயம் குறித்து கல்வித்துறைசார் அதிகாரிகளுக்கு அறிவிக்குமாறும், வழங்கப்படும் பணிப்புரைகளை செயற்படுத்தாத அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறும், மாகாண கல்விச் செயலாளருக்கு, வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் அறிவித்தார்.

அத்துடன் மாணவர்களுக்கான போசாக்கு திட்ட முன்மொழிவுகள் மத்திய கல்வி அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும், அனுமதி கிடைத்த உடன் அந்த திட்டங்கள் அமுல்படுத்தப்படும் எனவும் அவர் கூறினார். அத்துடன் சில பிரச்னைகள் நீண்ட நாட்களாக தீர்க்கப்படாமல் இருப்பதால் விரைவில் தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் இதன்போது தெரிவித்தார்.




# யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற ஒளிவிழா!

யாழ்ப்பாண மாவட்டச் செயலக நலன்புரிச் சங்கத்தின் எற்பாட்டில் கிறிஸ்து பிறப்பின் ஒளிவிழா யாழ்ப்பாண மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில், யாழ்ப்பாண மாவட்டச் செயலக நலன்புரிச் சங்கத்தலைவர் இ. சுரேந்திரன் தலைமையில் நடை பெற்றது.

இவ்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் அ.சிவபாலசுந்தரன் கலந்து கொண்டதுடன், கிறிஸ்து பிறப்பின் மகிமையில் நாம் எதனை பின்பற்றுகின்றோம் என்பதனைப்பற்றி உரையாற்றினார்.

இதன்போது கிறிஸ்து பிறப்பு வாழ்த்துச் செய்தி, கிறிஸ்மஸ் தாத்தாவின் ஆடல் பாடல், சிறார்களின் ஆடல்பாடல்கள் என்பன இடம்பெற்றன.

யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க மேலதிக அரசாங்க அதிபர் ம. பிரதீபன், யாழ்ப்பாண மாவட்ட செயலக உள்ளக கணக்காய்வாளர் ம. கமலரூபன், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் என பலரும் இதில் கலந்துகொண்டனர்.






MORTGAGE

⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)

⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC)

⇒ ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்

⇒ Private Mortgage (No Income Verification)

⇒ 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)

⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்

⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட

⇒ எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC
www.mortgageclinicanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011

RIGHT AT HOME REALTY INC.

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage & Real Estate Broker

Cell : 416-624-4843

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3
Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

(8 பக்கத் தொடர்ச்சி)

## இமாலயப் பிரகடனம் அல்ல : இமாலயப் பிரட்டுருட்டு : ஈழத்தமிழர் தேசிய அடிப்படைகளுக்கு எதிரான அரசியல் இரண்டகம் — அனந்தி சீற்றம்!

இவ்வாறு, எமது நீதிக்கான பயணம் தொடருகிறது. சர்வதேச நீதியை வலியுறுத்தி, தாமதிக்கப்படுகின்ற, மறுக்கப்படுகின்ற நீதியை வென்றெடுக்க ஒரு புறம் நாங்கள் பயணித்துக்கொண்டிருக்கும் போது, ஒருசில புலம்பெயர்ந்த கறுப்பு ஆடுகள் மறு புறத்தில் இமாலயத் தவறான பிரட்டுருட்டுப் பிரகடனத்தோடு பிரவேசித்திருக்கிறார்கள்.

மகிந்த ராஜபக்சவின் காலத்திலும் இவ்வாறு சிலர் இங்கு வந்துபோனதும், விடுதலைப் புலிகளின் முன்னாள் முக்கியஸ்தரான கே.பி. என்பவர் ஊடாக இவ்வாறான சந்திப்புகள் முன்னெடுக்கப்பட்டதும் காற்றோடு கரைந்து போன கதையாகிவிட்டது.

இதைப் போல, இதே வெண்ணிற ஆடை ஆசாமிகள் 2013 ஆம் ஆண்டில் சிங்கப்பூரில் சிறிசேன ஆட்சிக்கு வந்தபோது போட்ட தீர்மானத்துக்கு என்ன ஆனது என்பதும் மக்களுக்கு நன்கு தெரியும். இதையே இமாலயப் பிரகடனத்துக்கும் இதே கதிதான் ஏற்படும்.

2015 ஆம் ஆண்டு வடமாகாண சபையில் இன அழிப்புக்கான சர்வதேச விசாரணை கோரி தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது சிங்கப்பூர் கோட்பாட்டுக் காரருக்கு பெரிய சிக்கலை உருவாக்கியது. இதனால் வடமாகாண முதலமைச்சரை பதவியில் இருந்து இறக்கும் சதியை ஐரோப்பாவில் இருந்து ஆதரித்து சில வேலைத் திட்டங்கள் நடைபெற்றன. ஆனால், இவற்றையெல்லாம் சரிவரப் புரியாதவராகவே முதலமைச்சர் காணப்பட்டார். புரியாத போதும் அவர் சரியாகச் செயற்பட்டார் என்பதால் அவரை விழவிடாது காப்பாற்றினோம். வடமாகாண சபையில் அவருக்கு அடுத்ததாக பெருமளவு வாக்குகளோடு தெரிவாகியிருந்த எனக்கு, எந்த அமைச்சுப் பொறுப்பும் தராமல் அவர் அமைச்சரவையை ஆரம்பத்தில் அமைத்திருந்தார். பின்னர் சிக்கல் உருவாகிய பின்னரே இறுதியில் அமைச்சுப் பொறுப்பைத் தந்திருந்தார். இப்படி பலவிதமான விடயங்களைத் தாண்டியே நாங்கள் நீதிக்காக, பொறுமையோடும் பொறுப்போடும் பயணித்து வருகிறோம்.

இப்போது மாகாண சபை கலைக்கப்பட்டிருந்தாலும். மாகாண சபையில் கடமையாற்றி இறுதியில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களைக் கூட ஒன்றாகக் கூட்டி சில செய்திகளை உலகுக்குச் சொல்லலாம். செய்வார்களா என்ற கேள்வியை இங்கு முன்வைக்கிறேன்.

நல்லிணக்கம் என்ற போர்வையில், நாமும் குற்றம் இழைத்தோம் என்று நாமே ஒத்துக்கொண்டு எமது வரலாற்றை மறந்துவிடவேண்டும் மறுதலிக்கவேண்டும் என்ற சிந்தனையோடு உண்மை உரைக்கும் ஆணையம் என்ற நாடகத்தை ஆடி, சர்வதேச நீதியை மறுதலித்து, இலங்கைக்குள் அதை முடக்கும் இமாலயச் சதியை நாம் அனைவரும் ஒன்றிணைந்து முறியடிக்கவேண்டும். இதையே ரணிலும் அவருக்குப் பின்னால் இருக்கும் மிலிந்த மொராகொடயும் பேச்சுவார்த்தைக் காலத்தில் இருந்து முன்னெடுக்கிறார்கள்.

இதைப் புரிந்துகொண்டு, இவற்றை எமது விடுதலை அரசியலால் இந்தப் போலி நாடகங்களை நாம் மறுதலிக்கவேண்டும்.

மேற்கு நாடுகளில் இருந்து இந்த நடவடிக்கைகளைச் சில நிறுவனங்கள் முன்னெடுக்கின்ஜறன. இலங்கை அரசை ஏற்றுக்கொள்ளும் மனநிலையில் ஈழத்தமிழர்கள் இருப்பது போல அறிகுறிகளைக் காட்டி சர்வதேச நீதியை முடக்கும் வேலைத் திட்டத்திற்கு நாம் பலியாகத் தயாராக இல்லை என்ற செய்தி உரப்பாகவும் எந்தவித ஐயத்துக்கும் இடமளிக்காத வகையிலும் அப்பட்டமாக உலகத்துக்குச் சொல்லப்படவேண்டும். இது செய்யப்படாவிட்டால் மேலும் பல பிரட்டுகள் எதிர்வருகின்ற கிழமைகளிலும் மாதங்களிலும் நடைபெற வாய்ப்பிருக்கிறது.

இந்த வெளிநாட்டு தன்னார்வ நிறுவனங்களின் முன்னெடுப்புகளோடு தமது கஜானாவை நிரப்பலாம் என்று 2015 ஆம் ஆண்டில் நிலைமாறுகால நீதி பேசப் புறப்பட்ட தன்னார்வ நிறுவனங்களும் மனித உரிமை என்ற போர்வையில் இயங்கிய சில நிறுவனங்களும் தனிநபர்களும் எவ்வாறு அணிவகுத்தார்களோ, அதைப்போல மீண்டும் ஓர் அணிவகுப்பை உருவாக்க மீண்டும் முயற்சி நடைபெறுகிறது. இவர்களில் பலரை இன்று காணவும் கிடைக்கவில்லை.

ஆகவே, ஒரே தளத்தில் ஒன்றிணைந்து பலமாக இதற்குப் பதில் சொல்ல வேண்டிய பொறுப்பு ஐரோப்பாவில் இருக்கும் புலம் பெயர் ஈழத்தமிழர்களுக்கும், தாயகத்தில் உள்ள மக்களால் தெரிவுசெய்யப்பட்ட ஈழத்தமிழர் தரப்புகளுக்கும் உள்ளது. அப்போது தான் இந்த மாயைகளுக்கு முற்றுப் புள்ளி இட முடியும்.

தமிழ்நாட்டில் தீர்மானத்தை நிறைவேற்ற ஒரு மேடையில் தோன்றியவர்களுக்கும் அதன் தொடர்ச்சியைப் புரிந்து செயற்படவேண்டிய கடமை இருக்கிறது. ஒவ்வொரு முறையும் நாம் பிச்சை கேட்டு கதவைத் தட்டி அலையவேண்டிய அவல நிலையை எமக்கு தமிழ்நாட்டில் இருக்கும் உறவுகள் ஏற்படுத்தக்கூடாது.

மாகாண சபைத் தேர்தலில் பெருந்தொகையான மக்களின் வாக்குகளோடு தெரிவாகிய மக்கள் ஆணையோடு நான் தொடர்ந்தும் நீதிக்கான செயற்பாட்டில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறேன். ஒன்றித்து ஒரே தளத்தில் ஈழத்தமிழர் மக்களாணை பெற்ற பிரதிநிதிகள் கூடி உலகுக்கு எடுத்துச்சொல்லவேண்டியதைத் தெளிவாக முன்வைக்க நான் முழுமையாகத் தயாராக இருக்கிறேன். ஈழத்தமிழர் தேசிய விடுதலை பற்றியும் அரசியல் விடுதலை பற்றியும் பேசும் ஏனையவர்கள் இதயசுத்தியுடன் அடிப்படைகளை இணைந்து வலியுறுத்தத் தயாராக உள்ளார்களா என்ற கேள்வியை முன்வைக்கிறேன் என்றுள்ளது.

TRADITIONAL CHINESE
ACUPUNCTURE THERAPY

எல்லாவிமான வலிகளுக்கும் — All Pain & Aches, Arthritis
ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை — Asthma, Sinusitis, Rhinitis Allergies
மனத்தளர்ச்சி, தலைவலி — Stress, Migraine & All Types of Headaches
நீரிழிவு நோய், வயிற்றுவலி — Diabetes, Gastric Pain, Ulcer
மாதவிடதய் சம்மந்தமானவையும் — Menstruation
உடற்பருமன் குறைத்தல் — Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
Acupuncturist (R.A.C)
தொடர்புகொள்ளவும்.
(416) 754-4024
5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5



HIGH SKY CANADA
- Visitor visas, Study visas, and Work Visas Applications
- Convert to WORK PERMIT from other status (Visitor)
- PR and Citizenship Application
- IELTS/ CELPIP/ CAEL Preparation
- Traffic Tickets and Pardon
- Tutoring for Students- ALL SUBJECTS, including TAMIL

CONTACT NOW!

Phone number/WhatsApp:
+1 (437) 365-5668
Email: highskycanada@gmail.com

சுவாமியே சரணம் ஐயப்பா

# விஷ்ணு மந்திரில் நெய் நிரப்பு விழா

## VISHNU MADIR

8640 Yonge St., Richmond Hill, Ontario
(YONGE ST. AT HWY.7)



பக்திப்பரவசமான
பூஜைகளுடன்
அறுசுவை
உணவுகளும்
வழங்கப்படும்.

சரணம் ஐயப்பா

சகல மக்களையும் காத்தருளும் கலியுகவரதன் சுவாமி ஐயப்பனுக்கு நெய் நிரப்பும் விழா
வரும் DECEMBER 25ம் திகதி காலை 9.30 மணிமுதல் 12 மணிவரை நடைபெறவுள்ளது.
அத்தருணம் விரதம் இருக்கும் பக்தர்களுடன் ஐயப்ப அருள் வேண்டும் பக்தர்கள்
அனைவரையும் வந்து தங்கள் கையால் நெய் நிரப்பிஅருள் பெற அழைக்கின்றோம்.
பக்தர்கள் இடும் காணிக்கை சபரிமலைக்கு நிச்சயம் சென்றடையும் என்பதை
உறுதியாக தெரிவித்துக் கொள்கிறோம்.

**நெய் நிரப்பும் சாமிமாரிடம் எவ்வித கட்டணமும் அறிவிடப்படமாட்டாது.**

பூஜை முடிந்தவுடன் அன்னதானம் வழங்கப்படும்

உபயம் செய்ய விரும்பும் பக்தர்கள் கீழ்கண்ட தொலைபேசி இலக்கத்திற்கு
தொடர்பு கொள்ளவும்.

**The Nilagiris Inc:**
416-412-0024, 905-794-7444.

**Anjappar chettinad Restaurant :**

**Sponsors:**
**The Nilgiris Inc**
**Anjappar Chettinad Restaurant**
**EZHILMARAN-GEETHA FAMILY**

For more information please contact:
மேலதிக விபரங்களுக்கு:
**Vishnu Mandir at 905.886.1724 or**
**Venkatadri or Saraswathy Seshadri at**
**905.943.9323**

# இமாலயப் பிரகடனம்: புலம்பெயர்ந்த தமிழர் அமைப்பு ஒன்றின் தனியோட்டம்?

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**



அண்மையில் வடமராட்சி கட்டை வேலி பகுதியில் ஒரு மக்கள் சந்திப்பு இடம் பெற்றது. அங்குள்ள ஒரு புரடஸ்தாந்துத் திருச்சபையின் வளாகத்தில் ஒரு கிறிஸ்தவ அமைப்பினால் அச்சந்திப்பு ஒழுங்கு செய்யப்பட்டது. அந்த சந்திப்பில் பெருமளவுக்கு பெண்களை பங்குபற்றினார்கள். குறிப்பாக குடும்பப் பெண்கள் பல்வேறு வயதினரும் அங்கே காணப்பட்டார்கள். ஒரேயொரு ஆண் மட்டும். எல்லாருமே கீழ் நடத்தர வகுப்பைச் சேர்ந்தவர்கள்.

சமகால நிலைமைகள், பொருளாதார நெருக்கடிகள் தொடர்பாக விழிப்பூட்டும் அச் சந்திப்பில் கலந்து கொண்ட பெண்கள் தெரிவித்த தகவல்களைத் திரட்டிப் பார்த்தால், பொருளாதார நெருக்கடிக்கு பின்னரான கடந்த சுமார் மூன்று ஆண்டுகளிலும் அவர்களுக்கு பெரிய அளவில் உதவிகள் எதையும் கிடைக்கவில்லை. அது பெருமளவுக்கு அன்றாடம் உழைப்பவர்களின் கிராமம். தமது ஆண்களுக்கு வேலைகள் கிடைப்பதில்லை என்று அவர்கள் சொன்னார்கள். பொருட்களின் விலை அதிகரித்து செல்கிறது, அதிகரித்த விலைகள் பெரும்பாலும் இறங்கவில்லை, இறங்கிய விலைகளும் கூட ஏழைகளால் நுகர முடியாத ஒரு மட்டத்திலேயே காணப்படுகின்றன, என்றும் அவர்கள் சொன்னார்கள்.

கடந்த மூன்று ஆண்டுகாலப் பகுதிக்குள் அவர்களுக்கு பெரிய அளவில் நிவாரணங்கள் கிடைக்கவில்லை. மெதடிஸ்ட் திருச்சபை 5000 ரூபாய் வழங்கியிருக்கிறது. 3 ஆண்டுகளுக்குள் ஒரே ஒரு தடவை 5000 ரூபாய். புலம்பெயர்ந்த தமிழர்கள் தமது உறவினருக்கூடாக சிறிய உதவிகளை செய்திருக்கிறார்கள். தவிர சமுர்த்திக் கொடுப்பனவு. இவ்வளவுதான் அவர்களுக்கு கிடைத்த உதவிகள். எந்த அரசியல்வாதிகளுக்கு அவர்கள் வாக்களித்தார்களோ, அவர்களில் யாருமே அவர்களை வந்து சந்திக்கவில்லை. அரசியல்வாதிகள் தங்களைத் தேடி வந்து நிவாரணம் வழங்கவிட்டாலும், தங்களை சந்தித்து ஆறுதல்கூடக் கூறவில்லை என்றும் அவர்கள் குறைபாட்டார்கள்.

இதுதான் தாயகத்தில் உள்ள பெரும்பாலான நிதி ரீதியாக பின்தங்கிய கிராமங்களின் நிலை. ஒரு திருச்சபையின் சிறிய தொகை பணம். அரசாங்கத்தின் சமுர்த்திக் கொடுப்பனவு. என்பவற்றைத் தவிர சிறிய அளவில் புலம் பெயர்ந்த தமிழர்களின் உதவிகள் அவர்களுக்கு கிடைத்திருக்கின்றன.

இது போன்ற கிராமங்களுக்கு உதவி செய்வதற்கு உரிய கட்டமைப்புகள் புலம்பெயர்ந்த தமிழர்களிடம் உண்டா? இதுபோன்ற கிராமங்கள் தொடர்பான புள்ளி விவரம் உண்டா?

இல்லை. யாரிடமும் ஒரு மையத்தில் திரட்டப்பட்ட புள்ளி விபரங்கள் இல்லை. ஏன் அதிகம் போவான்? நாட்டில் உள்ள கட்சிகளிடமே ஒரு மையத்தில் திரட்டப்பட்ட புள்ளி விபரங்கள் கிடையாது. ஒவ்வொரு கட்சியும் ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினரும் தனித்தனியாக புள்ளி விபரங்களைத் திரட்டி வைத்திருக்கிறார்கள். இந்நிலையில் புலம்பெயர்ந்த தமிழர்களிடம் எப்படி அப்படி எதிர்பார்ப்பது?

இதுதான் பிரச்சினை. கடந்த மூன்று ஆண்டுகால பொருளாதார நெருக்கடிக்குள் அதனால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்குப் பொருத்தமான உதவிகள், பொருத்தமான நேரத்தில், பொருத்தமான விதங்களில் கிடைத்திருக்கவில்லை. ஒருபுறம் புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகம் இசை நிகழ்ச்சிகளுக்கும் கொண்டாட்டங்களுக்கும் கோடிக்கணக்கான பணத்தைச் செலவழிக்கின்றது. இன்னொருபுறம் தாயகத்தில் கடந்த மூன்று ஆண்டுகளாக பொருளாதார நெருக்கடியின் கீழ் அவதிப்படும் மக்கள்.

புலம்பெயர்ந்த தமிழர்கள் தனிப்பட்ட முறையிலும் தன்னார்வ நிறுவனங்களை உருவாக்கியும் கட்சிகளுக்கு ஊடாகவும் உதவிகளை செய்கின்றார்கள். தாயகத்தில் உருவாக்கப்பட்டிருக்கும் பல தென்னார்வ நிறுவனங்களின் பின்னணியில் புலம்பெயர்ந்த தமிழர்களே உண்டு. ஆனால் அவை ஒரு மையத்தில் இருந்து திட்டமிடப்படாத உதவிகள். சில சமயம் ஒரு நிறுவனம் உதவி புரிந்த பயனாளிகளுக்கு இன்னொரு நிறுவனமும் உதவி புரியும். சில சமயம் ஒரு தொகுதி பயனாளிகளுக்கு யாருமே உதவி செய்திருக்க மாட்டார்கள். ஏனென்றால் ஒரு மையத்திலிருந்து உதவிகள் திட்டமிடப்படுவதில்லை. அதாவது தேசத்தை நிர்மாணிப்பது என்ற அடிப்படையில் ஒருங்கிணைக்கப்படாத உதவிகள்.

இவ்வாறு, அவரவர் அவரவர் போக்கில் உதவிகளை செய்தால் என்ன நடக்கும் என்பதற்கு கோவிட்-19 காலம் ஒரு சிறந்த உதாரணம். அக்காலகட்டத்தில் தாயகத்தை நோக்கி புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் பெருமளவு உதவிகளை வழங்கினார்கள். ஆனால் இந்த உதவிகள் ஒரு மையத்தில் இருந்து கொடுக்கப்படவில்லை. யாருக்கு உதவி தேவை என்பதும் ஒரு மையத்தில் இருந்து திரட்டப்பட்ட புள்ளி விபரங்களின் அடிப்படையில் தீர்மானிக்கப்படவில்லை. இதனால் பல குடும்பங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட தடவை உதவிகளைப் பெற்றன அது மட்டுமல்ல அவ்வாறு பெற்ற உதவிகளை முறையாக சேமிக்கத் தவறியதால் பல வீடுகளில் உலர் உணவுகள் பழுதடைந்தன.

ஒரு புறம் தேவைகளோடு காத்திருக்கும் தாயகம். இன்னொரு புறம் பொருத்தமான ஒருங்கிணைந்த நிகழ்ச்சி திட்டங்கள் இல்லாத புலம் பெயர்ந்த தமிழ் அமைப்புகள். தாயகத்தில் உள்ள கட்சிகளைப் போலவே புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகளுக்கு இடையே ஒற்றுமை இல்லை. இது ஒரு பொதுவான தமிழ் வருத்தம். இந்த வருத்தத்தின் ஆகப்பிந்திய நோய்க்கூறான ஒரு வெளிப்பாடுதான் அண்மையில் வெளிவந்த இமாலயப் பிரகடனம்.

அமெரிக்காவை மையமாகக் கொண்டு இயங்கும் உலகத் தமிழர் பேரவை என்ற அமைப்பு பௌத்த பிக்குகள் சிலரோடு இணைந்து அந்த பிரகடனத்தை தயாரித்திருக்கிறது. அதுதொடர்பில் அவர்கள் ஏனைய புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகளோடு உரையாடியிருக்கவில்லை என்று தெரிகிறது. ரணில் விக்கிரமசிங்க ஆட்சிக்கு வந்தால் தமிழ் மக்களைப் பிரித்துக் கையாள்வார் என்ற ஒரு கருத்து உண்டு. இமாலய பிரகடனத்திலும் அதுதான் நடந்திருக்கிறதா?

உலகத் தமிழர் பேரவை என்பது ஒரு பெரிய பிரம்மாண்டமான அமைப்பு இல்லை என்றும், மிகச் சிலர்தான் அதில் உள்ளார்கள் என்றும் கூறப்படுகிறது. அமெரிக்காவில் உள்ள வேறு சில புலம்பெயர்ந்த தமிழர் அமைப்புகள் தமது அமைப்புகளில் உறுப்பினர்களாக உள்ள உலகத்தமிழர் பேரவையைச் சேர்ந்த ஒருவரை கடந்த வாரம் தமது அமைப்புகளில் இருந்து நீக்கியிருக்கிறார்கள். தங்களை கலந்தாலோசிக்காமல் அவர் செயல்பட்டதாக குற்றம் காட்டுகிறார்கள்.

இது தனிய உலகத் தமிழர் பேரவை சம்பந்தப்பட்ட விடயம் மட்டுமல்ல. எல்லா புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகளோடும் சம்பந்தப்பட்ட ஒரு விடயம். தாயகத்தின் தலைவிதியோடு விளையாடும் ஒரு விடயம். ஒருபுறம் கனடாவில் புலம்பெயர்ந்த தமிழர் அமைப்புகள் இனப்படுகொலைக்கு எதிரான பரிகார நீதியை கேட்டு கடுமையாக உழைத்து வருகின்றன. அந்த விடயத்தில் கனேடிய புலம்பெயர்ந்த தமிழ் சமூகம் கணிசமான அளவுக்கு முன்னேறியிருக்கிறது. குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய வெற்றிகளை பெற்று இருக்கிறது. புலம் பெயர்ந்த தமிழ் சமூகங்கள் மத்தியில் இனப்படுகொலைக்கு எதிரான நீதியைக் கோரும் விடையத்தில் மிகத் துலக்கமான அடைவுகளை பெற்றிருப்பது கனேடியத் தமிழ்ச் சமூகம்தான். ஆனால் தமது நடவடிக்கைகளை உலகத் தமிழர் பேரவையின் மேற்படி இமாலய பிரகடனம் பின்னடைய வைத்துள்ளது என்று கனடாவில் உள்ள செயற்பாட்டாளர்கள் கவலைப்படுகிறார்கள். ஆத்திரப்படுகிறார்கள். அதே கருத்துத்தான் ஐரோப்பாவில் உள்ள புலம் பெயர்ந்த தமிழர் அமைப்புக்கள் மத்தியிலும் காணப்படுகிறது.

2009க்கு முன்பு புலம் பெயர்ந்த தமிழ் அமைப்புக்கள் பெரும்பாலானவற்றை விடுதலைப் புலிகள் இயக்கம் ஒருங்கிணைத்து. போரும் போரின் அழிவுகளும் ஒருங்கிணைந்தன. ஆனால் 2009க்கு பின் எல்லாமே சிதறிப் போய்விட்டன. தாயகத்தைப் போலவே புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியிலும் தனித்தனி ஓட்டங்கள். தாயகத்தைப் போலவே புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியிலும் ஐக்கியம் இல்லை. இந்த விடயத்தில் புலம்பெயர்ந்த தமிழர் அமைப்புகளைச் குற்றச்சாட்டுவதை விடவும் தாயகத்தில் உள்ள கட்சிகளையும் செயற்பாட்டாளர்களையும்தான் அதிகம் குற்றம் சாட்ட வேண்டும். அவர்கள் ஒரு திரட்சியாக இருந்தால், புலம் பெயர்ந்த தமிழர்கள் அவர்கள் பின் வருவார்கள். ஆனால் தாயகத்தில் தமிழரசியல் பலதலைக் கொள்ளியாக இருக்கிறது. அது புலம்பெயர்ந்த தமிழர்களுக்கு ஒரு கெட்ட முன்னுதாரணமாக காணப்படுகிறது.

இந்நிலையில் அரசியல்வாதிகளும் அரசியல் செயற்பாட்டாளர்களும் ஒன்றிணைவார்கள் என்று தமிழ் மக்கள் காத்துக் கொண்டிருப்பார்களாக இருந்தால் இக்கட்டுரையின் தொடக்கத்தில் கூறப்பட்டது போல தாயகத்தில் தேவைகளோடு மல்லுக்கட்டும் மக்களுக்கு உதவ யாராலும் முடியாது போய்விடும். எனவே அரசியல்வாதிகளையும் அரசியல் செயற்பாட்டாளர்களையும் பார்த்துக் கொண்டிருப்பதை விடவும் தன்னார்வமாக தனி நபர்கள், சமூக உருவாக்கிகள், சமூகச் சிற்பிகள், நிறுவன உருவாக்கிகள், அமைப்பு உருவாக்கிகள் மேலெழ வேண்டும். தமிழ் மக்கள் மத்தியில் கடந்த ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக அவ்வாறு நிறுவன உருவாக்கிகள் தன்னார்வமாக தோன்றியிருக்கிறார்கள். ஆறுமுக நாவலர், கன்டி பேரின்பநாயகம், இந்து போர்ட் ராஜரத்தினம், தங்கம்மா அப்பாக் குட்டி ஆறு திருமுருகன் போன்றவர்களை உதாரணமாகக் காட்டலாம். தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக்கு கலக்கம், காந்தீயம் போன்றவற்றை உதாரணங்களாகக் காட்டலாம். காலத்துக்குகாலம் தமிழ்மக்கள் மத்தியில் நிறுவண உருவாக்கிகளும் அமைப்பு உருவாக்கிகளும் தோன்றுகிறார்கள். அவர்கள் கட்டியெழுப்பியதுதான் இப்போதிருக்கும் நவீன தமிழ்ச் சமூகம்.

ஆயுத மோதல்களுக்கு பின்னரான சமூகத்தில் அதுபோல பல உதாரணங்களை காட்டலாம்.

விழிப்புலன் செவிப்புலன் அற்றவர்களுக்கான ஒரு கட்டமைப்பு கருவி என்ற பெயரில் இயங்குகின்றது. அக்கட்டமைப்பானது உள்ளூரில் சேகரிக்கப்பட்ட பணம் மற்றும் புலம்பெயர்ந்த தமிழ் மக்களின் உதவிகளோடு நீர்வேலியில் தனக்கென்று ஒரு மையக் கட்டடத்தை கட்டி எழுப்பி வருகிறது.

மற்றொரு கட்டமைப்பு கத்தோலிக்க திருச்சபையால் உருவாக்கப்பட்டது. போதைப் பொருள் பாவனையாளர்களுக்கான புனர் வாழ்வு மையம். குறைவான வசதிகளோடு செயற்பட்டு வரும் மேற்படி அமைப்புக்கு அரசாங்கம் வடமராட்சி கிழக்கில் 10 ஏக்கர் நிலத்தை வழங்கியுள்ளது. புலம்பெயர்ந்த தமிழர்கள் அதைச் சுற்றி மதில் கட்டுவதற்கு உதவி புரிந்திருக்கிறார்கள்.

அப்படித்தான் அண்மையில் கிளிநொச்சியில் அம்மாவட்டத்திற்குரிய மனநல வலையமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டது. அம்மாவட்ட ஆஸ்பத்திரியில் நடந்த ஒரு கூட்டத்தில் அந்த வலையமைப்பு தொடக்கி வைக்கப்பட்டது. அதில் அரசியல்வாதிகள் சம்பந்தப்படவில்லை. தனிப்பட்ட தன்னார்வலர்கள் அதை உருவாக்கியிருக்கிறார்கள். துறை சார் மருத்துவர்கள் உதவி புரிகிறார்கள்.

மேற்சொன்ன உதாரணங்களைப் பின்பற்றி தாயகத்திலும் டயஸ்பொறாவிலும் தமிழ் மக்கள் மத்தியில் உள்ள நிறுவன உருவாக்கிகளும் அமைப்புருவாக்கிகளும் தன்னார்வமாக கட்டமைப்புக்களை உருவாக்கலாம். ஒருபுறம் நிதிப்பலம் மிக்க புலம் பெயர்ந்த தமிழ் சமூகம் இன்னொரு புறம் தேவைகளோடு காத்திருக்கும் தாயக மக்கள். இவை இரண்டையும் இணைப்பதற்கு அரசியல்வாதிகளை பார்த்துக் கொண்டிருக்க தேவையில்லை. தன்னார்வலர்கள் மேலெழ வேண்டும். தாயகத்தில் பொருத்தமான கட்டமைப்புகள் இல்லாத வெற்றிடத்தில்தான், வெளியிலிருந்து பிரகடனங்களை உருவாக்கிவிட்டுத் தாயகத்தின்மீது திணிக்கிறார்களா? ஒரு தமிழ்த் தேசியப் பேரியக்கம் ஒன்று இருந்திருந்தால், உலகத் தமிழர் பேரவை இமாலயப் பிரகடனத்தைச் செய்திருக்குமா?



# 'இமாலயத் தீர்மானம்' ஒரு மோசடி என்று கூறி தமிழர்கள் புறக்கணிப்பு

- சிவா பரமேஸ்வரன்

பிரித்தானியாவை தளமாகக் கொண்டு இயங்கும் உலகத் தமிழர் பேரவைக்கும் (ஜி டி எ∴வ்) சில பௌத்த பிக்குகளுக்குக்கும் இடையே நடைபெற்ற கூட்டம் ஒன்றை அடுத்து "இமாலாயத் தீர்மானம்" என்று பெயரிடப்பட்ட ஒரு தீர்மானம் தமிழர்களின் கடும் கண்டனத்திற்கு ஆளாகியுள்ளது.

இலங்கையில் ஒரு பல்லினத்தன்மையை ஏற்படுத்தி அதன் மூலம் அனைத்துச் சமூகங்களின் நல்வாழ்விற்கு இந்த தீர்மானம் வழிவகுக்கும் என்று அந்த தீர்மானத்தின் ஏற்பாட்டாளர்கள் கூறுவதை அமெரிக்கா தொடங்கி ஆஸ்திரேலியா வரையிலான தமிழர்கள் மற்றும் அமைப்புகள் கடுமையாகச் சாடி அதைப் புறந்தள்ளுவதாக அறிவித்துள்ளன.

அந்த தீர்மானம் சில தினங்களுக்கு முன்னர் கொழும்பில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டது.

இலங்கை அரசிடம் கையளிக்கப்பட்டுள்ள அந்த தீர்மானமது மோசடியானது என்றும் அது தமிழ் மக்களின் அபிலாஷ‘கள் மற்றும் தேவைகளுக்கு எதிரானது என்று தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் கடுமையாக விமர்சித்து அது ஏற்புடையதல்ல என்று கூறியுள்ளனர்.

"சுதந்திரம் அடைந்தது முதல் பௌத்த குருமார்களே அரசியல் வரலாற்றை தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர், அதுவே தமிழ் மற்றும் சிங்கள அரசியல் தலைவர்களுக்கு இடையே, தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்கு ஏற்பட்ட ஒவ்வொரு ஒப்பந்தமும் ரத்து செய்யப்படுவதற்கு முக்கிய காரணமாக இருந்துள்ளது" என்று மிகவும் காட்டமாக வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கை ஒன்றில் அந்த ஆறு புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன.

பிரித்தானியத் தமிழர் பேரவை, பிரான்ஸ ிலுள்ள தமிழர்கள் பாதுகாப்பு மையம், ஐரிஷ் தமிழர் பேரவை, தென் ஆப்ரிக்காவின் சமாதனம் மற்றும் நீதிக்கான ஒற்றுமைக் குழு, சுவிஸ் தமிழ் நடவடிக்கைக் குழு மற்றும் மொரீஷியஸிலுள்ள இனப்படுகொலைக்கு எதிரான தமிழர் அமைப்பு ஆகியவை கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில் இலங்கையில் இன மோதல்களுக்கான வரலாற்றுப் பின்னணியை எடுத்துரைத்துள்ளது.

"இலங்கையில் தொடர்ச்சியாக வரலாற்று ரீதியாக தமிழ் மக்கள் மீது முன்னெடுக்கப்பட்ட இனைப்படுகொலையில் அரசின் பங்கிருந்துள்ளது என்பதற்கு உறுதியாக ஆதாரங்கள் உள்ளன. யார் ஆட்சியில் இருந்தாலும் ஒரே இன, ஒரே மொழி மற்றும் சிங்கள-பௌத்த நாடு என்கிற நோக்கம் முன்னெடுக்கப்படுவதிலேயே அவர்கள் குறியாக இருந்துள்ளனர்".

இந்த கூட்டம் தமிழ் மக்கள் மற்றும் சர்வதேச சமூகத்தை ஏமாற்றும் எண்ணத்தில் அரசியல் நோக்கத்துடன் முன்னெடுக்கப்பட்டது என்றும், இந்த "தீர்மானம்" தொடர்பிலான முழு நடவடிக்கையும் எவ்விதமான கலந்துரையாடலும் இன்றி இரகசியமாகச் செய்யப்பட்டது என்றும் அவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

"இமாலயத் தீர்மானம்" போன்று எந்தவொரு தீர்மானமும் பாதிக்கப்பட்டவர்களுடன் கலந்துரையாடல் மூலமே செய்யபட்டிருக்க வேண்டும், மேலும் கூட்டத்திற்கு முன்னதாக அது பொதுவெளியில் கொண்டுவரப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அது நடைபெறவில்லை" என்றும் அந்த அறிக்கை மேலும் கூறுகிறது.

போருக்கு பின்னரான காலத்தில், இதே போன்று அனைத்து அரசுகளுடன் ஜி டி எ∴வ் எடுத்த முயற்சிகள் யாவும் மோசமான தோல்வியைக் கண்டிருந்தன.

உள்ளூர் தமிழ் மக்கள் மற்றும் அவர்களின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடுவதற்கு பதிலாக ஜி டி எ∴வ் நேபாளத்தில் பௌத்த பிக்குகளுடன் பேசியுள்ளதை தமிழ் அரசியல் கட்சிகள் கடுமையாக விமர்சித்துள்ளன. யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்களை சந்திக்க மறுத்துவிட்டார். ஜி டி எ∴வ்வின் பேச்சாளர் சுரேன் சுரேந்திரன் சந்திப்பிற்காக விடுத்த அழைப்பை அவர் நிராகரித்துவிட்டார்.

"சுரேன், உங்களுடனோ அல்லது உங்கள் குழுவிலுள்ள மற்றவர்களுடனோ பேசுவதற்கு ஒன்றுமில்லை. போர் முடிந்த பிறகு, இந்த அரசு மிகவும் ஒடுக்குமுறை அரசாக இல்லாவிட்டாலும், ஒடுக்குமுறை அரசுகளில் ஒன்றாக இருந்துள்ளது. இரண்டு வாரங்களுக்கு முன்னர் கூட மாவீரர் தின நிகழ்வுகளின் போது, மக்கள் மீது பயங்கரவாத தடைச் சட்டம் கட்டவிழுத்துவிடப்பட்டது, தொடர்ச்சியாக மக்கள் கைது செய்யப்பட்டனர். அரசின் மீது கடுமையான அழுத்தம் பிரயோகிக்கப்பட வேண்டிய தருணத்தில் நீங்கள் அரசின் நடவடிக்கைகளை வெள்ளையடித்து மறைக்க முயல்கிறீர்கள், அதுவும் உள்நாட்டில் ஒருவரைக் கூட கலந்தாலோசிக்காமல் செய்துள்ளீர்கள். தமிழ் மக்களின் அபிலாஷைகள் மற்றும் விருப்பங்களை நிர்மூலமாக்கும் வகையில் உங்கள் குழு போதிய வேலைகளைச் செய்துள்ளது. உங்களது அண்மையை நடத்தை அதில் எந்த மாற்றமும் இல்லை என்பதையே காட்டுகிறது".

உள்நாட்டிலேயே தீர்வு காணும் நோக்கில் உண்மையை கண்டறிந்து இணக்கப்பாட்டிற்கு வழிவகுக்கும் வகையில் உத்தேசிக்கப்பட்டுள்ள ஆணைக் குழுவை அமைப்பதற்கு புலம்பெயர் அமைப்புகளுடன் வெற்றிகரமாக பேசி முடிவெடுத்துள்ளதாக, சர்வதேச சமூகத்தை ஏமாற்ற, ஜி டி எ∴வின் இந்தக் கூட்டம் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு வாய்ப்பை அளிக்கும் என்றும் அந்த ஆறும் அமைப்புகளும் தெரிவித்துள்ளன.

பெரும்பாலான புலம்பெயர் அமைப்புகள் தமது நேரம், பணம் மற்றும் உழைப்பை, தமிழ் மக்கள் மீது இழைக்கப்பட்ட போர்க் குற்றங்கள், மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் இனப்படுகொலை ஆகியவற்றுக்கு பொறுப்புக்கூற வைப்பதற்காக செலவிடும் நிலையிலும், ஐ நா மனித உரிமைகள் ஆணையரின் அலுவலகம் இலங்கை பொறுப்புக்கூறல் திட்டத்தை முன்னெடுக்கும் சூழலிலும், அதை தடம்புரளச் செய்ய ஜி டி எ∴வ் முயல்கிறது என்று அந்த அமைப்புகளும் குற்றஞ்சாட்டியுள்ளன.

சரித்திர ரீதியாக அரசியல் தீர்விற்கான உள்ளூர் பொறிமுறைகளில் தமிழ் மக்கள் நம்பிக்கை இழந்துள்ளனர்.

இதே போன்று மற்றொரு ஆறு புலம்பெயர் தமிழ் அமைப்புகளும் ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளன. அதில் ஜி டி எ∴வ் அமைப்பு மீது நம்பிக்கை இல்லை மற்றும் அவர்கள் குறிப்பிடத்தகுந்த அமைப்பு இல்லை என்று ஆஸ்திரேலிய தமிழ் காங்கிரஸ், வட அமெரிக்க தமிழ்ச் சங்கங்களின் கூட்டமைப்பு (∴பெட்னா), இலங்கை தமிழ்ச் சங்கம் அமெரிக்கா, ஒன்றிணைந்த அமெரிக்கர்கள் பி ஏ சி, அமெரிக்க தமிழர்கள் நடவடிக்கை குழு மற்றும் உலகத் தமிழர்கள் நிறுவனம் அமெரிக்கா ஆகிய அமைப்புகள் தெரிவித்துள்ளன.

"கடந்த 2009 ஆம் ஆண்டு பிரெஞ்சுத் தலைநகர் பாரிஸில் 14 நாடுகளிலுள்ள தமிழ் அமைப்புகள் இணைந்து உருவாக்கிய அமைப்பிலிருந்து பின்னர் அதிலிருந்து 10 ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த அமைப்புகள் அதிலிருந்து விலகியுள்ளன. மேலும் பிரித்தானிய தமிழர் பேரவை, ஆஸ்திரேலிய தமிழ் காங்கிரஸ், அமெரிக்காவின் தமிழ் செயற்பாட்டுக் குழு (USTAG) ஆகியவையும் ஜி டி எ∴விலிருந்து விலகியுள்ளன. அதன் காரணமாக இந்த ஈடுபாடு மூலம் எட்டப்படும் எந்த முடிவும் பெரும்பாலான புலம்பெயர் தமிழர்களின் ஆதரவு இருக்காது என்றும், எனவே அதற்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவே நம்பகத்தன்மை இருக்கும்".

ஜி டி ∴வ் அமைப்பு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவால் 2014 ஆம் ஆண்டு தடை செய்யப்பட்டது. எனினும் 2015ஆம் ஆண்டு தேர்தலின் பின்னர் பதவிக்கு வந்த மைத்ரிபால சிறிசேனவால் அது நீக்கப்பட்டது.

எனினும், பதவியிலிருந்து நீக்கபப்ட்ட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவால் மீண்டும் தடை செய்யப்பட்டு, தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவால் "அவர்கள் இனியும் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு நிதியுதவி செய்வதில்லை" என்று கூறி ஆகஸ்ட் 2022இல் நீக்கப்பட்டது.

இதேவேலை ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு "இமாலயன் கூட்டுத் தீர்மானம் கையளிக்கப்பட்டுள்ளது பேச்சுவார்த்தையை ம்முன்னெடுப்பது மற்றும் இணக்கப்பாட்டு மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய இலங்கையை முன்னெடுப்பது தொடர்பில் ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றம்" என்று கூறியுள்ளது. ஆனால் நாட்டின் புத்தசாசன அமைச்சகமோ சில உயர்மட்ட புத்த பிக்குகள் மற்றும் ஜி டி ∴வ் ஆகியோரின் கூட்டுத் தீர்மானம் தொடர்பில் தமக்கு எந்த தகவலும் இல்லை என்று கூறியதாக அந்த அமைச்சின் அதிகாரிகளை மேற்கோள் காட்டி உள்ளூர் ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

# தேசபந்து தென்னகோன் கைதி ஒருவரை ஆடைகளை கழற்றி அடித்தது உறுதியானது

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் பதில் பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்டவர், பதின்மூன்று வருடங்களுக்கு முன்னர் ஒருவரை பாலியல் துஷ்பிரயோகம் உட்பட சித்திரவதை செய்யுமாறு அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்ட கொடூரமான விதம் நீதிமன்ற தீர்ப்பின் மூலம் தெரியவந்துள்ளது.

முன்னாள் இராணுவ சிப்பாய் ஒருவரை சட்டவிரோதமாக கைது செய்து தடுத்து வைத்ததன் மூலம் அவரின் அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக தீர்ப்பளித்த உயர் நீதிமன்றம், பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன், இராணுவ அதிகாரி மற்றும் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஆகியோர் தமது சொந்தப் பணத்தில் நட்ட ஈடு வழங்க வேண்டுமெனவும் உத்தரவிட்டுள்ளது.

ஒரு இலட்ச ரூபாய் நட்டஈட்டை வழங்குமாறு அரசாங்கத்திற்கும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அரசு இதனை கட்டாயம் பொறுப்பேற்க வேண்டுமெனக் குறிப்பிட்டுள்ள நீதிமன்றம், ஆனால், குற்றமிழைத்த அதிகாரிகளுக்காக இழப்பீட்டை செலுத்த பொதுமக்களின் மீது சுமையை ஏற்படுத்த நீதிமன்றம் விரும்பவில்லை. "பல ஆண்டுகளாக தங்கள் சம்பாத்தியத்தில் வரி செலுத்துவோர், அவர்களுடைய குற்றங்களுக்கும் நட்டஈட்டை செலுத்த வேண்டுமா" என உச்ச நீதிமன்றம் கேள்வி எழுப்பியுள்ளது.

முன்னாள் இராணுவ சிப்பாய் ரஞ்சித் சுமங்கல தாக்கல் செய்த மனுவை விசாரித்த நீதிமன்றம் டிசம்பர் 14, 2023 அன்று இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளது.

அப்போது நுகேகொட பிரதேசத்திற்கு பொறுப்பாக இருந்த பொலிஸ் அத்தியட்சகர் தேசபந்து தென்னகோன், மிரிஹான பொலிஸ் அவசர பிரிவின் பொறுப்பதிகாரி பாத்திய ஜயசிங்க, பொலிஸ் அதிகாரி பண்டார மற்றும் ஓய்வுபெற்ற இராணுவ சார்ஜன்ட் மேஜர் அஜித் வனசுந்தர ஆகியோர் மனுதாரருக்கு தனிப்பட்ட முறையில் ஒவ்வொருவரும் தலா ஐந்து இலட்சம் வீதம் நட்டஈடு வழங்க வேண்டுமென உத்தரவிடப்பட்டுள்ளது.

மூன்று பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்காக இந்த தீர்ப்பின் பிரதிகளை தேசிய பொலிஸ் ஆணைக்குழு மற்றும் சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்குமாறு உத்தரவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2010 ஆம் ஆண்டு டிசம்பர் 18 ஆம் திகதி, இராணுவ அதிகாரி அஜித் வனசுந்தரவுடன் முச்சக்கர வண்டியில் வந்த மிரிஹான பொலிஸ் அதிகாரிகளான பண்டார மற்றும் இன்ஸ்பெக்டர் பாத்திய ஜயசிங்க ஆகிய இரு அதிகாரிகள் தம்மை கைது செய்து, தம்பரவிலுள்ள மயானமொன்றுக்கு அழைத்துச் சென்றதாகக் கூறும் மனுதாரர் ரஞ்சித் சுமங்கல, தாம் சித்திரவதை செய்யப்பட்ட கொடூரமான விதத்தை நீதிமன்றில் விளக்கியுள்ளார்.

அதன்படி ஒரு நாள் முழுவதும் அவருக்கு உணவு, குடிக்க எதுவும் கொடுக்காமல் பொலிஸார் சித்திரவதை செய்துள்ளனர்.

"ஆடைகளை காயவைத்த பின்னர், அவர்கள் என்னை மீண்டும் அந்த கட்டிடத்திற்கு அழைத்துச் சென்று மேசைக்கு அடியில் கைவிலங்கு போட்டு உட்கார வைத்தார்கள். அன்று எங்களுக்கு உண்ணவோ குடிக்கவோ எதுவும் கொடுக்கப் படவில்லை. பனடோல் வில்லைகள் மாத்திரமே கொடுக்கப்பட்டது. அன்று இரவு நாங்கள் மேசையின் கீழ் இருந்தோம். அங்கிருந்தபோது உயர் அதிகாரி ஒருவர் நாங்கள் இருந்த இடத்திற்கு வந்தார்.

அவர்கள் யார் என அதிகாரிகளிடம் கேட்டார். அப்போது அதிகாரிகள், சேர், இது சார்ஜென்ட் மேஜருடைய வழக்குடன் தொடர்புடையவர்கள். இங்கு மாடு திருடனும் இருப்பதாக கூறினார்கள், என நான் தெரிவிக்கின்றேன்." என ரஞ்சித் சுமங்கலவின் மனுவில் கூறப்பட்டுள்ளது.

அப்போது பொலிஸ் அத்தியட்சகர் தரத்தில் இருந்த தேசபந்து தென்னகோன் தம்மை எவ்வாறு பாலியல் வன்கொடுமை செய்தார் என்பதை மனுதாரர் பின்வருமாறு விபரித்துள்ளார்.

"பின்னர் அந்த அதிகாரி எங்களை நிர்வாணமாக்கி, ஒருவரை ஒருவர் பின்னால் நிறுத்தி, எங்கள் நால்வரையும் மூச்சக்கர வண்டி ரப்பர் பட்டியால் உடல் முழுவதும் அடித்தார். எங்களை அடிக்கும்போது சித்தாலேபவை எங்கள் பிறப்புறுப்பில் தேய்க்குமாறு கட்டளையிட்டார். நாங்கள் அசௌகரியத்திற்கு மத்தியில் தேய்த்தோம். அப்போது அவர் பலமுறை தாக்கியதாக குறிப்பிடுகின்றேன். அந்த நேரத்தில் வீக்கத்துடன் வலியால் துடித்துக்கொண்டிருந்தோம் அவருக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. ஆடை அணிய விடாதீர்கள் என்றார். சுமார் 2 மணி நேரம் இப்படியே வையுங்கள். நான் மீண்டும் வருகிறேன் என்று கூறிவிட்டு சென்றார்.

பின்னர், அங்கிருந்த அதிகாரி ஒருவர் சொன்னார், அவர் வேறு நாட்களில் ஆட்களை அடிப்பவர் அல்ல. ஆனால் உங்கள் கருமத்திற்குதான் அவர் உங்களை அடித்தார் எனக் கூறினார். அந்த அதிகாரி பொலிஸ் அத்தியட்சகர் தேசபந்து தென்னகோன் என்பதை பின்னர் அறிந்து கொண்டேன் எனக் குறிப்பிடுகின்றேன்."

எதிர்மனுதாரர்களின் முரண்பாடான அறிக்கைகளை கவனத்தில் கொண்டு, மனுதாரர் ரஞ்சித் சுமங்கலவின் கூற்று, அவருடன் காவலில் வைக்கப்பட்ட சித்திரவதைக்கு உள்ளான ஏனையவர்களின் வாக்குமூலங்களை உச்ச நீதிமன்றம் ஏற்றுக்கொண்டுள்ளதோடு, மாத்தளை பொது வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி வைத்தியர் அஜித் ஜயசேனவின் அறிக்கையும் இதனை உறுதிப்படுத்துவதாக ஏற்றுக்கொண்டுள்ளது.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# மன்னார் மாவட்டத்திற்கு புதிய அரச அதிபராக க. கனகேஸ்வரன் நியமனம்

- மன்னார் நிருபர் (21-12-2023)

வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் க. கனகேஸ்வரன் மன்னார் மாவட்டத்தின் புதிய அரச அதிபராக எதிர்வரும் சனிக்கிழமை (23-12-2023) பதவியேற்கவுள்ளார்.

பொது நிர்வாகம் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் ரஞ்சித் அசோக விடமிருந்து நியமன கடிதத்தை பெற்றுக் கொண்டார்.

1998 முதல் 2003 செப்டெம்பர் வரை கொடிகாமம் போகட்டி அ.த.க. பாடசாலையில் ஆசிரியராகப் பணியாற்றிய அவர், 2003 முதல் 2004 ஆகஸ்ட் வரை நிர்வாக சேவைக்கான பயிற்சியில் ஈடுபட்டுள்ளார்.

அதன் பின்னர், அவர் 2004 அக்டோபர் முதல் 2015ஆம் ஆண்டு மே மாதம் வரையில் தொழில் திணைக்களத்தின் பிரதி தொழில் ஆணையாளராக பணியாற்றியுள்ளார்.

தொடர்ந்து, 2015 ஜுன் முதல் 2019 செப்டெம்பர் வரையில் மருதங்கேணி பிரதேச செயலாளராகவும், 2019 ஒக்டோபர் முதல் 2019 டிசம்பர் வரையில் யாழ்ப்பாணம் மாவட்ட மேலதிக அரச அதிபராகவும் அவர் கடமையாற்றியுள்ளார்.




மேலும், 2019 டிசம்பர் 16 முதல் 2023 நவம்பர் 21 வரையில் முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரச அதிபராகப் பணியாற்றிய வேளை, நிர்வாக சேவை விசேட தரத்துக்குத் தேர்வாகிய அவர், 2023 நவம்பர் 22 முதல் தற்போது வரையில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளராக பணியாற்றி வருகின்றார்.

இந்நிலையில், 23-12-2023 சனிக்கிழமை முதல் மன்னார் மாவட்ட அரச அதிபராகப் பதவியேற்கும் வகையில் 21-12-2023 வியாழக்கிழமை அவருக்கு நியமனக் கடிதம் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாண மாவட்ட நீடித்து நிலைத்திருக்கும் நிர்மாண பணிகள் குழுமத்தின் மாவட்ட கூட்டம்!






நீடித்து நிலைத்திருக்கும் நிர்மாண பணிகள் குழுமத்தின் (Alliance for Sustainable Infrastructure) யாழ்ப்பாண மாவட்ட கூட்டம் 21-12-2023 வியாழக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு ஓய்வு பெற்ற அரசாங்க அதிபர்கள், பல்கலைக்கழக துணை வேந்தர்கள், பேராசிரியர்கள் பல்வேறு திணைக்கள அதிகாரிகள் பிரதேச சபை செயலாளர்கள், பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர்கள், முன்னாள் பிரதேச சபைகளின் உறுப்பினர்கள், சமூக நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் தலைவர்கள் வருகை தந்திருந்தனர்.

இக் கூட்டத்தில் நீடித்து நிலைத்திருக்கும் நிர்மாண பணிகள் தொடர்பான குழுமத்தின் ஒருங்கிணைப்பாளர் திரு சமந்த அபயவிக்ரம அவர்கள் கலந்துகொண்டு இதன் நோக்கத்தை தெளிவுபடுத்தியிருந்தார்.

இதன் மூலம் மக்களுக்கு நிலை பேறான அபிவிருத்தி பணிகளை செயற்படுத்துவதோடு நிர்மாண பணிகளிலே ஊழல் அற்ற வெளிப்படையான மக்களுக்கு உகந்த சூழலுக்கு பாதகம் அற்ற நிலமைகளை ஏற்படுத்தி சிறந்த நிர்மாண பணிகளை உருவாக்குவது தான் இக்குழுமத்தின் நோக்கமாக உள்ளது என்று தெரிவித்தார்.

பல்வேறு உதாரணங்களுடன் கடந்த காலத்தில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகளுக்கு நிர்மாண பணிகளில் ஏற்பட்ட குறைபாடுகளும் ஒரு காரணமாக அமைந்திருந்தது என்றும் விளங்கப்படுத்தினார்.

அதன் பின்னர் இந்த சபையின் யாழ்ப்பாண மாவட்டத்தில் மக்கள் குழுமத்தை தேர்வு செய்யுமாறும் இதன் இணைத்தலைவர்களில் ஒருவராக ஞழுனோ நிறுவனத்தின் பிரதிநிதியாக செந்துர்ராசா அவர்கள் இயல்பாகவே செயற்படுவார் என்றும் சமூகத்தின் பிரதிநிதியாக ஒருவரை தெரிவு செய்யுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

தலைவராக யாழ்ப்பாண பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை தெரிவு செய்யப்பட்டார்.

அத்துடன் கல்விமான்கள் பேராசிரியர்கள் முன்னாள் சிரேஷ்ட அரச அதிகாரிகள் பலரும் இக்குழுமத்தில் தாமாக முன்வந்து இணைந்திருந்தார்கள். மக்கள் குழுமத்தினூடைய (People's Forum) இந்த கூட்டங்கள் நடாத்தி பொதுமக்கள் சார்ந்த நிர்மாண பணிகள் தொடர்பான பிரச்சனைகளை உரிய மட்டத்துக்கு எடுத்துச் சென்று ஆவன செய்வது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# தேசிய கலை இலக்கியப் பேரவையின் 50 ஆவது ஆண்டு விழா




மக்கள் சார்பான முற்போக்குக் கலை இலக்கியப் பாதையில் கடந்த 50 ஆண்டுகளாகப் பயணிக்கின்ற தேசிய கலை இலக்கியப் பேரவையின் 50 ஆவது ஆண்டு விழா வரும் 23.12.2023 சனிக்கிழமை மாலை 3 மணியளவில் வேம்படி வீதியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்திற்கு அருகில் அமைந்துள்ள நிம்மர் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

தேசிய கலை இலக்கியப் பேரவையின் தலைவரும், எழுத்தாளரும், தாயகம் சஞ்சிகையின் ஆசிரியருமான க.தணிகாசலம் அவர்களின் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் வாழ்த்துரைகளை கவிஞரும், மொழிபெயர்ப்பாளரும், பலாலி ஆசிரியர் பயிற்சி கலாசாலையின் ஓய்வுநிலை அதிபருமான சோ.பத்மநாதன் (சோ. ப) அவர்களும், எழுத்தாளரும், வவுனியா கல்வியற் கல்லூரியின் ஓய்வுநிலை உப பிடாதிபதியுமான ந. பார்த்தீபன் அவர்களும், எழுத்தாளரும், சிரேஷ்ட சட்டத்தரணியுமான சோ.தேவராஜா அவர்களும், தேசிய கலை இலக்கியப் பேரவையின் பொதுச் செயலாளரும், மட்டக்களப்பு கல்வியியற் கல்லூரியின் ஓய்வுநிலைப் பீடாதிபதியுமான சிவ. இராஜேந்திரன் அவர்களும் ஆற்றவுள்ளனர்.

தொடர்ந்து கலை நிகழ்வுகள் வரிசையில் கே.ஏ.சுப்பிரமணியம் நினைவு சத்தியமனை நூலக மாணவர்களின் கவிதா நிகழ்வும், யாழ் மாவட்ட தேசிய கலை இலக்கியப் பேரவையின் கலைக் குழுவினரும், வவுனியா மாவட்ட தேசிய கலை இலக்கியப் பேரவைக் கலைக் குழுவினரும் வழங்குகின்ற பாடல்களும், தர்மலிங்கம் ஸ்ரீபிரகாஸ் அவர்களின் தலைமையில் "மக்கள் வாழ்வைச் சீர்படுத்துவது நிகழ்காலத்தின் புரிதலா? எதிர்காலம் பற்றிய ஏக்கமா?" என்ற தலைப்பிலான பட்டிமன்றம் தம்பிப்பிள்ளை சுதன், பாலசந்திரன் தினேஸ், பரமநாதன் விஜிந்தன், ஆனந்தகுமார் கபிலாயன் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் இடம்பெறவுள்ளன.

மேலும் வவுனியா மாவட்ட தேசிய கலை இலக்கியப் பேரவையின் தயாரிப்பில் நடராஜா பார்த்தீபன் அவர்களின் நெறியாள்கையில் "ஏதோ உயிரோடு இருக்கிறோம்" என்ற குறுநாடகமும், செம்முகம் ஆற்றுகைக் குழுவின் தயாரிப்பில் கு.சாரங்கன் அவர்களின் நெறியாள்கையில் "ஊன் ஆட்டம்" மற்றும் க.சத்தியசீலனின் நெறியாள்கையில் "தேவை" ஆகிய குறுநாடகங்களும், சண் நாடகக் குழுவினரின் தயாரிப்பில், புண்ணியமூர்த்தி கணேசராசா அவர்களின் நெறியாள்கையில் "என்னவென்று சொல்வேனடி?" நாடகமும் இடம்பெறவுள்ளன. நிகழ்ச்சித் தொகுப்பினை சபா தனுஜன் அவர்கள் மேற்கொள்வார்.

இந் நிகழ்வின் விசேட அம்சமாகப் புகைப்படக் கண்காட்சி மற்றும் புத்தகக் கண்காட்சி ஆகியனவும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. கலை இலக்கிய ஆர்வலர்கள் அனைவரையும் தவறாது இந் நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு தேசிய கலை இலக்கியப் பேரவையினர் அழைப்புவிடுத்துள்ளனர்.

# வெள்ள அனர்த்தம் ஏற்படும் பகுதியில் உள்ள மக்களின் பாதிப்புக்களை நிவர்த்தி செய்யும் வகையில் மாற்றுத்திட்டம் — அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு!

வெள்ள பாதிப்புக்குள்ளான மக்களுக்கு மாற்றுத்திட்டமொன்ற வகுத்து புதிய வீட்டுத் திட்டத்துடன் கூடிய காணிகளை வழங்குவது தொடர்பில் ஆராயவுள்ளதாக தெரிவித்துள்ள கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எதிர்பாலத்தில் இவ்வாறான பாதிப்புகளை ஏற்படுத்தாத வகையில் பொறிமுறை ஒன்றை உருவாக்குவது தொடர்பில் நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

சீரற்ற காலநிலை காரணமாக பாதிக்கப்பட்ட கிளிநொச்சி மாவட்ட மக்கள் முரசுமோட்டை முருகானந்தா ஆரம்ப பாடசாலை மற்றும் கண்டாவளை மாகாவித்தியாலயம் ஆகியவற்றில் தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களை நேரில் சென்று பார்வையிட்ட போதே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இவ்வாறு கூறியுள்ளார்.

மேலும் - "வெள்ள அனர்த்தம் ஏற்படும் பகுதியில் உள்ள மக்களின் பாதிப்புக்களை நிவர்த்தி செய்யும் வகையில், மாற்றுத்திட்டமொன்றை வகுத்து புதிய வீட்டுத்திட்டத்துடன் பாதுகாப்பான இடத்தில் காணிகளை பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கை தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது.

வெள்ள அனர்த்த பாதிப்பு குறைவடைந்த பின்னர் பாதுகாப்பை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டதன் பின்னர் வீடுகளுக்கு செல்ல முடியும்" எனவும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இதனிடையே மழை வெள்ளத்தை முகாமைத்தவம் சரியாக இல்லாமையால் வருடாவருடம் பெரும் அழிவுகள் ஏற்பட்டு வருவதாக விவசாய மக்கள் அமைச்சரிடம் சுட்டிக்காட்டியிருந்தனர்.

மேலும் கடந்த 2018 ஆம் ஆண்டு துறைசார் நிபுணர்களின் கவலையீனத்தால் இரணைமடு குளத்தின் வான் கதவுகள் திறப்பதில் தாமதமேற்பட்டிருந்ததாகவும் அதன்பின்னர் நிலைமையை புரிந்துகொண்ட அதிகாரிகள் அவசர அவசரமாக வான் கதவுகளை திறந்துவிட்டமையால் பெரும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதுடன் உயிரிழப்புகளும் ஏற்பட்டதாகவும் சுட்டிக்காட்டியிருந்த அமைச்சர் இவ்வருடம் அவ்வாறான ஒரு நிலை இல்லாதுவிட்டாலும் பெரு வெள்ளத்தால் மக்கள் பாதிப்புற்றுள்ளனர்.



எனவே எதிர்பாலத்தில் இவ்வாறான பாதிப்புகளை ஏற்படுத்தாத வகையில் பொறிமுறை ஒன்றை உருவாக்குவது தொடர்பில் நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அத்துடன் கிளிநொச்சியில் தற்பொழுது பெய்துவரும் தொடர் மழை காரணமாக இரணைமடு பகுதியில் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கால், கண்டாவளை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பல கிராமங்களைச் சேர்ந்த மக்கள், இடம்பெயரத் தொடங்கியுள்ளனர்.

மழை வெள்ளம் வீடுகளுக்குள் புகுந்துள்ளதால், அக்கிராம மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், 28 குடும்பங்களைச் சேர்ந்த 96 பேர் இடம்பெயர்ந்து.

இந்நிலையில் கிளிநொச்சி முருகானந்தா ஆரம்ப பாடசாலையில் தங்கியுள்ள மக்களை நேரில் சென்று பார்வையிட்டதுடன் அவர்களுக்கு உடனடியாக செய்து கொடுக்கப்பட வேண்டிய அத்தியாவசிய தேவைகள் குறித்து அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கினார்.

# காணத் தயாராகுங்கள்!

Association of Past Business Owners of Sri Lanka
Canada
இலங்கை முன்னாள் வர்த்தகர்கள் சங்கம் - கனடா

PRESENTS

11 வது ஆண்டில்

# வர்த்தக தீபம் 2023

11TH ANNUAL

## Winter Get-Together

AWARDS | DINNER | ENTERTAINMENT

தித்திக்கும் தீந்தமிழ் இயல் இசைகளின் சங்கமம்

Mega Tuners

K2B

மெகா ரியூனெர்ஸின் இன்னிசை கானங்கள், ரொறன்டோவின் முன்னனி நடன ஆசிரியர்கள், **K2B** டான்ஸ் குறூப் மாணவ மாணவிகளின் கண்கவர் நடனங்கள், மற்றும் பல நிகழ்வுகள்.....

மற்றும் சுப்பர் சிங்கர் புகழ் பாடகர்கள் கலந்து கொள்கிறார்கள்

**DEC 26 2023 | TUESDAY 6:00 PM**

**SCARBOROUGH CONVENTION CENTRE**
**20 TORHAM PLACE,**
**SCARBOROUGH, ON. M1X 1E3**

- வர்த்தகர்கள் மதிப்பளிப்பு
- காதுக்கினிய இன்னிசைக் கானங்கள்
- கண்ணுக்கினிய நடனங்கள்
- நாவிற்கினிய அறுசுவை உணவுகள்

கண்டு களித்து உண்டு மகிழ்வதோடு தாயகத்தில் வாழ்வாதாரமற்ற குழந்தைகளின் மேம்பாட்டிற்கு உதவிட அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

அன்பளிப்பு **$60**

SOMA SATCHITHANANDAN
**President**
647.202.3234

SOTHY SELLA
**Secretary**
647.409.8966

KATHIRAVEL KARUNANANTHAN
**Treasurer**
416.970.3182

வல்லவர் தொழில் வர்த்தகத்துறை

# மரண அறிவித்தல்



தோற்றம்:
25 - 03 - 1934

மறைவு:
18 - 12 - 2023

## திருமதி. சுப்பிரமணியம் பாக்கியம்

*(யாழ்ப்பாணம் பண்டத்தரிப்பு)*

**யாழ்ப்பாணம் பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும், பண்டத்தரிப்பு, கனடாவில் வாழ்ந்து வந்தவருமான திருமதி. சுப்பிரமணயம் பாக்கியம் அவர்கள் 18-12-2023 திங்கட்கிழமை அன்று சிவபதம் அடைந்தார்.**

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - பாறுப்பிள்ளை அவர்களின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லப்பா - நாகம்மாவின் அன்பு மருமகளும்,

செல்லப்பா சுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவியும்,

காலஞ்சென்ற தில்லைநாதன், மற்றும் சுப்பிரமணியம் (ஜயாப்பிள்ளை) ஆகியோரின் அன்புச் சகோதரியும்,

மணிமேகலா (பிரான்ஸ்), சங்கர்தேவ் (அன்ரன் கனடா), ஆனந்தராஜா (பவா கனடா), சித்திராங்கள் (பிரான்ஸ்), சாந்திலால் (கனடா), ரவிச்சந்திரன (கனடா), துஸ்யந்தி (பிரான்ஸ்), கிருஸ்சாந்தி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும்,

விபுலானந்தன் (பிரான்ஸ்), லோஜினி (கனடா), ஜெயலக்ஷ்மி (கனடா), குலதேவி (பிரான்ஸ்), சியாமளா (கனடா), லோகநாயகி (கனடா), விஸ்னுபரன் (பிரான்ஸ்), கிருஸ்ணகுமார் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும்

பேரப்பிள்ளைகளின் பேத்தியும், பூட்டப்பிள்ளைகளின் பூட்டியுமாவார்.


**அன்னாரின் பூதவுடல்** Chapel Ridge Funeral Home & Cremation Centre (8911 Woodbine Avenue Markham, ON L3R 5G1) **இல்** ***23-12-2023* சனிக்கிழமை காலை *11:00* மணி முதல் *3:00* மாலை மணிவரையும், மறுநாள் *24-12-2023* ஞாயிற்றுக்கிழமை காலை *7:00* மணிமுதல் பார்வைக்கு வைக்கப்பட்ட பின் *11:00* மணி வரை ஈமைக்கிரியைகள் நடைபெற்று, பின்** Providence Health Care - Forest Lawn Crematoium (4570 Yonge Street. Toronto, ON) **என்னும் இடத்தில் *12:00* மணியளவில் தனக்கிரியைகள் நடைபெறும்.**

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**தகவல்: குடும்பத்தினர்**

**தொடர்புகளுக்கு:**

குமார் (கனடா): (416) 949-9393 | ரவி (கனடா): (416) 804-3520


Wishing you a very
Merry Christmas
And happy new year
உங்களுக்கும் உங்கள் குடும்பத்தாருக்கும்
ஆரோக்கியமானதும் வளமானதுமான கிறிஸ்துமஸ் மற்றும்
புத்தாண்டு நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.
ONTARIO
Aris Babikian
MPP / DÉPUTÉ
SCARBOROUGH-AGINCOURT
Constituency Office:
207-4002 Sheppard Ave. E. Scarborough, ON M1S 1S6
Tel: 416-297-6568 Email: aris.babikianco@pc.ola.org

# மீட்பர் கிறிஸ்து சபை

## Redeemer Christ Assembly – Brampton

15 Kenview Blvd. Unit 3 (Upstairs), Brampton, On. L6T 5G7

## கிறிஸ்மஸ் நள்ளிரவு ஆராதனை

2023, டிசம்பர் 24ம் திகதி ஞாயிறு இரவு 10.30 மணிக்கு
இயேசுவின் பிறப்பை மனமகிழ்ச்சியுடன் நினைவு கூருவோம்

"நமக்கு ஒரு பாலகன் பிறந்தார், நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார், கர்த்தத்துவம் அவர் தோளின்மேலிருக்கும், அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக்கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்தியபிதா, சமாதானப்பிரபு என்னப்படும்."– ஏசாயா 9: 6

## புது வருட நள்ளிரவு ஆராதனை–2023/24

2023, டிசம்பர் 31ம் திகதி ஞாயிறு இரவு 11.000 மணிக்கு
2023ம் ஆண்டின் முடிவையும், 2024 ஆண்டின் ஆரம்பத்தை தேவசமுகத்தில் ஆசீர்வாதத்துடன் ஆரம்பிப்போம்

"வருஷத்தை உம்முடைய நன்மையால் முடி சூட்டுகிறீர், உமது பாதைகள் நெய்யாய்ப் பொழிகிறது."– சங்கீதம் 65: 11

### இயேசுவின் நாமம்

இயேசுவின் நாமம் இனிதானநாமம், இணையில்லாநாமம் இன்பநாமம்
பாவத்தைப் போக்கும் பயமதைநீக்கும், பரம சந்தோஷம் பக்தருக்களிக்கும்
பரிமளதைலமாம் இயேசுவின் நாமம், பார் எங்கும் வாசைன வீசிடும் நாமம்
வானிலும் பூவிலும் மேலானநாமம், வானாதிவானவர் இயேசுவின் நாமம்
நேற்றும் இன்றும் என்றும் மாறிடாநாமம், நம்பிநோரைஎன்றும் கைவிடாநாமம்
முழங்கால் யாவும் முடங்கிடும் நாமம், மூன்றில் ஒன்றாக ஜொலிப்பவர் நாமம்
சாத்தானின் சேனையை ஜெயித்திட்டநாமம், சாபப் பிசாசை துரத்திடும் நாமம்
எல்லாம் வல்ல இயேசுவின் நாமம்

* * *

### இயேசுசொன்னார்

நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக, அதைச் செய்வேன். என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதைநான் செய்வேன்.– யோவான் 14: 13–14

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்*
*பாஸ்டர் அல்பிரட் செருபிம்*
**647 – 271 7645**

**அனைவருக்கும் எமது கிறிஸ்மஸ் – புது வருட வாழ்த்துக்கள்**

கனடிய செய்திகள்
Canadian News

# ரொறன்ரோ நகரில் கடந்த பல வருடங்களாக வெற்றிகரமாக இயங்கிவரும் HOMELIFE FUTURE REALTY INC வீடு விற்பனைத்துறை நிறுவனத்தின் வருடாந்த கிறிஸ்த்துமஸ் விழா




கனடா ரொறன்ரோ நகரில் கடந்த பல வருடங்களாக வெற்றிகரமாக இயங்கிவரும் HOMELIFE FUTURE REALTY INC வீடு விற்பனைத்துறை நிறுவனத்தின் வருடாந்த கிறிஸ்த்துமஸ் விழா Brighton Convention Centre விழா மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

விழாவிற்கான ஏற்பாடுகளை நிறுவனத்தின் தலைவர் செல்வா வெற்றிவேல் அவர்கள் தனது துணைவியார் புதல்விகள் மற்றும் பணியாளர்கள் மற்றும் நண்பர்கள் சகிதம் சிறப்பாகச் செய்திருந்தார்.

பாராளுமன்ற உறுப்பினரும் அமைச்சருமான ஹரி ஆனந்தசங்கரி அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கியும் வெற்றிபெற்ற விற்பனையாளர்களுக்கு விருதுகளை வழங்கியும் கௌரவித்தார். அவர் அங்கு உரையாற்றும் போது செல்வா வெற்றிவேல் அவர்களின் FUTURE REALTY INC நிறுவனத்தின் செயற்திறன்களைப் பாராட்டி மகிழ்ந்தார். சபையோரையும் அதே உணர்வை தழுவச் செய்தார்.

நூற்றுக்கணக்கான வீடு விற்பனையாளர்கள் சிறந்த விற்பனையாளர்களுக்கான விருதுகளைப் பெற்றனர்.

இங்கே காணப்படும் படங்கள் அங்கு எடுக்கப்பெற்றவையாகும்.

**படங்கள்: ரவி அச்சுதன் மற்றும் ரகுமாறன் (நன்றி அவர்கள் இருவருக்கும்)**







# ரொறன்ரோ பகுதியில் வெற்றிகரமாக இயங்கிவரும் ROYAL LEPAGE IGNITE வீடு விற்பனைத்துறை நிறுவனத்தின் வருடாந்த நத்தார் தினக் கொண்டாட்டமும் விற்பனையாளர்கள் விருதுகள் வழங்கும் விழாவும்




இங்கே காணப்படும் படங்கள் அங்கு எடுக்கப்பெற்றவையாகும்.

**படங்கள்: ரவி அச்சுதன் மற்றும் ரகுமாறன் (நன்றி அவர்கள் இருவருக்கும்)**





கனடாவில் ரொறன்ரோ மாநகரப் பகுதிகளில் உள்ள மக்களுக்கு வீடு விற்பனைத்துறையில் நன்கு அறிமுகமான ROYAL LEPAGE IGNITE வீடு விற்பனைத்துறை நிறுவனத்தின் வருடாந்த நத்தார் தினக் கொண்டாட்டமும் விற்பனையாளர்கள் விருதுகள் வழங்கும் விழாவும் கடந்த சனிக்கிழமையன்று Scarborough Convention Centre விழா மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

விழாவிற்கான ஏற்பாடுகளை நிறுவனத்தின் தலைவர் சுகன் சிவராஜா தனது பணியாளர்கள் மற்றும் சகோதரர்கள் சகிதம் சிறப்பாகச் செய்திருந்தார்.






பாராளுமன்ற உறுப்பினரும் அமைச்சருமான ஹரி ஆனந்தசங்கரி அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கியும் வெற்றிபெற்ற விற்பனையாளர்களுக்கு விருதுகளை வழங்கியும் கௌரவித்தார்.

நூற்றுக்கணக்கான வீடு விற்பனையாளர்கள் சிறந்த விற்பனையாளர்களுக்கான விருதுகளைப் பெற்றனர்.

TRADITIONAL CHINESE
ACUPUNCTURE THERAPY

| | |
|---|---|
| எல்லாவிமான வலிகளுக்கும் | All Pain & Aches, Arthritis |
| ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை | Asthma, Sinusitis, Rhinitis Allergies |
| மனத்தளர்ச்சி, தலைவலி aches | Stress, Migraine & All Types of Head- |
| நீரிழிவு நோய், வயிற்றுவலி | Diabetes, Gastric Pain, Ulcer |
| மாதவிடதய் சம்மந்தமானவையும் | Menstruation |
| உடற்பருமன் குறைத்தல் | Weight Loss |

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
Acupuncturist (R.A.C)
தொடர்புகொள்ளவும்.
(416) 754-4024
5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5



# இந்திய வம்சாவளி மலையக தமிழர் தொடர்பில் பிரித்தானியாவுக்கு பாரிய கடப்பாடு உண்டு

இலங்கை செய்திகள்
Sri Lanka News

## பிரித்தானிய தூதர் அன்ரூ பெட்றிக்கிடம் மனோ கணேசன்



இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளி மலையக தமிழர் தொடர்பில் பிரித்தானியாவுக்கு பாரிய கடப்பாடு உண்டு. 200 வருடங்களுக்கு முன் 1823ல் இருந்து எங்களை இலங்கைக்கு, பிரிட்டிஷ் இந்தியாவில் இருந்து அழைத்து வந்ததும் நீங்கள்தான். 1948ல் எங்களை அம்போ என கைவிட்டு போனதும் நீங்கள்தான். இதை சொல்லி குற்றச்சாட்டு பத்திரிக்கை படிக்க நான் இங்கே வரவில்லை. உங்களுக்கு இந்த வரலாற்றை ஞாபகப்படுத்தவே வந்துள்ளேன். வரலாற்றை மனதில் கொண்டு, இந்த நிகழ்காலத்தில் இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளி மலையக தமிழருக்கு நீங்கள் உதவிடுங்கள், என நட்புரீதியாக உங்களை நான் தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் என்ற முறையில் கோருகிறேன் என இலங்கையில் பிரித்தானிய உயர் ஸ்தானிகராக பொறுப்பேற்றுள்ள அன்ரூ பெட்றிக்கை சந்தித்த போது தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் கூறியுள்ளார்.

தமிழ் முற்போக்கு கூட்டணி சார்பில் தலைவர் மனோ கணேசன் எம்பி மற்றும் பிரதி தலைவர் வி. இராதாகிருஷ்ணன் எம்பி மற்றும் பிரித்தானிய உயர் ஸ்தானிகர் அன்ரூ பெட்ரிக் ஆகியோர் இடையில் கலந்துரையாடல் கொழும்பில் உள்ள பிரித்தானிய தூதரலாயத்தில் நடைபெற்றது. பிரித்தானிய உயர் ஸ்தானிகரிடம் கோரிக்கை ஆவணத்தை கையளித்த மனோ கணேசன் எம்பி இது தொடர்பில் மேலும் கூறியதாவது,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றம் வரும் போதெல்லாம், 1948ல் இலங்கையின் வெளிநாட்டு வைப்பு, ஜப்பானுக்கு அடுத்தப்படியாக ஆசியாவில் அதிகமாக இருந்தது என்று சொல்லுவார். அது உண்மை. அன்று இலங்கையில் இருந்த ஒரே ஏற்றுமதி தொழில் தேயிலை இறப்பர் பெருந்தோட்ட தொழில்துறை தான். ஆகவே ரணிலின் கூற்றின் பின்னணி என்னவென்றால், அந்த அதிகூடிய வெளிநாட்டு வைப்புக்கு காரணம், எமது மக்களின் உழைப்பு, வியர்வை, இரத்தம் ஆகியவைதான் என்பதை பிரித்தானியா உணர வேண்டும்.

ஆனால், 1948ல் சுதந்திரத்தின் பின் இலங்கை அமைந்த முதல் அரசாங்கம் தந்த பரிசு, எமது குடியுரிமை பறிப்பு, வாக்குரிமை பறிப்பு ஆகியவைதான். ஆனால், இங்கேதான் பிரித்தானியாவின் பொறுப்பு தவறல் நிகழ்ந்தது. 1948ல் இலங்கை குடியரசு ஆகவில்லை. 1972 வரை எமது நாடு டொமினியன் அந்தஸ்த்தில் இருந்தது. பிரித்தானியா மகாராணிதான் எங்கள் நாட்டு தலைவராக 1972 வரை இருந்தார். இங்கே அவரது பிரதிநிதி மகா தேசாதிபதி இருந்தார்.

ஆகவே பிரித்தானியா மகாராணியின் அரசாங்கத்தின் கண்களுக்கு முன்தான் இந்த உலக மகா அநீதி நிகழ்ந்து. எமது குடியுரிமையும், வாக்குரிமையையும் பறித்து எம்மை நாடு கடத்திய போது பிரித்தானியா பார்த்துக்கொண்டு இருந்தது. கால்நடைகளை பகிர்ந்து கொண்டதை போன்று இந்தியாவும் எமது மக்களை சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம் மூலம் உள்வாங்கிகொண்டது.

இதனால் எங்கள் அரசியல் அதிகாரம் இலங்கையில் பலவீனமடைந்தது. அந்த சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம் இல்லாவிட்டால் இன்று இலங்கை பாராளுமன்றத்தில் 25 மலையக தமிழ் எம்பிக்கள் இருந்திருப்போம். வடகிழக்கு தமிழ் சகோதர எம்பிகளுடன் சேர்த்து இலங்கையில் 50 தமிழ் எம்பிக்களுக்கு குறையாமல் பலமாக இருந்திருப்போம். அப்படியானால், இலங்கையின் இனப்பிரச்சினை இந்தளவு மோசமடைந்து இருக்காது. இவை அனைத்துக்கும் ஆரம்பம், 1948ல் சுதந்திரத்தின் பின் மலையக தமிழ் மக்களின் குடியுரிமை பறிப்பு, வாக்குரிமை பறிப்பு ஆகியவைதான்.

இலங்கையில் இருந்து இந்தியா போன மலையக மக்களை மீண்டும் இங்கு கூட்டி வர முடியாது. அவர்கள் வரவும் மாட்டார்கள். ஆனால், நாம் பலவீனமடைந்ததன் காரணமானாக எமது இனம் இந்நாட்டில் இழந்த கல்வி, சமூக, பொருளாதார உரிமைகள் எண்ணிடலங்கா. எமது பின்தங்கிய நிலைமைக்கும் இவையே காரணம்.

ஆகவே பிரித்தானியாமுன்வந்து, எமது இனம் இந்நாட்டில் நமது இனம் இழந்த உரிமைகளை பெற்றுத்தர உதவிட வேண்டும். இது தொடர்பில் மேலதிக பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க தமிழ் முற்போக்கு கூட்டணியினராகிய நாம் தயார்.

# காற்றாலையும், கனிய மண் அகழ்வும் இயற்கை தரைத்தோற்ற இருப்பியல் ஒழுங்கமைப்பை சீர்குலைக்கின்றது — மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் ஜனாதிபதிக்கு அவசர கடிதம்

**மன்னார் நிருபர் - எஸ். றொசேரியன் லெம்பேட் (20-12-2023)**

மன்னார் மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டுவரும் காற்றாலை மின் உற்பத்தி மற்றும் கனிய மணல் அகழ்வு தொடர்பாக மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் வி.எஸ். சிவகரன் புதன்கிழமை (20) ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

குறித்த கடிதத்தில் மேலும் குறிப்பிடுகையில், மன்னார் மாவட்டத்தின் தீவுப்பகுதி என்பது சாதாரண தரைத்தோற்றத்தில் இருந்து மிகவும் குறைவான தாழ் நிலப் பிரதேசம் ஆகும். வலிமை குறைந்த கன தியற்ற நொதிய முள்ள தீவு என்பதால் தான் மூன்று மாடிக்கு மேல் கட்டிடம் அமைப்பதற்கு மன்னார் தீவு பகுதியில் அனுமதி வழங்குவதில்லை. ஐம்பது ஆண்டுகளில் நலிவுறும் தீவுகளில் மன்னாரும் ஒன்று என ஏலவே யுனெஸ்கோ நிறுவனம் முன்னெச்சரிக்கை விடுத்திருந்தது.

அவற்றை எல்லாம் கருத்தில் கொள்ளாமல் காற்றாலை அமைப்பதும் கனிய மண் அகழ்வதும் என்பது மேலும் தீவு பிரதேசத்தை பலவீனமான நிலைக்கு இட்டுச் செல்லும்.

உலகம் முழுவதும் மனிதர்களின் இயற்கைக்கு எதிரான செயற்பாட்டால் புவி வெப்பமயமாதல் அதிகரிப்பால் காலநிலை மாற்றம் ஏற்படுகிறது.

இதனால் பேரிடர் மூலம் கடல் நீர் மட்டம் உயரலாம். அதனால் பல தீவுகள் காணாமல் போகலாம் என்றும் அறிவியலாளர்களால் எச்சரிக்கப் பட்டுள்ளமையும் கவனிக்கத்தக்கது. துபாய் காலநிலை மாநாட்டில் தாங்களும் பங்கேற்றியிருந்தது குறிப்பிடத்தக்கது.

நில அதிர்வு, சுனாமியோ, பெரு வெள்ளமோ ஏற்பட்டால் தற்காத்துக் கொள்ளக்கூடிய நிலையில் வலிமையிளக்கவைக்கும் வேலைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன.

காற்றாலையும் கனிய மண் அகழ்வும் ஆழமாக துளையிட்டு நிலத்தடியை அதன் இயற்கை தரைத்தோற்ற இருப்பியல் ஒழுங்கமைப்பை சீர்குலைக்கும் வேலையே நடைபெறுகிறது.

இங்கு மிக நீண்ட காலமாக வசித்து வரும் மக்களுக்கு பெரும் வாழ்வியல் கேடாக மாறும். இயற்கையை அழித்து இயல்பை மாற்றி பணம் தேட முயல்வது தற்கொலைக்குச் சமமானது ஆகும். இங்கு வாழும் மக்களைப் பற்றிய எந்த விதமான நோக்கு நிலையும் இல்லாமல் ஆதாயம் தேட நினைப்பது அரசியல் இழுக்காகும்.




எனவே காலப்போக்கில் மன்னார் தீவு பகுதியில் இருந்து மனிதர்களை அப்புறப்படுத்தும் திட்டமிட்ட நிகழ்ச்சி நிரலாகவே நாம் இதனை நோக்க வேண்டியுள்ளது.

வருமானத்தை மட்டும் நோக்காகக் கொண்டு பல்தேசிய கம்பனிகளுக்கு மன்னார் வளத்தை கூறு போட்டு பெரு வணிகர்களிடம் கை அளித்திருப்பது நாட்டிற்கே பெரும் ஆபத்தை ஏற்படுத்துவதுடன் பூகோள ரீதியாக இந்த நாட்டின் மீது பிராந்திய வல்லரசுகளின் கழுகுப் பார்வைக்குள் அகப்பட்டிருப்பதாலும் வரலாற்று முக்கியத்துவ துறைமுக கட்டமைப்பைக் கொண்டதுமான இத்தீவு எதிர்காலத்தில் நாட்டின் ஏகபோகத்துவத்திற்கே பெரும் பாதிப்பை ஏற்படுத்தலாம்.

இந்த யதார்த்தங்கள் தங்களுக்குப் புரியாமல் அல்ல. ஆகவே கனியவள அகழ்வை முழுமையாக நிறுத்துவதுடன் புதிதாக அமைக்க இருக்கும். காற்றாலையை மன்னார் தீவுக்கு வெளியில் எவருக்கும் பாதிப்பு இல்லாத இடத்தில் நிறுவலாம். எனவே பொதுமக்களின் உணர்வுபூர்வமான தத்துவார்த்த அடிப்படை இருப்பியல் கோட்பாட்டுச் சித்தாந்தத்தை அறிவியல், சமூகவியல் ரீதியாகவும் ஏற்றுக் கொள்வீர்கள் என்று நம்புகின்றோம். இல்லையேல் பொதுமக்கள் தமது ஜனநாயக வழி எதிர்ப்பை இடைவிடாது வெளிப்படுத்துவார்கள்.

மக்களிடமுள்ள நீதி பூர்வமான வாழ்வியல் உரிமை சமூக சமநீதி கோட்பாட்டை ஏற்றுணர்ந்து கொள்வீர்கள் என்றும் எமது நியாயமான வேண்டுகையை நிராகரிக்க மாட்டீர்கள் என நம்புகின்றோம். என குறித்த கடித்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பிரதி இந்திய உயர்ஸ்தானிகருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

# டெங்கு நுளம்பு பெருகும் அபாயகரமான இடமாக மாறியுள்ள சங்கானை செங்கற்படை பிள்ளையார் ஆலய சூழல்!




வடமாகாணத்தின் யாழ்ப்பாண மாவட்டத்தில் டெங்குநோயின் தாக்கம் தீவிரமடைந்துள்ளது. வருடத்தின் இதுவரையான காலப்பகுதியல் சுமார் 3100 பேருக்கு மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் சில வாரங்களில் இரு மரணங்கள் நிகழ்ந்துள்ளதாகவும் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அண்மையில் அறிவித்திருந்தார்.

இந்நிலையில் செங்கற்படை மஹாதேவா பிள்ளையார் ஆலய அருகிலுள்ள காணியில் பெருமளவான இளநீர் கோம்பைகள் குவிக்கப்பட்டுள்ளதால் அங்கு டெங்கு நுளம்பு பரவும் பேரபாயம் காணப்படுகின்றது.

சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்குட்பட்டதும், வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் ஏழாம் வட்டாரத்தில் ஜெ/179 கிராமசேவகர் காணப்படும் இக்காணியில் ஆலய பூசைகளின்போது பயன்படுத்தப்பட்ட இளநீர் குரும்பைகள் தொடர்ச்சியாக கொட்டப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை பிந்திய தகவலாக யாழ்ப்பாணத்தில் டெங்கு நோய் உச்சங்கண்டுள்ளதாக யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபர் அறிவித்துள்ளார்.

இம்மாதம் 18 ஆம் திகதிவரை 886 பேர் வைத்தியசாலைளில் அனுமதிக்கப் பட்டுள்ளதாகவும் 19 ஆம் திகதியாகிய இன்று மட்டும் 111 டெங்கு நோயாளர்கள் யாழ்ப்பாண மாவட்டத்தில் இனங்காணப்பட்டுள்ளனர். இதனால் டெங்கு நுளம்பு ஒழிப்பு விசேட வேலைத்திட்டம் எதிர்வரும் 21 ஆம் திகதி முழுமையாக யாழ்ப்பாண மாவட்டதில் இடம்பெறவுள்ளதாக மாவட்ட அரச அதிபர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் அறிவித்துள்ளார்.


DISTRICT SECRETARIAT – JAFFNA

# கடற்படை முகாமில் சித்திரவதை: இலங்கை பொலிஸ் அதிகாரி கைது

இலங்கையில் உள்நாட்டுப் போர் முடிந்தவுடன் ஒரு நபரை கடத்தி அவரை இரகசிய கடற்படை முகாம் ஒன்றில் சட்டவிரோதமாகத் தடுத்து வைத்து சித்திரவதை செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்ட ஒரு பொலிஸ் அதிகாரி கைது செய்யப்பட்டுள்ளார்.

13 வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற கடத்தல் சம்பவம் தொடர்பில் மீரிகம பொலிஸ் நிர்வாகப் பிரிவின் பொறுப்பதிகாரி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் (CID) அண்மையில் கைது செய்யப்பட்டதாக உயர் பொலிஸ் அதிகாரிகளை மேற்கோள்காட்டி சிங்களப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

கனேரலலகே சாந்த சமரவீர என்பவரை 2010 ஜூலை மாதம் பொலிஸ் பரிசோதகர் சமன் குமார திஸநாயக்க கடத்தி சட்டவிரோதமாக தடுத்து வைத்திருந்ததாக குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

கடந்த 2019 ஆம் ஆண்டு உண்மை மற்றும் நீதிக்கான சர்வதேச செயல்திட்டம் (ஐ டி ஜே பி) காணாமல் போன சமரவீர கடைசியாக, திருகோணமலையில் அடந்த காடுகள் பரந்த மலைகளில் உள்ள கடற்படை புலனாய்வாளர்களால் நடத்தப்படும் ஒரு இரகசிய தடுப்பு முகாமில் மறைத்து வைக்கப்பட்டிருந்து காணப்பட்டதாக அறிக்கை ஒன்றின் மூலம் வெளிச்சத்திற்கு வந்தது.

யுத்தத்தின் இறுதிகாலப் பகுதியில், கொழும்பு மற்றும் அதன் புறநகரிலிருந்து 11 ஆடவர்கள் கடத்தப்பட்ட வழக்குத் தொடர்பில் கவனம் செலுத்திய அந்த அறிக்கை, அவர்கள் காணாமல் போவதற்கு முன்னர் - கன்சைட் தடுப்பு முகாம்-அல்லது “கோட்டா முகாம்” என்ற இடத்தில் எப்படி கடற்படையால் கைது செய்து வைக்கப்பட்டு சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டதற்கு நம்பத்தகுந்த சான்றுகள் உள்ளன என்று விவரித்திருந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பில் தீவிர விசாரணை, பாதிக்கப்பட்டவர்களின் நேரடி சாட்சியங்கள் மற்றும் உள்தகவல்கள், நீதிமன்ற ஆவணங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் கன்சைட்டில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இருவர் குறித்த விவரங்கள் வெளியாயின. அதில் ஒருவர் கேகாலை எக்கிரியாகலவைச் சேர்ந்த சாந்த சமரவீர மற்றொருவர் குருநாகல இப்பகாமுவப் பகுதியச் சேர்ந்த நிசாலன்சல விதாரணராட்சி.

அதே கன்சைட் முகாமில் கடற்படை புலனாய்வுப் பிரிவினருடன் இணைந்து செயற்படும் ஒரு நபரான பசநாயக்க முதலியான்செலகே விஜயகாந்த், அங்கு ஒரு வருடம் தான் தடுத்து வைக்கப்பட்டிருந்த போது, இந்த இருவரும் தன்னுடன் கைது செய்யப்பட்டு வைக்கப்பட்டிருந்தனர் என்று குற்றப்பிரிவு விசாரணைப் பிரிவினரிடம் நீண்ட காலத்திற்கு முன்னரே தெரிவித்துள்ளனர்.

எனினும், இலங்கை பொலிசார் எந்த சந்தேக நபரை இதுவரை கைது செய்யவில்லை. இலங்கையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடரில் பொலிஸ் மற்றும் இராணுவத்திற்கும் இடையே இருக்கும் அபாயகரமான தொடர்பை பொலிசாரே வெளிப்படுத்துவதற்கு இதுவொரு நல்ல சந்தர்ப்பமாக இருக்கும்.

எனினும், இப்படியான தொடர்பு குறித்து அதிகாரிகள் வாய் திறக்கவில்லை.

ஐ டி ஜே பி இன் இலங்கை கடற்படை: கூட்டாகக் கண் மூடி மௌனம்” அறிக்கையில், ஆட்களைக் கடத்தி கப்பம் பெறும் திட்டமிட்ட நடவடிக்கையில் பொலிஸும் கடற்படையின் கூட்டுச் சதி இருந்திருக்கக் கூடிய சாத்தியத்தையும் ஆராய்ந்தது.

2010ஆம் ஆண்டு ஜூலை மாதம் சாந்த சமரவீரவின் மூத்த சகோதரி லலிதா ஜயசிங்க தனது சகோதரர் காணாமல் சென்றது குறித்து இலங்கை மனித உரிமைகள் ஆணையத்திடம் முறைப்பாடு செய்திருந்தார். அவர் 22 ஜூலை 2010 அன்று அலாவ பொலிஸால் கைது செய்யப்பட்டிருந்தார். அவரது குடும்பத்தார் 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சட்டத்தரணி சூல சஞ்சீவ அதிகாரியுடன் பொலிஸ் நிலையத்திற்கு விஜயம் செய்திருந்தனர். ஆரம்பத்தில் சாந்தவை தாங்கள் தடுத்து வைக்கவில்லை என்று மறுத்தனர், எனினும் சட்டத்தரணி தலையிட்டவுடன் அவரை முன்ன்நிறுத்தினர். பிறகு லலிதா ஜயசிங்கவிடம் அவரது சகோதரர் திங்கள்கிழமையன்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படுவார் என்று பொலிசார் கூறினர்.

ஆனால், துரதிஷ்ட வசமாக அது நடைபெறவில்லை.

“பின்னர் தலையில் ஏற்பட்ட காயம் காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக எமக்கு ஒரு செய்தி கிடைத்தது. பின்னர் நாங்கள் மருத்துவமனைகுச் சென்ற போது, எனது சகோதரர் கழிப்பறையில் இருந்த ஜன்னல் மூலம் தப்பித்தார் என்று அவர்கள் கூறினர். அவர் ஜூலை 28ஆம் திகதி நீதிமன்றத்தில் நிறுத்தப்படுவாரா என்பது குறித்து நாங்கள் ஆராய்ந்தோம். அவர் பொலிஸ் நிலையத்திலும் இல்லை அல்லது நீதிமன்றத்தில் நிறுத்தப்படவும் இல்லை.

அநாதரவான நிலையில் லலிதா ஜயசிங்க இலங்கை மனித உரிமைகள் ஆணையத்தின் உதவியை நாடினார்.

“விசாரிப்பதற்காக நாங்கள் பல முறை அந்த ஆணையத்திற்குச் சென்றோம். ஒவொரு முறையும் அவர்கள் பொலிசாருக்கு சார்பாகவே நடந்துகொண்டனர்.”

சாந்த சமரவீர காணாமல் போனது தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணையம் விசாரணையை மேற்கொண்டதாக அறிக்கை எதையும் ஜெ டி ஸ் ஊடகம் அறிந்திருக்கவில்லை.

கடந்த 2008-09 ஆண்டுகளில் கடத்தி வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட 11 ஆடவர்கள் கன்சைட்டில் சட்டவிரோதமாக தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டது தொடர்பில், இலங்கையில் மிகவும் மதிப்பளிக்கப்பட்ட கடற்படைத் தளபதியான வசந்த ஜயதேவ கரணாகொட ஒரு முக்கிய சந்தேக நபராக உள்ளார்.

கடந்த 2021இல், இலங்கையில் மேல்முறையீட்டு நீதிமன்றம் அவருக்கு எதிரான விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதற்கு இடைக்கால உத்தரவு ஒன்றை பிறப்பித்தது.

கன்சைட் முகாமில் சட்டவிரோதமாக தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டவர்கள் தொடர்பில் விசாரணை நடத்திய பொலிஸ் அதிகாரி கடந்த 2019ஆம் ஆண்டு நாட்டிலிருந்து தப்பித்து வெளியேறினார்.

# பிரான்ஸ் தேசத்தின் பாரிஸ் நகரில் இதழ் TNTR ஊடகநிறுவனம் நடத்திய "சுயம்பு" விருதுகள் வழங்கும் விழாவும் ஒப்பற்ற கலைப்படைப்புக்கள் மேடையேறிய கலை விழாவும் ஒரே மேடையில்

உலக செய்திகள் World News

**“சுவிற்சலாந்து வாழ் எழுத்தாளர் கல்லாறு சதீஸ், கனடா வாழ் பத்திரிகையாளர் “உதயன்” லோகேந்திரலிங்கம், ஜேர்மனி வாழ் திரைப்பட இயக்குனர் சிபோ சிவகுமாரன் மற்றும் பிரான்ஸ் வாழ் திரைப்படத்துறை கலைஞர் நடிகர் திருமலையூரான் அசோக்குமார் அவர்கள், ஆகியோர் “சுயம்பு” விருது கௌரவிக்கப்பெற்ற அழகிய மேடை**



கடந்த 17-12-2023 ஞாயிற்றுக்கிழமையன்று பிரான்ஸில் இருந்து இயங்கி வரும் இதழ் தொலைக்காட்சி + வானொலி குழுமத்தின் சர்வதேச (நம்மவர்களுக்கான) “சுயம்பு” 2023 என்ற விருது நான்கு நமது ஆளுமைகளுக்கு வழங்கப்பெற்றன. விழாவை சிறப்பாக செய்த ஊடக நிறுவனத்தின் இணை அதிபர்கள் அனுசா - ரூபன் தம்பதியினருக்கும் அனைவரும் பாராட்டுக்களைத் தெரிவித்தனர்.

அன்றைய விருதுகள் வழங்கும் விழாவில் விருதுகள்பெற்றவர்களை பரிந்துரை செய்தவர்கள் மற்றும் தேர்வுக்குழுவினருக்கும் ஆகியோருக்கும் அன்றைய தினம் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்ட பிரான்ஸ் தேசத்தின் மூத்த கலைஞர்கள் பாராட்டுக்களைத் தெரிவித்தனர்.

















அன்றைய நான்கு விருதாளர்களான மூத்த பத்திரிகையாளர் “கனடா உதயன் பிரதம ஆசிரியர் லோகன் லோகேந்திரலிங்கம் அவர்கள், எழுத்தாளர் தொழிலதிபர் கல்லாறு சதீஷ் அவர்கள், மூத்த திரைப்பட இயக்குனர் திருமலையூரான் அசோக்குமார் அவர்கள், புகலிட முதல் திரைப்பட பெண் இயக்குனர் சிபோ சிவக்குமாரன் அவர்கள், திருமலையூரான் அசோக்குமார் அவர்கள், ஆகிய நால்வரையும் மேடையில் பிரான்ஸ் தேசத்தின் அரசியல் தலைவர்கள் மற்றும் அங்கு வாழும் தமிழ்க் கலைஞர்கள் ஆகியோர் பாராட்டிமகிழ்ந்தனர்.

இதழ் TNTR ஊடகத்துக்கும் அதன் இயக்குனர் Anu Rooban அவர்களுக்கும் அவரது கணவர் மற்றும் பிரான் வாழ் கலைஞர் பெருமக்களுக்கும் கனடா உதயன் நிறுவனம் தனது நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்து மகிழ்கின்றது.



இங்கே காணப்படும் படங்கள் அங்கு எடுக்கப்பெற்றவையாகும்.

# ‘200ல் மலையகம் மாற்றத்தை நோக்கி . . .’ மலையக மக்கள் முன்னணியின் மாநாடும் நூல் வெளியீடுகளும்.

**எச். எச். விக்கிரமசிங்க**

நுவரெலியாவில் மலையக மக்கள் முன்னணி எதிர்வரும் டிசம்பர் 24 ஆம் திகதி நடத்தும் “200ல் மலையகம் மாற்றத்தை நோக்கி...” மாநாடு வரலாற்று நிகழ்வில் மலையக எழுத்தாளர்களான சி.வி. வேலுப்பிள்ளையின் “மலையக அரசியல்: தலைவர்களும் தளபதிகளும்”, தெளிவத்தை ஜோசப் எழுதிய “தெளிவத்தை ஜோசப் கதைகள்”, சாரல் நாடனின் “வானம் சிவந்த நாட்கள்”, மலையக ஆய்வாளர் மு. நித்தியானந்தனின் “மலையக இலக்கியம்: சிறுமை கண்டு பொங்குதல்”, “மலையக சுடர்மணிகள்”, மாத்தளை பெ. வடிவேலனின் “வல்லமை தாராயோ?”, மலரன்பனின் “கொலுஷா” ஆகிய ஆறு நூல்களை மலையக மக்கள் முன்னணி தலைவர் வே. இராதகிருஷ்ணன் தலைமையில் மலையக மக்கள் முன்னணியின் ஆளுமைகளான செயலாளர் பேராசிரியர் எஸ். விஜயசந்திரன், தேசிய அமைப்பாளர் ஆர். ராஜாராம், மலையக தொழிலாளர் முன்னணி பதில் செயலாளர் புஷ்பா விஸ்வநாதன் ஆகியோர் நூல்களை வெளியிட்டு வைத்து மலையக எழுத்தாளர்களுக்கு முக்கியத்துவம் வழங்குகின்றார்கள்.

கடந்த பத்தாண்டு காலப்பகுதியில் நாங்கள் வெளியிட்ட மலையக அரசியல், சமூக, இலக்கிய நூல்கள் மலையக நூல் வெளியீட்டுத் துறையில் அழுத்தமான தடங்களை பதித்துள்ளன.


“மலையகத்தின் எழுச்சித் தலைவர் பெ.சந்திரசேகரன்ஷ என்ற தலைப்பில் 2014 இல் வெளியிடப்பட்ட வரலாற்று நூல் நம் காலத்தில் வாழ்ந்து மறைந்த ஓர் அரசியல் தலைவனின் சாதனைப் பதிவாக அமைந்து சிறப்புச் சேர்த்தது.

























இலங்கையின் தேசிய அரசியல் தலைவர்கள், மலையக அரசியல் தலைவர்கள், பாராளுமன்றத்தில் அவரைப்பற்றி ஆற்றிய அனுதாப உரைகளுடன், மலையகக் கல்விமான்கள் என்று சகல தரப்பிலும் பதிவுகளைத் தொகுத்து வெளியான அந்நூல் மலையக அரசியல் தலைவர் ஒருவருக்கு நமது சமூகம் அளிக்க வேண்டிய பெருங்கடனை நிறைவேற்றியது.







மூன்று ஆண்டுகளில் பெ. சந்திரசேகரன் அவர்களின் அறுபதாவது பிறந்த தினத்தை முன்னிட்டு மறுபதிப்பைக் கண்டு தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர்களான மனோகணேசன், பழனி திகாம்பரம், வே. இராதகிருஷ்ணன் ஆகியோரால் 2017 இல் தலவாக்கலையில் நடைபெற்ற மே தின விழாவில் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் மத்தியில் வெளியிட்டு வைத்தது தலைவருக்கு நாம் செலுத்திய மாபெரும் அஞ்சலி ஆகும். இரண்டு பதிப்புக்களை கண்ட அந்த நூல் இலண்டனில் முதல் வெளியீட்டை நிகழ்த்தி நம் தலைவனை உலக அரங்கிற்கு எடுத்துச் சென்றது.

அந்த வழிமுறையில் தேசிய தொழிலாளர் சங்க முக்கிய ஆளுமையான சி.வி. வேலுப்பிள்ளையின் ஷமலையக அரசியல்: தலைவர்களும் தளபதிகளும்” என்ற நூல் மலையக அரசியல் வரலாற்றில் முன்னுதாரணமற்ற அரசியல் எழுத்துப் பதிவாகும். மலையக அரசியல் வரலாற்றை அறிய விரும்பும் யாரும் சி.வி. எழுதிய இந்த வரலாற்றுப் புதையலை கடந்து போக முடியாது என்கிறார் மலையக பேராசான் மு.நித்தியானந்தன்.

ஐந்து ஆண்டுகளுக்கு முன் “பத்திரிகையாளர் எஸ்.எம். கார்மேகம்: வாழ்வும் பணியும்” என்று வெளியான நூல், ஈழத்தின் இதழியலில், குறிப்பாக மலையகப் பத்திரிகையுலகில் தனி ஜாம்பவனாகத் திகழ்ந்த அமரர் எஸ்.எம் கார்மேகத்தின் பெயரை வரலாற்றில் பதித்து பெரும் சாதனைப் புரிந்தது.

மலையக மக்கள் முன்னணியின் தலைவர் வே. இராதகிருஷ்ணன் அவர்களால் கம்போடியாவில் நடைபெற்ற சுமார் 1500 பேராளர்கள் கலந்துகொண்ட உலக தமிழ் மாநாட்டில் வெளியிடப்பட்டு பரந்த அங்கீகாரம் பெற்றது. தொடர்ந்து இலண்டனிலும் இந்நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது.

புரட்சி பாவலன் பி.ஆர். பெரியசாமி அவர்களின் “தோட்டத் தொழிலாளர் வீரப்போராட்டம்” என்ற நூல் 1957 இல் வெளியாகி, ஐம்பத்தாறு ஆண்டுகள் கழித்து அந்த அரிய நூலைக் கண்டெடுத்து, இரண்டு ஆண்டுகளுக்கு முன் நாங்கள் மலையகத்தின் மூத்த ஆளுமைகளான பி.பி. தேவராஜ், தெளிவத்தை ஜோசப், பேராசிரியர் சோ. சந்திரசேகரன் ஆகியோரால் கொழும்பில் வெளியிட்ட போது, அரசியல் அரங்கில் அதற்குக் கிடைத்த வரவேற்பு எங்களுக்குப் புதிய ஊக்கத்தைத் தந்தது.

வீரகேசரி வார வெளியீட்டில் வெளிவந்த அமரர் சாரல்நாடனின் “வானம் சிவந்த நாட்கள்” 2022 இல், நூல் வடிவம் பெற்றபோது, மலையகத் தொழிற்சங்கப் போராட்டத்தின் ஒளி பொருந்திய பக்கங்கள் சுடர்விட்டன. தொழிற்சங்கப் போராட்டத்திற்காகத் தூக்கில் தொங்கிய ரா. வீராசாமி, ஐ. வேலாயுதம் ஆகியோரின் வரலாற்றை மிக விரிவாக, துல்லியமாகப் பதிவு செய்த மு. நித்தியானந்தன் அவர்களின் நீண்ட முன்னுரை, தொழிற்சங்கப் போராட்ட சரித்திரத்திற்குக் கிடைத்த அரும்பெரும் பொக்கிஷமாகும்.

மாத்தளை பெ. வடிவேலன் எழுதிய “வல்லமை தாராயோ?” என்ற சிறுகதைத் தொகுப்பு சென்ற ஆண்டு தமிழகத்தில் வெளியாகி, டாக்டர் எம்.ஜி.ஆர் ஜானகி கல்லூரி முனைவர் டாக்டர் குமார் ராஜேந்திரனின் ஒரு லட்சம் ரூபா விருதினைப் பெற்று, மலையக எழுத்திற்குக் கடல் கடந்த அங்கீகாரத்தைத் தேடித் தந்தது.

இந்த ஆண்டு மாத்தளை மலரன்பன் சிங்களத்திலிருந்து தமிழில் மொழிபெயர்த்த உலகச் சிறுகதைகளான “கொலுஷா” (பிறமொழி சிறுகதைகள்) என்ற தலைப்பில் நாங்கள் வெளியிட்ட போது, சிங்கள - தமிழ் இலக்கிய நல்லுறவுக்குப் பாலமாகவும் பலமாகவும் அமைந்தது என்பதற்கு மாத்தளைச் சிங்கள எழுத்தாளர்கள் தங்கள் மாநாட்டில் அந்த நூலுக்கு வழங்கிய கௌரவம் பெருஞ் சாட்சியமாகும்.

மலையக இலக்கியப் பேராசான் மு. நித்தியானந்தன் எழுதிய “மலையகச் சுடர்மணிகள்”, “மலையக இலக்கியம்: சிறுமை கண்டு பொங்குதல்” என்ற இரண்டு நூல்கள் இவ்வாண்டு வெளியாகி, மலையக இலக்கியத்தின் அருமை பெருமைகளை தமிழ் கூறும் நல்லுலகெங்கும் எடுத்துச் சென்றுள்ளது. இதில் மலையக சுடர்மணிகள் தொகுதியில் மலையகத்தின் 18 ஆளுமைகள் பற்றிய வரலாற்றுக் குறிப்புகளும், “மலையக இலக்கியம்: சிறுமை கண்டு பொங்குதல்“ என்ற நூலில் மலையகத்தின் 22 ஆளுமைகள் பற்றிய வரலாற்றுக் குறிப்புகளும் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

மலையகத்தின் மூத்த எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப் அவர்களின் எமக்கு கிடைத்த ஐம்பத்தொன்பது சிறுகதைகளையும் தொகுத்து, அவர் வாழும் நாளிலேயே அவரது கரங்களில் சமர்ப்பிக்க எண்ணியிருந்தோம். கதைகளை அவர் படித்து பிழைகளை திருத்தி கொண்டிருந்த நேரத்தில் அவர் எம்மைவிட்டு பிரிந்தது பெரும் துரதிருஷ்டமாகும். “தெளிவத்தை ஜோசப் கதைகள்” என்ற தலைப்பில் 476 பக்கங்களில் மு. நித்தியானந்தனும், எச்.எச். விக்ரமசிங்கவும் வெளியிட்டிருக்கும் தொகுப்பு மலையக நூல் வெளியீட்டில் தனி அத்தியாயம் பதிக்கிறது.

எதிர்வருங்காலங்களில் நாம் வெளியிடவிருக்கும் “மலையகம் இங்கிருந்து எங்கே” பி. மரியதாஸ், எழுத்தாளர் அகிலன் அவர்களின் முன்னுரையுடன் சி.வி. வேலுப்பிள்ளையின் “எல்லைபுறம்”, “கோப்பிக்கிருஷிக்கும்மி ஆபிரகாம் ஜோசப், “கோ. நடேசய்யர் சில ஆய்வுக்குறிப்புகள்” மு. நித்தியானந்தன் ஆகிய மலையக நூல்களும் மலையக அரசியல், சமூக, இலக்கிய வரலாற்றில் செழுமையைச் சேர்க்கும் என்பது திண்ணமாகும்.



பெ.சந்திரசேகரன் | வே.இராதகிருஷ்ணன் | எஸ்.விஜயசந்திரன்



ராஜாராம் | புஷ்பா விஸ்வநாதன் | மு.நித்தியானந்தன்



எச். எச். விக்கிரமசிங்க

# "மகனின்" அம்மா

-- பவானி சச்சிதானந்தன் - கொழும்பு --



"இது என்னோடது ஒனக்கு தரமாட்டேன்.... ஒனக்கு வேற ஒன்னு..... அப்பாகிட்ட சொல்லி வாங்கிடு." என முகுந்தன் தன் அண்ணா மருதனிடம் பென்சில் ஒன்றுக்காக சண்டை பிடித்தான்.

"அப்பா....அப்பா....அண்ணன் என்னோட பென்சில எடுக்குறான்......" என முகுந்தன் அப்பா குமாரை அழைத்தான்.

"என்ன சண்டை போடுறீங்களா...?" என்ற வாறு தனது இரு குழந்தைகளையும் கட்டி அணைத்து இதற்காக யாரும் சண்டைப் போடுவாங்களா..? இந்த வீட்டுல இருக்கிற எல்லாருமே எல்லா பொருள்களையும் எடுக்கனும். வேலை முடிந்ததும் அந்த அந்த இடத்துல வைத்திடனும். நான் மட்டுமே பாவிக்கனும்னு சண்டை போடக் கூடாது. என்று இன்னும் பல வாறான அறிவுரைகளை குமார் தன் பிள்ளைகளுக்காக கூறினான். பிள்ளைகளும் எப்போதுமே உலகத்தில் சிறந்த அப்பாவாக மதிக்கும் குமாரின் கருத்துகளை ஏற்றுக் கொள்வார்கள்.

****************

"இங்க பாருங்க மாமியை ஒருக்கா போய் பார்த்துட்டு வாங்க. நீங்க வருசத்துல ஒருமுறைகூட பார்க்க போகாட்டி மகனாக பொறந்ததில அர்த்தம் இல்லாது போயிடும். ஒங்களுக்கு என்ன தான் கவலை. போக்கு வரத்து செலவு மட்டுமே செய்திட்டு போங்க. நீங்க போய் பார்க்கப் போவது ஒங்கட அம்மாவ. என்ன தான் ஆயிரம் ஒறவுகள் பார்த்துக் கேட்டாலும் மகனாக ஒங்க கடமையிலும் நீங்க சரியாக இருக்க வேண்டியது கட்டாயம் தானே! "நான் குமார் மகன்ட..... அம்மா" என்று மாமிபோன இடம், வந்த இடம்ன்னு எல்லா இடத்துலயும்பெருமையாகசொல்லுவாங்க. ஆனால் மகனுக்கு தான் தன்னோட அம்மா உயிரோடு இருக்காங்கன்னுநெனைக்கவே நேரம்இல்ல."....என மனைவி பத்மா தன் கணவனுக்கு எப்போதும் போல்.

அன்றும் கூறிட அதை அவன் காதில் வாங்காதவனாக வேறு பக்கமாக சிந்தனையை திசைதிருப்பிக் கொண்டவன் ஏதோ அனைத்திலும் நானே சரி என நினைத்துக் கொண்டு தன் வீட்டுக்கான பொருள்களை வாங்கிட கடைக்குச் சென்றான். தன் கணவன் குமாரை நினைக்க பத்மாவிற்கு கோபமும் ஆத்திரமுமாக எதை எப்படி எடுத்திடுவது என தெரியாது தவித்தாள். பெற்ற தாயைப் போய் பார் என்று வேறு யாரோ கூறிடும் அளவிற்கு மகன்கள் நடந்திடுவது பிழையான விடையமே அதை ஏன் குமார் விளங்கிட மறுக்குறார் என்று புரியாது கவலைப் பட்டாள்.

குமார் நல்ல குடும்பத்தில் பிறந்து வளர்ந்தாலும் அவன் சம்பாதிக்க ஆரம்பித்து, திருமணம் முடித்ததும் அவன் சுய நலக்காரனாக மாறி விட்டான். அவனால் ஐந்து சதத்துக்கு யாருக்கும் உதவி இல்லாதாகி விட்டது. தானும் தன் குடும்பமும் நன்றாக இருந்தால் போதும் என்று நினைத்தான். பிள்ளைகளுக்காக ரொம்ப அறிவுரைகள் கூறிட முயல்வான்.

தனது தாய் அவனை பார்க்க ஏங்குவது அறிந்தும் உள்நாட்டிலேயே மூன்று மணிநேர பயண தூரத்திலுள்ளவளை பார்த்திட பணம் செலவாகிடும் என்பதற்காக மறுக்கின்றான். பெற்ற தாயை மறந்திட கூடாது. அவளுக்கான கடமைகள் செய்யாதிருத்தல் பெரும் பாவம் என உணராமல் அவன் தன் போக்கில் இருந்தான்.

"அப்பா எனக்கு தூக்கம் வருதுல்ல... கதை சொல்லி தூங்க வைங்க" என்ற முகுந்தன் அப்பாவின் தோளில் கைகளை மாட்டி இறுக்கமாக கட்டிக் கொண்டான்.

குமாரின் கருமித்தனம் உணர்ந்திடாத பலர் அவன் மெத்த சரியானவன் என்றே நினைத்திருந்தார்கள்.

பத்மா மீண்டும் அவனை நச்சரிக்க ஆரம்பித்தாள். நான் ஒங்களுக்கு மட்டுமல்ல எல்லாருக்கும் சொல்லுறன் நாளைக்கு செய்யலாம்னு எதையும் தள்ளி வைக்க கூடாது. அதிலும் நோயாளிகளை எப்போதெல்லாம் நினைக்கின்றோமோ அந்த நேரத்துலயே போய் பார்த்திடனும். நல்லது போல் கெட்டது ஏதும் நடந்திட்டால், அடடா நானும் பார்க்க வரத்தான் இருந்தேன். அதற்குள்ளாக இப்படியாகிட்டுதே என பொய்யான காரணங்கள் சொல்லி சமாளிக்க வேண்டாம். வயது போன காலத்துல,

"வீடு போ ....போ..என்றிட காடு வா...வா...."

என அழைக்கும் தருவாயில் நலத்திற்காக தடுமாறும் வயோதிபர்களை உடனே போய் சுகம் விசாரித்து தேவையான கடமைகளை செய்து ஆசைகளை நிறைவேற்றி ஆசீர் வாதம் பெற்றிட வேண்டும். பேர பிள்ளைகளையும் கூட்டிக் கொண்டு போய் காட்ட வேண்டும். ஏன் இது எதையுமே நீங்க செய்ய மாட்டேங்கிறீங்க. நானும் ஆயத்த மாகிறேன் வாங்க வாங்க போவோம் என கட்டாயப்படுத்தினாள். அவன் பணம் செலவாகிடும் என்ற எண்ணத்தில் அவள் கூறியதை அவன் ஏற்க மறுத்தான்.

ஏதோ செய்யுங்க என அவளும் விட்டு விட்டாள்.

"அப்பா.....இன்றைக்கு எங்கட வகுப்பு டீச்சர் அம்மா..... அப்பாவை பற்றிய கதை சொன்னார். நாங்களும் விருப்பமாக கேட்டோம்..... பிறகு வகுப்புல எல்லார் கிட்டேயும் கேள்வி கேட்டார்.

அப்படியா...? என்ன கேட்டாங்க? என்றான் குமார்.

"அப்பா அம்மா சொல்லுறத யார் எல்லாம் சரியாக கேட்பீங்க....? அப்பா அம்மா எந்த மாதிரியான நல்ல விடையங்களை செய்றத நீங்க பார்த்து, நீங்க என்ன தெரிந்து கொண்டீங்க...? இப்படி இன்னும் பல கேள்விகள் கேட்டாங்க "என்றான். அதற்கு குமாரும் மகிழ்வாக எல்லாவற்றுக்கும் பதில் சொன்னீங்களா...? என்றிட ஆமாம் நான் எல்லாவற்றுக்கும் பதில் சொன்னேன். ஆனால் ஒரு கேள்விக்கு பதில் சொன்னதும் எல்லோரும் சிரித்திட டீச்சரும் அப்படிப்பட்ட சுய நலக்காரனாக இருக்க கூடாது என்று கூறினாங்க என்றிட குமாரும் மகனிடம் அப்படி என்ன கேட்டாங்க என்றான்.

யார் பெரியவனானதும் அப்பா அம்மாவை பார்த்துக் கொள்வீர்கள் என கேட்டாங்க.

நான் பார்த்துக் கொள்ள மாட்டேன் என்றேன். அதற்கு ஆசிரியர் ஏன் என்று கேட்டாங்க. அதற்கு நான் என் அப்பாவும் எங்கட அப்பம்மாவை பார்த்துக் கொள்ள மாட்டார். அப்ப நானும் அம்மா அப்பாவ பார்க்க தேவையில்ல தானே! என்று டீச்சர்கிட்ட சொன்னேன். அது சரிதானே அப்பா. ஆனால் டீச்சர் அப்படி செய்றது பிழை ....ன்னு சொல்றாங்க. அது எப்படி.... அப்பா...? என மழலை குரலில் மகன் கேட்டிட குமார் விழி பிதுங்கிட முழித்தான்.

இதைக் கேட்ட பத்மா குமாரை கோபமாக பார்த்தாள்.

"காலையில் செய்தால், மாலையில் பலன்"

என்பார்களே அதுதான் இப்போ நடந்த கதை. நீங்க சொல்லுறத எல்லாரும் கேட்கனும். எல்லாரும் சொல்லுறத நீங்க கேட்க மாட்டீங்க அப்படிதானே.

போதும் ஒங்கட உப்பு புளியில்லாத அறிவுரைகள். பேசாம ஆயத்தமாகுங்க மாமிய போய் பார்த்துட்டு வந்திட. என்று குமாரை கடிந்துக் கொண்டவள் பிள்ளைகளையும் ஆயத்தமாக்கிட தயாரானாள்.

அதற்குள் குமாருக்கு தொலைப்பேசி மணியடித்திட காதில் வைத்தவன் ஆ....என்ன சொல்லுறீங்க.... நாங்க அங்க அம்மாவை பார்க்க வரத்தானே ஆயத்தமாகிறோம். ஐயோ...! கடவுளே!!.... நான் புத்தி கெட்டு முட்டாள்தனமாய் நடந்திட்டேனே. பத்மா.... நீ சொன்னதையும் நான் ....கேக்கல. நானும்..... சுயமா செய்யனுமேன்னு நெனைக்கல்ல. அம்மா எங்களை விட்டுட்டு.... போய்ட்டாங்களாம்...... என தனது வயோதிப வயதில் சுகவீனம் அடைந்த தாயின் மரணச் செய்தி கேட்டு அழுதுத் துடித்தான் குமார்.

பத்மாவிற்கு கவலை நெஞ்சை அடைத்தது.



குறிப்பிட்ட ஒரு வயதாகும் போது அம்மாக்கள் தனது அன்பிற்கினிய மகன்களின் பெயருக்கு மதிப்பு கொடுத்து,

"நான் இந்த மகனின் அம்மா" என்று கூறிடுவதில் பெருமை கொள்கின்றார்கள். ஆனால் பிள்ளைகள் அந்த அம்மாவையே நினைக்க மறந்து விடுகின்றார்கள். என நினைக்க பத்மாவிற்கு வேதனையாக இருந்தது.

கோபத்தில் ஏதேதோ பேசினாள்.

எந்த ஒரு நல்ல விடயத்தையும் வயோதிபர்களுக்கு செய்ய நினைத்தால் அப்போதே அந்த நிமிடத்திலேயே செய்திட வேண்டும் என்பதை உங்களைப்போன்ற மகன்கள் மட்டுமல்ல மகள்களும் உணர்ந்திட வேண்டும் என பத்மா ரொம்பவே மனவேதனையுடன் குமாரை பார்த்து கூறினாள்.

*முற்றும்.*

---

## பாலன் பிறப்பைக் கொண்டாடுவோம் (கும்மி)

பெத்லேகம் நகரிலே மாட்டுத் தொழுவமதில்
பாலனாம் யேசு பிறந்துவிட்டார்
நித்திய சீவனை மாந்தருக் கீந்திட
நிமலனாம் யேசு பிறந்துவிட்டார்

பாவங்கள் போக்கவும் சாபங்கள் நீக்கவும்
பாரினில் யேசு அவதரித்தார்
சேவகங்கள் செய்தே போதனைகள் தரவே
சாத்வீக நாயகன் பிறந்துவிட்டார்.

சோதியின் ரூபமாய் ஒளிர்கின்ற பாலனை
தோத்திரம் செய்தேநாம் ஆதரிப்போம்
போதகன் பாதம் பணிந்தே நாமும்
பாசமுடன் பாடி ஆடிடுவோம்.

அகிலம் சிறக்கவே அருமை மைந்தனாம்
அமலன் யேசு பிறந்துவிட்டார்
அகிலின் வடிவமாய் அவதார புருசனாய்
அற்புதன் யேசு அவதரித்தார்.

பாலகன் யேசு பிறந்து விட்டாரென
பாசத்துடன் பாடி ஆடுங்கடி
கோலமுடன் நம்மைத் தேடியே வந்திட்ட
கோமானை நேர்த்தியாய் வாழ்த்துவோமே!

தேவாதி தேவனாம் ஏகசுதன் யேசு
தேவ குழந்தையாய் வந்துதித்தார்
பாவிகள் பாவத்தை போக்கவே இன்று
பாரினில் மானிட உருவெடுத்தார்.

விண்ணோர் வியந்திட மண்ணோர் மகிழ்ந்திட
விண்ணிலே தாரகை வழிகாட்ட
மண்ணிலே இடையரும் மகிழ்வுற்று வணங்கிட
மாதரும் கூடியே மகிழ்ந்தனரே!

மாடிமனை இன்றி ஏழைக் குடிசையில்
மன்னவன் யேசு பிறந்துவிட்டார்
ஆடவர் சேர்ந்து தோத்திரம் செய்தே
அண்ணலை வணங்கிடச் சென்றிடுவோம்.

கன்னி மரியாளின் கண்கவர் பாலனாம்
காவலன் யேசுவை போற்றிடுவோம்
கன்னித் தமிழாலே கானங்கள் இசைத்தே!
கண்மணிப் பாலனைப் போற்றுவோமே!.

ஆக்கம் ... கவிஞர் மார்க்கம் சந்திரன்
(416) 844-7453

# தேர்தல் ஆண்டு: பொருளாதார மீட்சியை சீர்குலைக்குமா?

எழுதியவர் இரங்க செயசூரிய

இந்த ஆண்டின் மூன்றாம் காலாண்டில் இலங்கையின் பொருளாதாரம் 1.6 விழுக்காட்டால் விரிவடைந்து, ஒன்றரை ஆண்டு கால சுருக்கத்திலிருந்து மெதுவாக மீண்டு வந்துள்ளது. சேவைத் துறையும், உற்பத்தித் துறையும் ஏற்றம் கண்டு வரும் நிலையில், நான்காவது காலாண்டில் 7-8 விழுக்காடு வளர்ச்சியைப் பதிவு செய்யலாம், இது முதல் இரண்டு காலாண்டுகளின் எதிர்மறையான வளர்ச்சியை ஓரளவு ஈடுசெய்யும். இறுதியாக இந்த உந்துதல் வந்துவிட்டது, இருப்பினும் முதல் பாதியில் பொருளாதார வீழ்ச்சியின் அளவைப் பார்க்கும்போது, 2024 ஆம் ஆண்டின் பொருளாதார வளர்ச்சி எதிர்மறையாக இருக்கும்.




அந்த உந்துதல் அடுத்த ஆண்டும் அதற்கு அப்பாலும் எந்த அளவுக்குத் தொடரும் என்பது வெறும் பொருளாதார செயல்பாடு மட்டுமல்ல, எல்லாவற்றுக்கும் மேலாக இது ஒரு அரசியல் கேள்வியும் ஆகும். செல்வந்த உலகின் ஏற்ற இறக்கமான வளர்ச்சிக் கணிப்புகளை கணக்கிட்டுக் கொண்டாலும், இலங்கையின் புதிய பொருளாதார மீட்சிக்கு பெரும் ஆபத்து உள்நாட்டில்தான் இருக்கும். எல்லாவற்றையும் விட மிகப் பெரியது அரசியல் சந்தர்ப்பவாதம் ஆகும், இது அடுத்த ஆண்டு- தேர்தல் ஆண்டு - அரசியல் கட்டங்களில் மிகவும் தனித்துவமான அம்சமாக இருக்கும்.

தேர்தல் ஆண்டு

அடுத்த ஆண்டு செப்தெம்பர் மாதத்திற்குள் சனாதிபதித் தேர்தல் நடைபெற வேண்டும், அதைத் தொடர்ந்து நாடாளுமன்றத் தேர்தலும் நடத்தப்பட வேண்டும். பிற்போடப்பட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தலும் ஒரு கட்டத்தில் நடத்தப்பட வேண்டும், அது எந்தவொரு தேசிய தேர்தலுக்கும் முன்னதாக நடத்தப்பட வாய்ப்பில்லை. ஏனெனில் அது வாக்காளர் உணர்வின் அளவுகோலாக இருப்பதை அரசியல் தலைமை விரும்பாது.

எல்லாவற்றிற்கும் மேலாக, எதிர்கால பொருளாதார பாதையை தீர்மானிப்பது சனாதிபதி தேர்தல் ஆகும். இது மற்றவற்றுக்கு முன்னதாகவே இருக்கும் என்பதைக் கருத்தில் கொண்டு சனாதிபதித் தேர்தலில் யார் வெற்றி பெற்றாலும், நாடாளுமன்றத் தேர்தலின் தொடக்க வேகத்தை மாற்றுவார்கள்.

முதலாவதாக, இது போட்டியாளர்களைப் பற்றியது: சனாதிபதி பதவிக்கான சாத்தியமான போட்டியாளர்களைக் கவனியுங்கள்.

தற்போதைய இரணில் விக்கிரமசிங்க ஒரு பொருளாதார மேதை என்று அவரது கூட்டாளிகளால் புகழப்படுகிறார். ஆனால் அவரது அரசியல் வாழ்க்கை முழுவதும், அது சரியானது என்பதை ஏண்பிக்கப் பல வாய்ப்புக்கள் இருந்தபோதிலும், அவர் ஒரு குறைந்த சாதனையாளராக இருந்தார். தென்கிழக்கு மற்றும் கிழக்காசியாவில் மிகவும் வெற்றிகரமான பொருளாதார சீர்திருத்தவாதிகள் தங்கள் பொருளாதார பார்வைகளை யதார்த்தமாக மாற்றியது போன்று விக்கிரமசிங்கவிடம் மந்திரக் கோல் எதுவும் இல்லை.

ஆனால், இலங்கையை அதன் மோசமான பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்டெடுத்த பெருமையை அவரிடம் இருந்து யாரும் பறிக்க முடியாது. அவரது கடந்தகால செயல்திறன் அதிக வெற்றிகரமான பன்னாட்டு சகாக்களுக்கு எதிராக ஈர்க்கமுடியாததாக இருந்தால், அவரது சமீபத்திய சாதனை அர்ஜென்டினா முதல் லெபனான் வரை இதேபோன்ற இக்கட்டான சிக்கல்களில் உள்ள சகாக்களை விட அதிகமாக இருக்கும்.



அது பாராட்டத்தக்க சாதனை. எவ்வாறாயினும், கருத்துக் கணிப்புகளில் திரு விக்கிரமசிங்க மூன்றாவது இடத்தில் பின்தங்கியுள்ளார். ஐக்கிய மக்கள் சக்தி **(SJB)** உடன் கூட்டணி இல்லாமல், சனாதிபதி பதவிக்கான தேர்தலில் அவர் நம்பத் தகுந்த வெற்றியைப் பெற வாய்ப்பில்லை. பொருளாதார முன்னேற்றம் அவரது வாய்ப்புகளை அதிகரிக்கக்கூடும் என்றாலும், இன்னும் பார்க்க வேண்டியது நிறைய உள்ளது.

கருத்துக் கணிப்புகளில் மக்கள் விடுதலை முன்னணியின் **(JVP)** அனுரகுமார திசநாயக்காவை விட இரண்டாவது இடத்தில் இருக்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும் இது பொருந்தும். இதுபோன்ற கணக்கெடுப்பு தரவுகளை முழுமையாக நாம் நம்ப முடியாது. என்றாலும், பொருளாதார நெருக்கடியின் கோரத்தாண்டவம் பொதுமக்களின் கருத்தை கணிசமாக மாற்றியுள்ளது. பைத்தியக்காரத்தனமான விடயங்கள் நடக்கக் கூடும்.

ஐக்கிய மக்கள் சக்தி யதார்த்தமான மாற்றுக் கொள்கைகளின் தொகுப்பை வழங்க வேண்டிய அவசியமில்லை. ஆயினும்கூட, அரசாங்கத்தின் கொள்கைளை கடுமையாக எதிர்ப்பதிற்குப் பதில் அது மவுனமாக நடந்து கொள்கிறது. மொட்டுக் கட்சியின் பிளவுபட்ட குழுவின் சில விளிம்பு மூலைகளிலும், அரசின் கொள்கையை எதிர்ப்பதில் மவிக இன் தொழிற்சங்கங்களும் அதன் வழக்கமான எதிரியான முன்னிலை சோசலீச கட்சியும் மவுனமாக உள்ளன.

ஐக்கிய மக்கள் சக்தி ஒரு தேர்தல் முன்னணிக்காக முன்னணி சோசலிசக் கட்சியின் அதிருப்தியாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது. அதற்குப் பதிலாக ஒரு பொதுவான சனாதிபதி வேட்பாளரை களமிறக்க ஐக்கிய தேசியக் கட்சியுடன் பேச்சுவார்த்தை நடத்த அது முன்வர வேண்டும்.

மூன்றாவதாக அனுரகுமார திசநாயக்க மக்கள் அதிருப்தி அலையில் சவாரி செய்து கருத்துக் கணிப்புகளில் முன்னிலை வகிக்கிறார். அவர் கொள்கையளவில் எதையும் வழங்கவில்லை, ஆனால் எதிர்ப்பு வாக்குகளை அறுவடை செய்துள்ளார்.

இதில் வேடிக்கை என்னவென்றால், கோட்டபய இராசபக்சே தனது கொள்கைகளால் பொருளாதாரத்தைச் சீரழித்த ஒரு நாட்டில், அதை மீட்பதற்காக வாக்காளர்கள் அதே போன்ற மற்றொரு நபரிடம் பந்தயம் கட்டுகின்றனர்.

நான்காவதாக ஸ்ரீலங்கா பொதுசன பெரமுனவின் சாத்தியமான வேட்பாளர், கோடீஸ்வர தொழிலதிபரான தம்மிக்க பெரேராவாக இருக்கலாம் என்று சில தகவல்கள் தெரிவிக்கின்றன. எவ்வாறெனினும், ஸ்ரீலங்கா பொதுசன பெரமுன சனாதிபதி வேட்பாளரை நிறுத்தும் அச்சுறுத்தலைப் பயன்படுத்தி சனாதிபதி இரணில் விக்கிரமசிங்கவிடம் இருந்து சலுகைகளைப் பெறுவதற்கான வாய்ப்புகள் அதிகம். (தொடர்ச்சி 27ம் பக்கம்)




OM NAMO NARAYANA



125 வருட பாரம்பரிய காண்டம் நாடி ஜோதிடம்

N. P. ராஜசேகர்

Now In: 16 TREELINE COURT MARKHAM
L3S 3T8 CANADA
001 416 904 6278

அனைத்து நாடுகளில் இருந்தும் தொடர்பு கொள்ளலாம்

1வது காண்டம்: ஆண் வலது பெண் இடது கை பெருவிரல் ரேகை அல்லது ஜாதகத்தை கொண்டு ஜாதகம். பெயர் தாய், மனைவி, குழந்தைகள், சகோதர, சகோதரிகள் பொதுவான பலன் கூறுவது மற்றக் காண்டங்களை எடுக்க இந்தக் காண்டத்தை முதலில் அவசியம் எடுக்க வேண்டும்.

2வது காண்டம்: பணம், கண், குடும்பம், கல்வி, வாக்கு அதிர்ஷ்டகற்கள் முதலியவைகளைக் கூறுவது.

3வது காண்டம்: சகோதர, சகோதரிகளின் எண்ணிக்கை அவர்களால் ஏற்படும் நன்மை தீமைகளைக் கூறுவது.

4வது காண்டம்: தாயார், மனை, நிலங்கள், வாகனம் வாழ்க்கையில் அடையும் சுகங்கள் மற்றும் மகிழ்ச்சிகளைக் கூறுவது.

5வது காண்டம்: குழந்தைகளின் பிறப்பு. புத்திரர்களால் ஏற்படும் நன்மைகள் குழந்தைகள் இல்லாததற்குக் காரணமும் கூறுவது.

6வது காண்டம்: வாழ்க்கைகளில் ஏற்படும் விரோதி, வியாதி, கடன், வழக்கு, எதிரிகளால் ஏற்படும் தொல்லைகள் முதலியவைகளைக் கூறுவது.

7வது காண்டம்: திருமண வாழ்க்கை, திருமணக்காலம், திருமணத்தைப் பற்றிய சில அடையாளக் குறிப்புகள் திருமணக் காலத்தைக் கடந்த காரணம், பொதுவான பலன்களும், திருமணம் ஆகியிருந்தால் கணவன் (அ) மனைவியைப் பற்றி கூறுவது.

8வது காண்டம்: ஆயுள்கால நிர்ணயம், நடுநடுவே ஏற்படும் கண்டம் விபத்து முதலியவைகளைக் கூறுவது.

9வது காண்டம்: தகப்பனார், செல்வம், யோகம், ஆலயதரிசனம், தர்மம், குருவினிடத்து உபதேசம் பெறுதல் முதலியவைகளைக் கூறுவது.

10வது காண்டம்: தொழில், வியாபாரம், உத்தியோகம், எந்த வியாபாரம் அல்லது தொழில் செய்தால் அதிக நன்மை கிடைக்கும் என்பதைக் கூறுவது.

11வது காண்டம்: இலாபம் எந்தெந்த வகையில் கிடைக்கும் என்பதையும், 2வது திருமணம் அதனால் அடையும் நன்மைகளையும் கூறுவது.

12வது காண்டம்: செலவு எவ்வகையில் ஏற்படும் என்பதையும், மோட்சம் அடுத்த பிறவியில் பிறக்கும் இடம், வாழும் தன்மை வெளிநாட்டுப்பயணம் முதலியவைகளையும் கூறுவது.

பரிகார காண்டங்கள்

13வது சாந்தி காண்டம்: முற்பிறவியில் பிறந்த இடம், செய்த நன்மை, தீமை அதனால் தற்போது அனுபவிக்கும் கஷ்டங்கள் அதை நீக்குவதற்கு உரிய பரிகாரமும் முதலியவைகளைக் கூறுவது.

14வது கீட்சை காண்டம்: மந்திரம், எந்த மந்திரத் தாயத்து செய்து அணிந்து கொண்டால் தன்டைய காரியமும் குடும்ப காரியமும் வெற்றியடையும் என்பதைக் கூறுவது.

15வது ஔஷத காண்டம் : வியாதிகளுக்கு எந்த மருந்து அல்லது மூலிகை சாப்பிடலாம் என்பதையும், சாப்பிடும் வகைகளையும் பத்திரங்களையும் விபரமாகக் கூறுவது.

இவையன்னியில் ஞான காண்டமும், திசாபுத்தி காண்டமும், பிரச்சினை காண்டமும், மகாசிவ வாக்கியமும் உள்ளது

குறிப்பு : ஜாதகம் அல்லது பிறந்த குறிப்பு உள்ளவர்கள் அதை கொண்டு வருவது நலம்.

# இலங்கையின் மன நோயாளிகளுக்கான சிகிச்சை குறித்து மனித உரிமைகள் ஆணைக்குழு ஆழ்ந்த கவலை

இலங்கையில் மன நோயாளிகள் மிகக் கடுமையான நெருக்கடிகளை எதிர்கொள்கிறார்கள் என்று மனித உரிமைகள் ஆணைக்குழு வெளியிட்டுள்ள அதிர்ச்சியளிக்கும் அளிக்கும் வகையிலான அறிக்கை ஒன்று கூறுகிறது. மன நோயாளிகளும் அளிக்கும் படும் சிகிச்சையில் சில நடவடிக்கைகள் மற்றும் வசதிகள் இல்லாமை "சித்திரவத்தைக்கு ஒப்பாகும்" என்றும் அந்த அறிக்கை சாடியுள்ளது.

மன நோயாளிகளின் மனித உரிமைகள் மீறப்படுவது தொடர்பில் தமது ஆழ்ந்த கவலையை வெளியிட்டுள்ள இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, அவர்களின் நல்வாழ்வு தொடர்பு புதிய வழிகாட்டு நெறிமுறைகளை வெளியிட்டுள்ளது. அதன் இடைக்கால அறிக்கை மற்றும் வழிகாட்டல்கள் சர்வதேச மனித உரிமைகள் தினமான டிசம்பர் 10ஆம் திகதி அன்று வெளியானது.

அந்த இடைக்கால அறிக்கையில் மனநலம் தொடர்பில் நாட்டில் புதிய சட்டமொன்று இயற்றப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

இலங்கையின் தேசிய மனநல நிறுவனத்தில் ஊழியர்களின் தவறான நடவடிக்கைகள் மற்றும் நிர்வாகம் தொடர்பில், அந்த ஆணையத்திற்கு கிடைக்கப்பற்ற முக்கிய முறைப்பாடுகளை அடுத்தே அவர்களின் இந்த கவலையும் அறிக்கையும் வெளியாகியுள்ளது.

அவர்களது கண்டுபிடிப்பில் சில விடயங்கள் அதிர்ச்சியளிக்கக் கூடிய வகையில் நோயாளிகளை இழிவுபடுத்தும்வகையில் இருந்துள்ளது. கண்காணிப்பு கமராக்கள் இல்லாத இடங்களில் ஊழியர்கள் நோயாளிகளை அடிப்பது போன்ற முறைப்பாடுகள் அந்த ஆணையத்திடம் பதிவு செய்யப்பட்டிருந்தன. அதுமாத்திரமின்றி ஊழியர் ஒருவரின் நடவடிக்கை காரணமாக நோயாளி ஒருவர் உயிரழந்ததும் அவர்களது அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தமக்கு அளிக்கப்பட்ட முறைப்பாடுகளை அடுத்து இலங்கை மனித உரிமைகள் ஆணையம், மன நோயாளிகளில் நலன் மற்றும் சுதந்திரம் குறித்து முன்னெடுத்த உண்மையை கண்டறியும் நடவடிக்கையின் ஒரு பகுதியாகவே இந்த அறிக்கை வந்துள்ளது.

இதையடுத்து அந்த ஆணையம் சுகாதார அமைச்சு, தேசிய மனநல நிறுவனம், இலங்கை பொலிஸ் மற்றும் சிறைச்சாலை திணைக்களம் ஆகியவற்றிற்கு புதிய வழிகாட்டு நெறிமுறைகளை விடுத்துள்ளது.

"சர்வதேச மருத்துவ தரம் மற்றும் அரசின் மனித உரிமைக் கடப்பாடுகள் ஆகியவற்றின் அடிப்படையில், மனநலச் சட்டம் ஒன்று இயற்றப்படுவதற்கு உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்" என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தனது வழிகாட்டு நெறிமுறைகளின் ஒரு பகுதியாகப் பரிந்துரை செய்துள்ளது.

பதினோரு பக்கங்கள் கொண்ட விரிவான இந்த ஆவணம் அந்த ஆணையத்தின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. பின்னர் இது பொதுவெளியிலும் வெளியானது.

குறிப்பிடத்தக்க கவலைகள் என்று அந்த ஆணையம் கூறுவது தொடர்பில், மனநல நோயாளிகளின் புனர்வாழ்வு காலத்தில் அரசு அவர்களின் நல்வாழ்வு பேணப்டுவதை உறுதி செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணையம் எழுப்பியுள்ள கவலைகளில், நோயாளிக்கான தண்ணீர் வசதிகள், உணவு, இடவசதி, மருத்துவமனைகள் மற்றும் பராமரிப்பு மையங்களில் சிகிச்சை மற்றும் அதை அளிப்பவர்களின் நடவடிக்கை ஆகிய விடயங்கள் பிரதானமாக உள்ளடங்கியுள்ளன. மன நோயாளிகளின் மனித உரிமைகள் தொடர்ச்சியாக மீறப்படுவது குறித்து தனது ஆழ்ந்த கவலையை எழுப்பியுள்ள அதே வேளை "பல சமயங்களில் உரிய கல்வித்தகுதி இல்லாதவர்கள் அவர்களுக்கு மருத்துவம் அளிக்கின்றனர்" என்று

"ஆண் நோயாளிகள் தங்கியுள்ள பிரிவுகளில் பெருபான்மையாக பெண் தாதியரே உள்ளனர், அந்த சமயத்தில் நோயாளிகளின் பராமரிப்பு என்பது உரிய பயிற்சி இல்லாத உபசேவகர்கள் மூலமே செய்யப்படுகிறது. எனவே நோயாளிகளின் பராமரிப்பு எந்தளவிற்கு காத்திரமாக உள்ளது என்பது பற்றி கேள்வி எழுந்துள்ளது. அதுமட்டுமின்றி பெரும்பாலான நேரங்களில் உபசேவகர்கள் நோயாளிகளை கையாள்வதில் நிலவும் வழிகாட்டல்களை ஏற்று நடக்க மறுக்கின்றனர்".

முறையாக நிர்வகிக்கப்படாத சிக்ச்சைக்கு அப்பாற்பட்டு, மாற்று மருத்துவ சிகிச்சைகள் அளிக்கப்படுவது குறித்தும் கவலைகள் எழுப்பப்பட்டுள்ளன. அப்படியான மாற்று சிகிச்சை முறைகள் பக்கவிளைவுகளை ஏற்படுத்தும் என்ற குற்றச்சாட்டுகளும் உள்ளன.

"மருத்துவம் அளிப்பதிலுள்ள குறைபாடுகள் தொடரும் அதேவேளை, தேசிய மனநல நிறுவனத்தில் பல மருந்துகள் தரமில்லாமலும் இருந்துள்ளன. அந்த மருந்துகள் கையிருப்பில் இல்லாத போது, சிகிச்சைக்கு மாற்று வழிமுறைகள் கையாளப்படுகின்றன. எனினும், உயர்தர மருந்துகள் கையிருப்பில் இல்லாத நிலையில், இப்படியான மாற்று மருத்துவ வழிமுறைகளில் கூடுதலான பக்கவிளைவுகள் உள்ளன".

இவை மட்டுமின்றி மனநல நோயாளிகளுகான மருத்துவ சிகிச்சைக் கட்டணமும் கவலையை ஏற்படுத்தி நெருக்கடியை மேலும் அதிகரிக்கச் செய்கிறது என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

உயர்ந்த கட்டணம் காரணமாக, மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்ட நோயாளிகள் மருந்துகளை வாங்க சிரமப்படுவதால், அவர்கள் மீண்டும் நோய்வாய்ப்பட்டு மீண்டும் மருத்துவமனையில் தங்கி சிகிச்சைப் பெறும் சூழல் ஏற்படுகிறது.

தண்ணீர் வசதி மற்றும் சுகாதாரம் ஆகிய இரண்டும் முக்கியமான கவலைகளாக அந்த ஆணையத்தால் அடையாளம் காணப்பட்டுள்ளது. மன நோயாளிகள் அறியாமல் தமது உடைகள் மற்றும் படுக்கை விரிப்புகளை அழுக்காகிவிடக் கூடும், அதை உடனடியாக சுத்தம் செய்ய தடையில்லா தண்ணீர் விநியோகம் தேவை. இந்த "தொடர்ச்சியான தண்ணீர் விநியோகம்" தேசிய மனநல நிறுவனத்தில் சீராக இல்லாது மட்டுமின்றி அவர்களின் தண்ணீரை சேமித்து வைக்க வசதியும் இல்லை. அது பல அசௌகரியங்களை ஏற்படுத்துகிறது, அதிலும் குறிப்பாக தண்ணீர் விநியோகம் நிறுத்தப்படும் போது அது மேலும் சிக்கலாகிறது என்று அந்த அறிக்கை மேலும் கூறுகிறது.

தொடர்ச்சியாக தண்ணீர் வசதி இல்லாதொரு சூழலுக்கு அப்பாற்பட்டு, நுளம்புக்கடியிலிருந்து நோயாளிகளைப் பாதுகாப்பதும் தேசிய மனநல நிறுவனத்தில் சவாலாக உள்ளது. தற்கொலை அபாயம் காரணமாக நுளம்புவலைகள் பயன்படுத்தப்படுவதில்லை.

"முன்னர் நுளம்பு மருந்து அடிப்பது போன்ற தொழில்நுட்பங்கள் கையாளப்பட்டாலும், இப்போது அப்படி எந்த நடவடிக்கையும் எடுக்கப்படுவதில்லை. இது மட்டுமல்லாமல் தடையவியல் பிரிவில் மூட்டைப்பூச்சிகளின் இருப்பும் தொடரும் ஒரு பிரச்சனையாக உள்ளது".

மன நோயாளிகளை சமாளிப்பதிலும் அவர்களுக்கு மருத்துவம் அளிப்பதிலும் மொழிப் பிரசனை ஒரு பெரும் தடங்கலாக உள்ளது. தேசிய மனநல நிறுவனத்திலுள்ள பெரும்பாலான ஊழியர்கள் தமிழ் பேசும் நோயாளிகளிடம் தொடர்பாடல்களை மேற்கொள்வதில் சவால்களை எதிர்கொள்கின்றனர் என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கூறுகிறது. நோயாளிகள் என்ன கூறுகிறார்கள் என்பதை ஊழியர்கள் புரிந்துகொள்ள முயன்றாலும், தொடர்பாடல் பிரச்சனைகள் நிலவுகின்றன என்று கூறும் அந்த ஆணையம் இப்போது வெளியிட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளில் ஊழியர்களுக்கான தமிழ் மொழிப் பயிற்சி அளிப்பதையும் பரிந்துரை செய்துள்ளது.

தேசிய மனநல நிறுவனம் இதர நோயாளிகளிடம் உதவி கோரும் அதே வேளை, உபசேவகர்கள் "கூகிள் மொழிபெயர்ப்பு" போன்ற தொழில்நுட்பங்களையும் பயன்படுத்துகின்றனர் என்றும் அந்த ஆணையம், "எனினும் நோயாளிகன் தேவைகளை துல்லியமாக அறிந்துகொள்ள அவர்களால் முடியுமா என்பது தெளிவாக இல்லை" என்றும் கூறியுள்ளது.

மன நோயாளிகளை கையாள்வதில் இப்படியான சவால்கள் இருக்கும் சூழலில், இலங்கையில் "புதிய மன்நல மருத்துவச் சட்டம்" ஒன்று தேவை என்றும் அச்சட்டம் சர்வதேச மருத்துவ தரத்திற்கு அமைவாக இருக்க வேண்டும் என்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணையம் வலியுறுத்தியுள்ளது. இந்த விடயம் இலங்கையின் சுகாதார அமைச்சிற்கான முன்னுரிமை வழிகாட்டலாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அங்கொடையிலுள்ள தேசிய மனநல நிறுவனத்திலுள்ள நிர்வாகக் கட்டமைப்பு தொடர்பிலும் அந்த வழிகாட்டல்கள் கவனம் செலுத்தியுள்ளன. இலங்கையிலேயே மனநல மருத்துவத்திற்கான மிகப்பெரிய மையமாக அங்கொட மருத்துவமனை உள்ளது என்றும் அங்கேயே அதிகப்படியானவர்கள் உள்நோயாளிகளாக அனுமதிக்கப்படுகின்றனர்.

தேசிய மனநல நிறுவனத்தில் நோயாளிகள் மற்றும் அவர்களது குடும்பத்தாருக்கு மேம்பட்ட உணவு வழங்கல் மற்றும் குறைதீர்க்கும் வழிமுறைகளை அமல்படுத்துவது ஆகியவையும் மனித உரிமைகள் ஆணையத்தால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

அவர்கள் விடுத்துள்ள விழிகாட்டல்களின் ஒரு பகுதியாக அந்த மருத்துவமனையில் பொலிஸ் காவல் மையம் ஒன்றையும், மனநோய் உள்ள சிறைக்கைதிகளின் பாதுகாப்பை உறுதி செய்ய சிறைக்காவலர்கள் அங்கொட மருத்துவமனையில் இருப்பதையும் உறுதி செய்ய வேண்டும் என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கூறியுள்ளது.

---

## கடந்தவையும் கடப்பவையும் - (81)

*ஊகத்தில் பழங்கதையை பக்குவமாய்ச் சொன்னபோதும்*
*கூடவந்தவர்கள் எடுக்கவில்லை காதுகளில் - அவர்கட்கு*

*நாளைய திருமணம் வேளையோடு முடியவேனும் - திரும்பவும்*
*மாலையிலே திருவிழாப் பார்க்கவேனும் நல்லூரில்*

*ஆருடைய சிரமமும் அவர்களுக்கு பொருட்டல்ல*
*நேரமது தவறாது நினைத்தபடி நடக்கவேனும்*

*நாளையும் வரவே அதிகாலையிலே வெளிக்கிட்டு*
*வேளையோடு போயாச்சு அழைத்ததைப் போல*

*உரிமையும் உரித்தும் உடையவர் ஆதலால்*
*வெறுமனே இருக்க முடியாது எழும்பாமல் - முன்னைய*

*அனுபவம் உள்ள பெரியவர் இல்லா*
*பொழுதொன்றை உணர்ந்து வருந்திப் - பின்*

*இன்றைய பெரியவர் தெரிந்ததைச் செய்யவே*
*நன்றாக நடந்தன வீட்டு நிகழ்வுகள்*

*'தலைப்பிள்ளை ஆண்பிள்ளை பெற்றவர் பெரியவர்*
*தலைப்பாகை கட்டி நடத்திட வேண்டுமாம் நல்லதை' - அன்று*

*பாட்டி சொன்னது ஞாபகம் வந்தது - அன்று*
*பெண்பிள்ளை பெற்றோரைப் புறக்கணித்ததால் - இன்று*

*போட்டோக்காரர் படுத்திறார் பாடாய்*
*தட்டுக்களை எடுக்கச்சொல்லி வரிசையாய் நிக்கச்சொல்லி*

*அப்படியே போய் வானிலும் ஏறச்சொல்லி - என்று*
*சொற்பமேனும் இடைவெளிதராப் படப்பிடிப்பு - அவரிடம்*

*தப்பியது போதுமென்று வானிலே ஏறி*
*அப்படியே வருசையாய் இருந்தபோது பட்டபாடு - பக்கத்து*

*தட்டில் இருந்த முறுக்கு எட்டியெட்டிப் பார்க்க - அதை*
*கிட்டவராமல் தட்டிவிடப் பட்டபாடு*

*முப்பத்திரண்டுக்கு வாங்கியது முதன்முதற் கட்டியது - நேற்று*
*நித்திரை கொள்ளாமல் இரவிரவாய் அவிட்டும்வேறு தைத்தது*

*இரண்டுதரமேனும் கனடாவில் கட்டவேனும்*
*இரண்டொரு முறுக்குப் பட்டாலே போதும் - அதுவென்ன*

*பெரியம்மா சின்னம்மா சேர்ந்துசெய்த பலகாரமா?*
*தெரிஞ்ச கடையில வாங்கியதாம் - பக்கத்து*

*அக்கா சொல்கிறார் விலைகளையும் வரிசையாக*
*'அக்காலத்தில் இருந்தவர்கள் எல்லாமும் தெரிந்தவர்கள் - இனி*

*எக்காலமும் இதுதான் நிலை' என்கிறார் சலிப்பாக*
*'இக்காலத்தில் இலகுவான வழியிருக்கு கற்பதற்கு - நாங்கள்*

*அக்கறை இல்லாமல் இருபதற்கு யாருமே பொறுப்பல்ல' - இன்னொருவர்*
*இக்கதையைக் கேட்டபோது புரிகிறது இருவரும் தூரமென்று*

*'பள்ளிச்சிறாரை ஏற்றவேண்டும் அடுத்த ஓட்டம் உள்ளது'*
*மெள்ளமாயச் சொல்கிறார் வண்டியை ஓட்டுபவர்*

*'பெருமளவில் பள்ளமில்லா பாதையிலே நாங்கள்*
*அரும்பொட்டில் இருந்துவர இதுதானோ காரணம்?*

*ஏன் இரண்டு தோணிகளில் உங்களின் கால்?*
*வீணான விபத்து எல்லாம் இதனால்த்தான் வருகிறது' என*

*சொல்லுகிறார் இன்னொருவர் ஓட்டுனர்க்குக் கேட்காமல் - அதற்கிடையில்*
*பார்க்க வேண்டிய பல வீதிகளும் ஒழுங்கைகளும்*

*கண்படாமல் ஓடிப்போக கோயிலுக்கு முன்ஒழுங்கை*
*கண்முன்னே கணப்பொழுதில் தெரிந்திடவே - அங்கு*

*இறங்குதற்கு ஆயத்தமாய் எல்லோரும் காத்திருக்க*
*கணக்காக முகப்பை அண்டி நிற்கிறது அந்தவண்டி........*

(தொடரும்)

-- உமா மோகன் -- மொன்றியால் - கனடா --

கனடிய செய்திகள் Canadian News

# கனடிய பல்லின பத்திரிகையாளர்கள் கழகத்தின் சமூக சேவையாளர்களுக்கான இவ்வருடத்தின் விருதுகளைப் பெற்ற "கனடா உதயன்" நண்பர்களாம், தொழிலதிபர் திரு. தேவதாஸ் சண்முகலிங்கம் (தாஸ்) மற்றும் மொன்றியால் எழுத்தாளர் வீணைமைந்தன் சண்முகராஜா ஆகியோர்



வெள்ளிக்கிழமை 15ம் திகதி கனடாவின் ரொறன்ரோ மாநகரில் அழகிய மண்டபம் ஒன்றில் இடம்பெற்ற கனடிய பல்லின பத்திரிகையாளர்கள் கழகத்தின் சமூக சேவையாளர்களுகள் மற்றும் பத்திரிகைத்துறை ஆசிரியர் ஆகியோர்களுக்கான விருதுகள் வழங்கும் விழா சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கழகத்தின் தலைவர் திரு. தோமஸ் சாரஸ் அவர்கள் தனது குழுவினருடன் அனைத்து ஏற்பாடுகளையும் சிறப்பாகச் செய்திருந்தார்.

இவ்வருடத்தின் சமூக சேவையாளரம்களுக்கான விருதுகளைப் பெற்ற "கனடா உதயன்" நண்பர்களாம், தொழிலதிபர் திரு. தேவதாஸ் சண்முகலிங்கம் (தாஸ்) மற்றும் மொன்றியால் எழுத்தாளர் வீணைமைந்தன் சண்முகராஜா ஆகியோரை அங்கு கூடியிருந்த நண்பர்கள் அனைவரும் வாழ்த்தி மகிழ்நதனர்.

குறிப்பாக கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம் மற்றும் "உலகத் தமிழர்" பத்திரிகையின் பிரதம ஆசிரியர் கமல்வாசன் ஆகியோர் சகிதம் அங்கு கூடியிருந்த பத்திரிகைத்துறை மற்றும் வானொலி மற்றும் தொலைக்காட்சித்துறை நண்பர்கள் அனைவரும் விருதுகளைப் பெற்ற இரு வெற்றியாளர்களையும் வாழ்த்தி மகிழ்ந்தனர்.

பிரதம விருந்தினராக அங்கு வருகை தந்திருந்த ஒன்றாரியோ மாகாணத்தின் கல்வி அமைச்சர் ஸ்டீபன் லெச்சே அவர்களும் அங்கு வந்திருந்த தமிழ் பேசும் பத்திரிகையாளர்களையும் சமூகத் தலைவர்களையும் பாராட்டினார்.
















மாகாண பாராளுமன்ற உறுப்பினரும் போக்குவரத்து அமைச்சின் இணை அமைச்சருமான விஜே தணிகாசலம் அவர்களும் அங்கு வருகை தநதிருந்தார்.

அங்கு வருகை தந்திருந்த தமிழ் பேசும் ஊடக நண்பர்கள் அனைவருக்கும் கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியரும் கனடிய பல்லின பத்திரிகையாளர்கள் கழகத்தின் சிரேஸ்ட உபு தலைவர்களில் ஒருவருமான லோகேந்திரலிங்கம் நன்றி தெரிவித்தார்.

**- படங்களுக்கு நன்றி ஜிரிஏ ஊடகம் கெங்கா அவர்களுக்கு**

# கனடாவில் நடைபெறவுள்ள சகோதரக் கலைஞர்கள் வீணை அரங்கேற்றம்



நாளை 23-12-2023 சனிக்கிழமை கனடாவில் நடைபெறவுள்ள Peruthekka Jayaratnam, Priyanka Jayaratnam ஆகிய சகோதரக் கலைஞர்களின் வீணை அரங்கேற்றத்தினை சிறப்பிக்க அவர்கள் குருவும் நாத வீணா இசைப் பயிற்சிக் கூடத்தின் அதிபருமான ஸ்ரீமதி குகணேஸ்வரி சத்தியமூர்த்தி அவர்களும், பெற்றோர்களான திரு.திருமதி. ஜெயரட்ணம் ஆகியோர் அன்புடன் அழைக்கின்றனர்.

**அரங்கேற்றம் நடைபெறும் திகதி:**
December 23, 2023 at 5:00 PM

**அரங்கேற்றம் நிகழும் மண்டபம்:**
Chinese Cultural Centre
of Greater Toronto
5183 Sheppard Ave East, Scarborough, ON M1B 5Z5

செல்விகளின் அரங்கேற்றம் சிறப்புற நடைபெற கனடா உதயன் பத்திரிகை நிறுவனம் வாழ்த்துகின்றது.






## தேர்தல் ஆண்டு: பொருளாதார மீட்சியை சீர்குலைக்குமா?

(24ம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்ப்பதற்கா எதிர்ப்பது: மாற்று வழி எங்கே?
இரண்டாவது கொள்கைகளைப் பற்றியது: தேர்தல்கள் மாற்றுக் கொள்கைத் தேர்வுகளை விவாதிக்க ஒரு தளத்தை வழங்குவதாகக் கருதப்படுகிறது.

எவ்வாறெனினும், பொருளாதாரத்தை உறுதிப்படுத்துவதற்கான தற்போதைய பன்னாட்டு நாணய நிதியத்தின் **(IMF)** வழிகாட்டப்பட்ட சூத்திரத்திற்குப் பகுத்தறிவு ரீதியான மாற்று எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. எனவே, உடனடி கேள்வி என்னவென்றால், பன்னாட்டு நாணய நிதியத்தின் இலக்குகளைத் தாக்குவதற்கு குறைவான வலியுடைய வழி இருக்கிறதா என்பதுதான். அத்தகைய வலி தற்காலிகமானது. உள்நாட்டுப் போட்டித்தன்மையை அதிகரிப்பது, தொழிலாளர் சந்தையின் உற்பத்தித்திறனை மேம்படுத்துவது, மனித மூலதனத்தைப் பயிற்றுவிப்பது, தனியார் பல்கலைக்கழகங்களை உருவாக்குவது, உலகளாவிய விநியோக சங்கிலிகளுடன் ஒருங்கிணைப்பது போன்ற பன்னாட்டு நாணய நிதியத்தின் வழிகாட்டுதலுக்கு அப்பாற்பட்ட கொள்கைகள் பரந்த மற்றும் மிகவும் பொருத்தமான கேள்வியாக இருக்கும்.

ஆனால், அதை ஒத்த எதையும் தொலைதூரத்தில் நீங்கள் காண்பது அரிது. இலங்கையர்கள் கொள்கைகளுக்கு வாக்களிக்காததே இதற்குக் காரணமாக இருக்கலாம். வாக்குறுதிகளுக்காக வாக்களிக்கிறார்கள்.

ஆயினும்கூட, பன்னாட்டு நாணய நிதியத்தால் கட்டாயப்படுத்தப்பட்ட வருவாய் நடவடிக்கைகளுக்கு இடைவிடாத எதிர்ப்பு உள்ளது. மேலும் இலங்கை இலங்கையாக இருப்பதால், நெருக்கடியான பொருளாதார சிகிகளுக்குத் தீர்வு காண்பதற்கு யதார்த்தமான மாற்றீட்டை வழங்க வேண்டிய அவசியமில்லை. தேர்தல்கள் இந்த சுய - சேவை சந்தர்ப்பவாதத்தை அதிகரிக்கும், பொருளாதார யதார்த்தங்களை சிதைக்கும். மற்றும் எதிர்கால பொருளாதார சீர்திருத்தங்களை கடுமையாக சவாலுக்கு உட்படுத்தும்.

ஸ்ரீலங்கா பொதுசன பெரமுனவின்(***SLPP)*** திறமையான இளம் அமைச்சரவை அமைச்சர்களில் பெரும்பாலானவர்களால் ஆதரிக்கப்படக்கூடிய திரு விக்கிரமசிங்க, வணிக நட்பு மற்றும் பொருளாதாரத்தை தாராளமயமாக்குவதை நோக்கமாகக் கொண்ட பரந்த கொள்கைகளின் தொகுப்பை முன்வைக்கிறார். ஆனால் அவருக்கு அவசர உணர்வு இல்லை. ஐக்கிய மக்கள் சக்தி அந்தக் கொள்கைகளிலிருந்து திசைதிருப்ப வேண்டிய அவசியமில்லை - அவர்கள் இன்னும் ஒரு மாற்றுத் திட்டத்தை வெளியிடவில்லை

மக்கள் விடுதலை முன்னணி ஒரு வேறுவிதமான - வித்தியாசமான - அரசியல் கட்சி. அவர்கள் எல்லாவற்றையும் எதிர்க்கிறார்கள். வெறும் விளம்பரத்திற்காக மட்டும் அல்ல. இதில் இருந்து ஐக்கிய மக்கள் சக்திக்கும் விலக்கு இல்லை. மக்கள் விடுதலை முன்னணியின் கருத்தியல் சார்பு, அவர்களின் கூடாரத்திற்கு அப்பால் வெகுமக்களை கவர்ந்திழுக்கும் வகையில் தற்போது மௌனமாக இருந்தபோதிலும், ஒரு வரையறுக்கப்பட்ட பாத்திரத்தை வகிக்கிறது. மக்கள் விடுதலை முன்னணி நாட்டை வழிநடத்தும் முனைப்பு ஏற்பட்டால் இந்த முரண்பாடுகள் நடைமுறைக்கு வரும்.

அதுவரை, பொருளாதாரத்தை புத்துயிர் பெறச் செய்வதற்கான அற்பமான, சுய - சேவை திருத்தங்களை நீங்கள் கேட்கிறீர்கள். ஒன்று, ஊழலை ஒழிப்பது. அதனால் , பொருளாதாரம் வளர்ச்சி அடையும். ஊழல் என்பது தனி நபர்களின் செயற்பாடு மட்டும்மல்ல, மாறாக அதிக ஒழுங்குபடுத்தப்பட்ட அதிகாரத்துவ அமைப்புகளின் செயல்பாடு என்று கருதுவது ஒரு உயர்ந்த வாக்குறுதியாகும். ஊழல் விரும்பத்தகாதது, ஏனெனில் அது தேசிய கொள்கையை சிதைக்கிறது. மற்றும் பொதுமக்களின் பணத்தைக் கொள்ளையடிக்கிறது. இருப்பினும், பொருளாதார வளர்ச்சிக்கும் ஊழலுக்கும் இடையிலான தொடர்பு சர்ச்சைக்குரியது- பெரும்பாலான தென்கிழக்கு மற்றும் கிழக்கு ஆசிய நாடுகள் அவற்றின் உயர் வளர்ச்சி தசாப்தங்களில் சமமாக ஊழல் செய்தன.

ஊழலை ஒழிப்பது தேசிய முன்னுரிமையாக இருக்க வேண்டும். இருப்பினும், இது மட்டுமே முதலீடு அல்லது வளர்ச்சியை ஊக்குவிக்காது அல்லது சிறப்பு செயற்பாட்டு அதிகாரி ***(SOE)*** களின் சுமையைக் குறைக்காது. பொருளாதாரத்தின் ஒவ்வொரு துறையிலும் உள்ள தடைகளை நீக்க விரிவான பொருளாதார சீர்திருத்தங்களை இலங்கை நடைமுறைப்படுத்த வேண்டும். ஆனால், அத்தகைய கொள்கைகள் மக்கள் விடுதலை முன்னணிக்கும் அதன் தொழிற்சங்கங்களுக்கும் அருவருப்பானவை.

திருடப்பட்ட நிதியை மீண்டும் கொண்டு வருவதன் மூலம் அரசாங்க வருவாய் பற்றாக்குறையை தீர்ப்பது என்பது அரசியல் மேடைகளில் வெளிப்படும் மற்றொரு தவறான கருத்தாகும். இதுபோன்ற சலுகைகள் வழங்கப்படுவது இது முதல் முறை அல்ல, கடைசி முறையும் அல்ல.

பன்னாட்டு ஒத்துழைப்புடன் கூடிய ஒரு விரிவான மீட்புத் திட்டம் கொள்ளையடிக்கப்பட்ட செல்வத்தில் சிலவற்றை மீண்டும் கொண்டு வர முடியும் என்றாலும், அது கருவூலத்தில் பெயரளவிலான தாக்கத்தை மட்டுமே ஏற்படுத்தும். இலங்கையின் பொருளாதார நெருக்கடியானது சிலரால் சித்தரிக்கப்படுவது போல, பாரிய ஊழல் மற்றும் பொது நிதியைக் கொள்ளை அடித்ததின் காரணமாக உருவானதல்ல. பொருளாதார நெருக்கடி என்பது தொலைநோக்கு பார்வையற்ற சனரஞ்சகத்தின் ஒட்டுமொத்த விளைவு. மகிந்த இராசபக்ச 2.5 பில்லியன் அமெரிக்க டொலர்களையும், கோட்டாபய இராசபக்ச 5 பில்லியன் அமெரிக்க டொலர் வெளிநாட்டு கையிருப்புகளையும் காலி பண்ணியதன் மொத்த விளைவே பொருளாதார நெருக்கடியாகும்.

பொருளாதார நெருக்கடி என்பது வளர்ச்சியை உருவாக்குவதற்கான கடின உழைப்பைச் செய்வதற்குப் பதிலாக, பொதுமக்களை திருப்திப்படுத்தும் பொருட்டு இல்லாத பொருளாதார வளங்களை வழங்குவதற்கான அரசியல் விருப்பத்தின் விளைவாகும்..

ஆனால் தேர்தல் மேடைகளில், நீங்கள் அதைக் கேட்க மாட்டீர்கள். அதற்கு பதிலாக, உரையின் பெரும்பகுதி பழைய வழிமுறைகளுக்கு திரும்புவதாக உறுதியளிக்கும். (ஆங்கில மூலம்
**- Daily Mirror. mjd; kWgjpit https://dbsjeyaraj.com/dbsj/?p=83304** என்ற இணையதளத்தில் படிக்கலாம். தமிழாக்கம்: கனடா நக்கீரன்)




# இவ்வார ராசிபலன்

**22-12-2023 வெள்ளி தொடக்கம் 28-12-2023 வியாழன் வரையும்**





**மேஷம்:** உற்சாகம் அதிகரிக்கும் வாரம். தீய எண்ணங்கள் விலகும். புதிய தொழில் வாய்ப்பு கிட்டும். பூர்வீகச் சொத்து சேரும். தொல்லைகள் விலகும். பிள்ளைகள் கல்வி மேம்படும். குடும்ப அன்யோன்யம் பெருகும். பெண்களின் தேவைகள் பூர்த்தியாகும். அரசுப்பணியில் மாற்றம் வரும். நிலையான வாய்ப்பு அதிகமாகும். நிதி நிலைமை சீராகும். வீண் வம்பு விலகும். நிர்வாக ஆதரவு உண்டு. உறவினரால் நன்மை உண்டு. அரிசி தானம் ஆயுள் விருத்தி தரும். வெற்றி கிட்டும். விவசாயம் கை கொடுக்கும். கவலைகள் அடியோடு விலகும். பணியில் உயர்வு கிட்டும். பெற்றோர்கள் நலனில் அக்கறை தேவை. குடும்ப அமைதி கூடும். சொந்தத் தொழில் அமையும். தொழிலில் மாற்றம் ஏற்படும். கடன் உதவி கிட்டும். வியாபார மந்த நிலை அகலும். பணிச்சுமைகள் குறையும். தொலைதூரப் பயணம் உண்டு. அதிர்ஷ்ட வாய்ப்பு கூடி வரும். மனைவியால் ஆறுதல் உண்டு. மகிழ்ச்சியான செய்தி வரும். நிர்வாக பொறுப்பு கூடும். வருமானம் சேரும். உடல் உபாதை தீரும். கொள்கையில் பிடிப்பு சேரும். கொடுக்கல் வாங்கலில் நன்மை உண்டாகும். உறவினர்களின் தொல்லை நேரும். பிள்ளைகளால் பெருமை சேரும். வியாபார வளர்ச்சி உண்டு. ஆன்றோர்கள் வாழ்த்துக் கிட்டும். அடிப்படைத் தேவைகள் பூர்த்தியாகும். அதிகாரியின் ஆதரவு பெருகும். ஆரோக்கியம் அபிவிருத்தி அமையும். தனவரவு பெருகும். எதிரிகள் உதிரியாகும். கல்விக்கடன் உண்டாகும். பயணம் நன்மை தரும். கடன் உபத்திரவம் குறையும். உறவினர் பாராட்டு கிட்டும். உடல்நலனில் கவனம் தேவை.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ ஏரிக்கரை பகவதி, அதிர்ஷ்ட எண்: *7,9,2,3*
அதிர்ஷ்ட நிறம்: அடர்ந்த சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,A





**ரிஷபம்:** சாதனை நிகழ்த்தும் வாரம். தெய்வப் பணியில் ஈடுபடுவீர்கள். வெளிநாட்டு வாய்ப்பு தேடி வரும். அடுத்தவர் நட்பு ஆக்கம் தரும். பெண்களின் திறமை பெருமை தரும். கற்பனை ஆற்றல் பெருகும். மாற்றங்கள் ஏற்படும். தோற்றப் பொலிவு கூடும். வேற்று மதத்தினரால் உதவி சேரும். சுபகாரியம் கூடி வரும். அரசியல் சந்தர்ப்பம் அமையும். பழைய நட்பு தொல்லைத் தரும். இல்லத்தில் நல்லவை நடக்கும். இனிய வாய்ப்பு கூடி வரும். இடமாற்றம் நன்மை தரும். புதிய வாய்ப்பு கூடும். பிரார்த்தனைகள் நிறைவேறும். ஆபரணப் பொருட்கள் சேரும். மாணவர்களுக்கு மதிப்பெண் சேரும். எண்ணிய காரியம் கூடும். எதிர்பாரா லாபம் சேரும். நடவடிக்கையில் மாற்றம் வரும். நண்பரால் சங்கடம் நேரும். பதவியில் உயர்வு வரும். வெற்றி நிலைத் தொடரும். குடும்ப கௌரவம் ஓங்கும். மற்றவர் தொல்லை நீங்கும். நன்மதிப்பு வரும். பரபரப்பான சூழ்நிலை மாறும். பெரிய திருப்பம் ஏற்படும். சகோதரியால் நன்மை உண்டு. படிப்பில் கவனம் தேவை. போட்டிகள் வெற்றி தரும். இறுகிய நிலை மாறும். பணிமாற்றம் நன்மை தரும். செயலில் வேகம் கூடும். தனவரவு உற்சாகம் கூடும். இரும்புத் தொழில் ஏற்றம் தரும். உறவினரால் செலவு உண்டு. வளம் பெருகும். சாதனைகள் ஓங்கும். சந்தோஷம் அதிகரிக்கும். வாய்ப்புக்கள் தேடி வரும். வியப்பான செய்தி வரும். கடன் பிரச்சனை தீரும். கர்மவினைகள் அகலும். உறவால் பணவிரயம் கூடும். கணவன், மனைவி சலசலப்பு ஏற்படும். எதிர்ப்புக்கள் விலகும். மனவேதனை குறையும். வாழ்வு நிலை உயரும். லாபம் திருப்தி தரும். போட்டிகள் மறையும். பொருளாதாரம் உயரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அனுமன், அதிர்ஷ்ட எண்: *4,8,9,1*
அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,R




**மிதுனம்:** சாதனைகள் படைக்கும் போதனையான வாரம். சுதந்திரமாக செயல்படுவீர்கள். வரவேற்பு கூடும். வரவுகள் பெருகும். அலைச்சலால் அசதி ஏற்படும். தொழில் மாற்றம் ஏற்படும். வேலைப்பளு அதிகரிக்கும். தாய் நலனில் அக்கறை தேவை. சுபக்காரியச் செய்தி உண்டு. ஆடை, அணிகலன் சேர்க்கையுண்டு. பொருளாதார வளர்ச்சி உண்டு. உடன்பிறந்தவரால் உதவி உண்டு. முக்கிய எண்ணங்கள் நிறைவேறும். மனைவியால் அமைதி கெடும். ஏற்றமான தருணம். நிதி பற்றாக்குறை நீங்கும். கடன் பிரச்சனை உருவாகும். கால்நடைகளால் சிரமம் உண்டு. கலைத்தொழிலில் கவனம் தேவை. செயல்திறன் வெளிப்படும். நிர்வாகத்திறன் கூடும். உத்தியோக முன்னேற்றம் தடைப்படும். மங்களச் செய்தி வரும். ஸ்திர சொத்துக்கள் சேரும். வருமானம் உயரும். குடும்ப நலம் மகிழ்ச்சி தரும். நற்காரியங்களில் ஈடுபடுவீர்கள். நட்புக்கள் பெருகும். நன்மைகள் அதிகமாகும். முன் கோபத்தை குறைத்துக் கொள்ள வேண்டும். பழிச்சொல் தேடி வரும். மனவேதனை அதிகரிக்கும். உத்தியோக சோதனை ஏற்படும். இழுபறி நிலை நீங்கும். உறவுகளால் பாதகம் உண்டு. சங்கடங்கள் நிவர்த்தியாகும். குடும்ப நிர்வாகம் சீராகும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். கல்வி சலுகைகள் கிட்டும். புகழ் கூடும். பெருமைகள் தேடி வரும். அரசு வகை ஆதாயம் கிட்டும். ஆக்கப்பூர்வமான எண்ணம் உதயமாகும். காதலில் கண்ணியம் கூடும். பெரியோர்கள் விரோதம் ஏற்படும். நெருக்கடிகள் நீங்கும். ஆபரணம் வாங்குவீர்கள். பேச்சில் இனிமை கூடும். விளையாட்டுத்துறையில் வெற்றி கிட்டும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அம்பிகை, அதிர்ஷ்ட எண்: *4,3,2,1*
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,E




**கடகம்:** கண்ணியமான புண்ணியம் சேரும் வாரம். கலைந்த குடும்பம் ஒன்று சேரும். வீடு, மனை யோகம் உண்டு. உடன் பிறப்புக்களால் உதவி உண்டு. வெறுப்புக்கள் ஒழியும். பொறுப்புக்கள் கூடும். விரக்திகள் மாறும். வியாபார வளர்ச்சி உண்டு. வீண் செலவுகள் உண்டு. விருந்தினர் வருகை உண்டு. மேலதிகாரியின் பாராட்டுக் கிட்டும். கால்நடைகளால் லாபம் உண்டு. கடின உழைப்பு தேவைப்படும். கடன் சுமை அதிகமாகும். காரியம் கைகூடும். வியாபாரம் உயரும். வில்லங்கம் விலகும். விவசாய விளைச்சல் அதிகமாகும். அரசு உதவிகள் கிட்டும். கூட்டுத்தொழில் பிரிவு ஏற்படும். பொன், பொருள் சேர்க்கையுண்டு. அனுகூலமற்ற சூழ்நிலைகள் உருவாகும். திடீர் தனவரவு ஏற்படும். ஜீவன முன்னேற்றம் ஏற்படும். தீய எண்ணம் விலகும். புதிய வாகனம் சேரும். புத்திரர் வழியில் சந்தோஷம் கூடும். கமி'ன் தொழில் திருப்தி தரும். பயணத்தால் அனுகூலமுண்டு. கலை ஈடுபாடு அதிகரிக்கும். எடுத்த காரியம் தடைப்படும். எதிலும் கவனம் தேவை. அடுத்த நபரால் தொல்லை உண்டு. கலைஞர்களுக்கு வாய்ப்பு பெருகும். தொழில் போட்டி மறையும். கனவுத்தொல்லை உண்டு. மதிநுட்பத்தோடு செயல்பட வேண்டும். திடீர் பயணம் ஏற்படும். குடும்ப ஒற்றுமை குறையும். உடல் உபாதை கூடும். குழந்தைகளால் அல்லல் ஏற்படும். உறவினர் வருகைத் தொல்லை தரும். வாய்ப்பேச்சில் நிதானம் தேவை. சேமிப்பு உயரும். சேய் நலம் கூடும். நோய், நொடிகள் அகலும். வீண் வம்பு விலகும். விபரீத எண்ணம் விலகும். வழக்குகள் வெற்றி தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: விருட்ஷ தேவதை, அதிர்ஷ்ட எண்: *9,5,4,3*
அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,T




ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'

Dr. K. RAM.Ph.D (USA)

தொடர்புக்கு: 0091-9840160068 9940431377





**சிம்மம்:** துன்பங்களை துரத்தியடிக்கும் வாரம். கூட்டுத்தொழில் லாபம் தரும். வியாபாரத்தால் நன்மை உண்டு. விருந்தினர் வருகை உண்டு. பிள்ளைகளால் பெருமை சேரும். மருத்துவச் செலவு ஏற்படும். மனோபயம் நீங்கும். குதூகலம் அதிகமாகும். குளிர்பான தொழில் கவனம் தேவை. அமைதியாக இருப்பது நல்லது. பூர்வீகச் சொத்து சேரும். தொழில் வளர்ச்சி கூடும். சகோதரியால் லாபம் உண்டு. உறவினரால் உற்சாகம் கூடும். கைப்பொருள் ஒன்று களவுப்போகும். சுபச்செய்தி கூடி வரும். விவசாயம் லாபம் தரும். வீடு, மனை யோகம் உண்டு. எதிர்மறை எண்ணம் உருவாகும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். திடீர் பயணம் உண்டு. இடமாற்றம் ஏற்படும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். பிணிகள் நீங்கும். பணியில் கவனம் தேவை. குடும்பத்தில் குதூகலம் உண்டாகும். பழைய நண்பரை சந்திப்பீர்கள். காதல் எண்ணம் ஈடேறும். வாழ்வில் வசந்தம் உண்டு. மாமூலான வளர்ச்சி பாதிக்கும். விரக்திகள் மறையும். வீடு, மனை வில்லங்கம் ஏற்படும். வேலை பளு அதிகரிக்கும். அரசியல் லாபம் தரும். பெண்களில் கௌரவம் உயரும். பல்வலி வந்து போகும். பிரபலங்களை சந்திக்கும் வாய்ப்பு ஏற்படும். செல்வாக்கு உயரும். உறவினர் பகை ஏற்படும். அந்நியர் ஆதரவு கிட்டும். காதல் கசக்கும். வெளிநாட்டு வாய்ப்பு கூடி வரும். வாகன மாற்றம் ஏற்படும். நூதன முயற்சி தடைப்படும். மாற்றுத்தொழில் உருவாகும். வேற்று இன நட்பு கிட்டும். விவேகம் அதிகரிக்கும். வணிகத்தொழில் விரிவடையும். பெண்களால் பெருமை சேரும். குடும்ப உறவு பலப்படும். உத்தியோக உன்னதம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அம்பிகை, அதிர்ஷ்ட எண்: *2,5,4,9*
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,T





**கன்னி:** ஆன்மீக எண்ணம் அதிகரிக்கும் வாரம். ஆதாயம் பெருகும். காரியத்தடை அகலும். அலுவலக பணி அனுகூலம் தரும். எண்ணெய் நிறுவனம் ஏற்றம் தரும். தாய்வழி உறவு லாபம் தரும். குடும்ப அன்யோன்யம் பெருகும். ஆரோக்கியத்தில் கவனம் தேவை. எதிலும் எச்சரிக்கை தேவை. அரசாங்க அனுகூலம் கூடும். மன அமைதி குறையும். பொருள் சேர்க்கை உண்டு. பொறாமைகள் விலகும். பொறுப்புக்கள் கூடும். வியாபார அபிவிருத்தி ஏற்படும். வெளிநாட்டுப் பயணம் உருவாகும். கன்னிப் பெண்களிடம் கவனம் தேவை. பிரபல்ய ஆசை ஏற்படும். ஆன்மீக நாட்டம் ஏற்படும். வறுமைகள் விலகும். குழந்தைகள் நலத்தில் கவனம் தேவை. இயந்திர பணியில் நிதானம் தேவை. புதிய நட்பில் எச்சரிக்கை தேவை. கலை ஆர்வம் பெருகும். உடல் சோர்வு உண்டாகும். விபரீத போக்கு மாறும். சொல்லில் கவனம் தேவை. வீண் வம்பு அதிகரிக்கும். பாராட்டுக்கள் கூடும். வேலை பளு கூடும். புது முயற்சி பலன் அளிக்கும். ஸ்டேஷனரி தொழில் திருப்பம் தரும். அனுகூலமான போக்கு நிலவும். தந்தை நலன் கூடும். மற்றவரால் ஏமாற்றப்படுவீர்கள். மனக்கலக்கம் உருவாகும். டிரான்ஸ்போர்ட் தொழில் லாபம் தரும். அர்ச்சனையால் பிரச்சனை குறையும். பூமியால் லாபம் உண்டு. உணவு விடுதி லாபம் தரும். புதிய வாய்ப்பு தேடி வரும். அரசு வழி ஆதாயம் உண்டு. சுபிட்ஷங்கள் பெருகும். வீண் விரயம் அதிகமாகும். உத்தியோகத்தில் உயர்வு ஏற்படும். பணவரவு தாமதமாகும். உணவு பிரியம் கூடும். ஆதலால் கவனம் தேவை. காதலில் மோதல் உண்டு. கால்நடைகளால் பலன் உண்டு. நண்பரால் செலவு உண்டு. முடிவுகள் சாதகமாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: துர்காதேவி, அதிர்ஷ்ட எண்: *9,5,2,1*
அதிர்ஷ்ட நிறம்: ஊதா நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,L




**துலாம்:** விரக்திகள் மறையும் வாரம். பகைவர் பணிந்து நிற்பர். குடும்ப பாசம் அதிகரிக்கும். இடமாற்றம் ஏற்படும். உலோகத்தொழில் உயர்வு தரும். உறவினர் வருகை உண்டு. கல்விச் செலவு உண்டு. காரியம் இழுபறியாகும். பொருளாதார உயர்வு ஏற்படும். உஷ்ணம் அதிகரிக்கும். நெருக்கடிகள் குறையும். கண்ணாடிப் பொருள் சேதம் ஏற்படும். கட்டிடத் தொழில் லாபம் தரும். தோல்விகள் விலகும். தொல்லைகள் குறையும். பிள்ளைகள் கல்வி மேம்படும். குடும்ப அன்யோன்யம் அதிகமாகும். இன்னல்கள் அகலும். எதிர்பார்ப்புகள் குறையும். எளிமையை விரும்புவீர்கள். இனிய காதல் உருவாகும். பழைய நண்பர் சந்திப்பு கிட்டும். புதிய வாய்ப்புத் தேடி வரும். வாய்ச்சொல் பலன் தரும். வருமானத் தடை உண்டு. பணியாட்களால் தொல்லை குறையும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். சஞ்சலம் மறையும். திறமைகள் அதிகமாகும். வாழ்க்கை வசதி பெருகும். தன்னம்பிக்கை கூடும். பித்தளைத் தொழில் லாபம் தரும். புண்ணிய ஸ்தலம் பயணம் உண்டு. மனச்சுமை குறையும். நினைவாற்றல் பெருகும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலைமோதும். பக்குவமான பேச்சு அவசியம். கணவன், மனைவி கருத்து வேறுபாடுகள் அகலும். தெய்வீகப் பற்று கூடும். வியாபாரம் செழிக்கும். பயணம் தடைப்படும். திடீர் செலவு ஏற்படும். பணியில் நிம்மதி குறையும். புதிய நட்பை தவிர்க்கவும். இலக்கிய ஆர்வம் கூடும். ஏற்றமான தருணம் அமையும். மாற்றமான வாய்ப்பு கிட்டும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கருமாரி அம்மன், அதிர்ஷ்ட எண்: *3,5,4,1*
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,O




**விருச்சிகம்:** கனமான லாபம் கிடைக்கும் வாரம். வெகுமதி தேடி வரும். வீண் வம்பு ஓடி மறையும். காரிய வெற்றி கிட்டும். போதிய வரவு பெருகும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். அரசாங்க அனுகூலம் ஏற்படும். புதிய தொழில் அமையும். ஆடம்பர சுகங்கள் கூடும். பயணத்தில் எச்சரிக்கை தேவை. மருத்துவச் செலவு உண்டு. மறைமுக தொல்லை நீங்கும். தீர்த்த யாத்திரை உண்டு. திருப்புமுனை ஏற்படும். பொறுப்புக்கள் கூடும். சிறப்புக்கள் சேரும். காரியத்தடை அகலும். கணவன், மனைவி அன்யோன்யம் கூடும். புதிய சிந்தனை உருவாகும். பழைய நட்பால் பணவிரயம் உண்டு. கட்டிடத் தொழில் லாபம் தரும். இன்றைய பிரார்த்தனை நன்மையை கூட்டும். இரும்புத்தொழில் லாபம் உண்டு. விவசாய விளைச்சல் அதிகரிக்கும். புத்திரரால் பூரிப்பு உண்டு. நலமே விளையும் அற்புதமான வாரம். நல்லவர் நட்பு உருவாகும். உற்சாகத்தோடு செயல்படுவீர்கள். ஒத்துழைப்பு கிடைக்கும். உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும். மனைவியால் மகிழ்ச்சி உண்டு. சகோதரியால் லாபம் உண்டு. தொழில் நிம்மதி கொடுக்கும். விவசாய விளைச்சல் கூடும். குதூகலம் கூடும். குடும்ப மகிழ்ச்சி பொங்கும். இனிக்கும் சம்பவம் அமையும். மாணவர் மதிப்பு உயரும். வாகன யோகம் உண்டு. நிதி நிறுவனம் லாபம் தரும். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். திருமணம் கூடி வரும். குடும்ப ஒற்றுமை கூடும். முடிவுகள் சாதகமாகும். விரக்தி நிலை மாறும். வேண்டாத நட்புக்கள் விலகும். தொழில் வர்த்தகம் விரிவடையும். தோல்வி நிலை மாறும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பெருமாள், அதிர்ஷ்ட எண்: *3,5,9,2*
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: J,X


**(தொடர்ச்சி *30* பக்கம்)**

# ஈழத்துத் திருக்கோயில்கள்

வரலாறும் மரபும் 1079



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



## ஆரையம்பதி பரமநயினார் (ஐயனார்) கோயில் மட்டக்களப்பு

*" பூரணைக் கிறைவர போற்றி*
*புட்கலை கணவா போற்றி*
*வாரணம் ஏறி எங்கள்*
*வருந்துயர் களைவாய் போற்றி*
*ஆரணச் சுருதி எல்லாம்*
*ஆடல் உருத்திர அண்ணலென்று*
*காரணங் கருதி ஏத்தும்*
*கடவுளே போற்றி போற்றி "*

கர்ப்பக்கிரகத்திலே அமைந்துள்ள பரமநயினாரின் வடிவம், ஆசனநிலையில் இடக்காலை உட்புறமாக மடித்து, வலக்காலைத் தொங்கவிட்ட கோலத்தில் அமைந்துள்ளது. ஒரு கரம் வரதஹஸ்தமாகவும், மறுகரம் செண்டினைத் தாங்கிய நிலையிலும் அமைந்துள்ளது. பரமநயினாரின் வலப்பக்கத்திலே பூரணையும், இடப்பக்கத்திலே புட்கலையும் குவளை மலர் ஏந்திய நிலையில் அமைந்துள்ளனர். பரமநயினாரின் எழுந்தருளி வடிவத்திலே, அவர் ஆசன நிலையிலும், தேவியர் ஸ்தானகநிலையிலும், இருப்பதைக் காணலாம். சுந்திர சேகரர், விநாயகர், முருகன் ஆகியோரின் எழுந்தருளி வடிவங்கள் ஸ்தானக நிலையிலே உள்ளன.

1982 ஆம் வருடம் சிவலிங்கம், மற்றும் உமாதேவியாரின் திருவுருவங்கள் முறையே மகாமண்டபத்தின் கிழக்கிலும், மேற்கிலும் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. இக்கோவிலில் வசந்த மண்டபமும் அமைந்துள்ளது. பரமநயினார், பூரணை, புட்கலை, உமாதேவியார் ஆகியோரின் பஞ்சலோக விக்கிரகங்களும் இக்காலப்பகுதியிலே உருவாக்கப்பட்டுள்ளன. ஆரம்ப காலத்திலிருந்து ஐயனார்வழிபாடு, கிராமிய வழிபாட்டு முறை தழுவியதாகவே காணப்பட்டுள்ளது. பிற்காலத்திலே இவ்வழிபாடு ஆகமநெறிக்குட் பட்டதாக மாற்றம் பெற்றுள்ளது. ஆரையம்பதி பரமநயினார் ஆலயத்தில், 1970 ஆம் ஆண்டுவரை சடங்குகளைப் பூசாரிகளே செய்து வந்துள்ளனர். ஆனி மாதத்து பூர்வபட்சத்து நாலாம் பிறைக்கு முன், புதன், சனி, ஆகிய வாரங்கள் தவிர்ந்த நாட்களில் சடங்கு நடைபெறுவது வழக்கம். ஈழத்திலுள்ள ஐயனார் கோயிலின் சடங்கு முறைகள் ஊருக்கேற்ப தனித்தன்மை கொண்டவையாகக் காணப்படுகின்றன. ஆரையம்பதி ஐயனார் கோயிலில் சடங்கு செய்யும் பூசாரி, முறைப்படி நோர்ப்புக் கட்டியபின் சடங்கு நடைபெறும். மஞ்சள் சோற்றைச் சமைத்து, சாமவேளையிலே அதனை ஒரு முடிச்சிலே கட்டி, ஆலயத்தின் முன்பு தொங்க விடுவதையே நோர்ப்புக் கட்டுதல் என்று கூறுவர். நோர்ப்புக் கட்டியபின் அடுத்த நாளே பரமநயினார் சடங்கு நடைபெறும்.

பரமநயினாரின் கணங்களாக வதனமார் கோலத்திலும், மாரியம்மன், பேச்சியம்மன், வீரபத்திரன் முதலிய தெய்வங்களின் கோலங்களிலும் உருக்கொண்டு ஆண்கள் ஆடுவார்கள். வதனமாரின் உருவிலே வருவோர் வில், அம்பு, பொல்லு ஆகியவற்றைக் கையிலேந்தியவண்ணம் ஆடுவார்கள். மாடுகளைப் பிடிக்கும் பாவனையில் மழுக் கயிற்றை வீசி, ஆட்களை இழுப்பர். தெய்வங்களின் பாவனையிலே ஆடுவோரை மந்திவாதிகள் படுகளம் போட்டு ஆடவிடாது மந்திரத்தாற் தடுப்பர். எதிர்தரப்பிலுள்ள மந்திரவாதிகள் கட்டுக்களை மந்திரத்தால் வெட்டி, தெய்வ கோலந் தாங்கியவர்களை ஆடவைப்பர். மந்திரவாதிகளிடையே நடைபெறும் போட்டிகளைப் பார்ப்பதற்காக அயற் கிராமங்களிலிருந்தும் மக்கள் பெருந்திரளாக வருகை தருவர். மாந்திரீக முறைகளைத் துறைபோகக் கற்றவரும், அண்ணாவியாராக விளங்கியவருமான பரிகாரி பொன்னம்பலம் என்பவரது காலத்திலே, பரமநயினார் சடங்கு மிக விமரிசையாக நடைபெற்றதாகக் கூறுவர். சடங்கு நடைபெறும் காலத்திலே பரமநயினார் காவியம், பரமநயினார் அகவல், வதனமார் காவியம், வதனமார் அகவல் முதலியன படிக்கப்படும்.

ஆரம்பகாலத்தில் கிராமிய வழிபாடாக இருந்து, பின் ஆகம முறை தழுவிய வழிபாட்டுநெறிக்கு இக் கோயில் மாற்றம் பெற்றிருப்பினும், கிராமிய தெய்வ வழிபாட்டோடு, ஆகம முறை தழுவிய வழிபாட்டு முறைகளும் அவற்றோடு தொடர்புடைய விரதங்கள் விழாக்களும் சிறப்பாக நடைபெற்று வருவது குறிப்பிடத் தக்கது.

மட்டக்களப்புத் திருநாட்டில், கண்ணகி வழிபாடு புகழ்பெற்ற வழிபாடாகப் பலவிடங்களிலும் பின்பற்றப்பட்டு வருகின்றது. நாடெங்கும் பரவலாகக் கண்ணகி கோவில்களைக் காண முடியும். கண்ணகி கோவில் தவிர்ந்த ஏனைய கோவில்களிலும், வைகாசியில் கண்ணகி அம்மனுக்குரிய சடங்கை சிறப்பாகக் கொண்டாடும் வழக்கம், மட்டக்களப்பிலே காணப்படுகின்றது. ஆரையம்பதி பரமநயினார் ஆலயத்திலும், வைகாசிமாதம் ஏழு நாட்கள் கண்ணகி அம்மன் சடங்கு நடைபெறுகின்றது. பூரணை நாளன்று திருக்குளிர்த்தி இடம்பெறும். திருக்குளிர்த்தி நிகழ்விலே ஆயிரக்கணக்கிலே மக்கள் கலந்து, தமது வேண்டுதல்களை முன்வைப்பர். திருக்குளிர்த்தியின் பின் மறுநாள் மாலை திருஊஞ்சல் சிறப்பாக நடைபெற்று, இச்சடங்கோடு கண்ணகி அம்மன் சடங்கு நிறைவுபெறும். இக்காலத்திலே நடைபெறும் கண்ணகி அம்மன் சடங்கிலே, ஒரு கரத்தில் சிலம்பினை ஏந்திய ஸ்தானக நிலையிலுள்ள கண்ணகி அம்மனின் உருவத்தை, எழுந்தருளியாக உள்வீதி வழியே கொண்டு செல்வர்.

ஸ்ரீ பரமநயினார் கோயிலில் 1970 ஆண்டும், அதன்பின்னரும் பல தடவைகள் கும்பாபி'கம் நிறைவேற்றப்பட்டுள்ளது. 1989 ஆம் ஆண்டு கொடித்தம்பம் நிறுவப்பட்டுள்ளது. இக்கோயிலில் பூரணை நாட்களிலே திருவிளக்குப் பூசை நடைபெறும். புரட்டாதிச் சனி, கந்தசஷ்டி, விநாயகசஷ்டி, கேதாரகௌரிவிரதம் ஆகிய நாட்களில் விசேட பூசைகள் நடைபெறும். புரட்டாதிச்சனி விரதத்தின் இறுதிநாளன்று, சனிக்கிரகத்துக்கு அபிஷேகமும் ஹோமமும் நடைபெறும். கந்தசஷ்டி விரதகாலத்திலும் கந்தப்புராணப் படிப்பும், திருவிழாவும் மிகச் சிறப்பாக இடம்பெறும். கேதாரகௌரி விரத காலத்தில் இருபத்தியொரு நாட்களும் சிவலிங்கத்தின்முன் கும்பங்கள் வைத்து, பூசைகள் நடைபெறும். கார்த்திகைமாதத்தில் மாதம் முழுவதும் சிவலிங்கத்துக்கு முன்னே கும்பங்கள் வைத்து காசிகண்ட பூசையை நிறைவேற்றுவர்.

- வளரும்

# அன்பின் தொனி - 717

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**தேவகிருபை - Grace of God**

**சமுதாய வாழ்வின் விதிகள்**

*திரளான செல்வத்தைவிட நற்புகழே தெரிந்துகொள்ளப்படக்கூடியது; பொன் வெள்ளியைவிட தயையே நலம். 2 செல்வந்தனும், தரித்திரனும் ஒருவரையொருவர் சந்திக்கிறார்கள் அவர்கள் அனைவரையும் உண்டாக்கினவர் கர்த்தர். 3 விவேகி ஆபத்தைக் கண்டு மறைந்து கொள்ளுகிறான்; பேதைகள் நேராகப்போய் தண்டிக்கப்படு கிறார்கள். 4 தாழ்மைக்கும் கர்த்தருக்குப் பயப் படுதலுக்கும் வரும் பலன் செல்வமும், மகிமையும் ஜீவனும் ஆகும். 5 மாறுபாடுள்ளவனுடைய வழியிலே முட்களும் கண்ணிகளும் உண்டு; தன்னுடைய ஆத்துமாவைக் காக்கிறவன் அவைகளைவிட்டுத் தூரமாக விலகிப்போவான். 6 பிள்ளையை நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து; அவனுடைய முதிர்வயதிலும் அதை விடாமல் இருப்பான். 7 செல்வந்தன் தரித்திரனை ஆளுகிறான்; கடன் வாங்கினவன் கடன் கொடுத்தவனுக்கு அடிமை. 8 அநி யாயத்தை விதைக்கிறவன் வருத்தத்தை அறுப்பான்; அவனுடைய கடுங்கோபத்தன் கோல் ஒழியும். 9 கருணைக்கண்ணன் ஆசீர்வதிக்கப்படுவான்; அவன் தன்னுடைய உணவில் தரித்திரனுக்குக் கொடுக்கிறான். 10 பரியா சக்காரனைத் துரத்திவிடு; அப்பொழுது சண்டை நீங்கும், விரோதமும் அவமானமும் ஒழியும். 11 சுத்த இருதயத்தை விரும்புகிறவனுடைய உதடுகள் இனிமையானவைகள்; ராஜா அவனுக்கு நண்பனா வான். 12 கர்த்தருடைய கண்கள் ஞானத்தைக் காக்கும்; துரோகிகளின் வார்த்தைகளையோ அவர் தாறுமாறாக்குகிறார். 13 வெளியிலே சிங்கம், வீதியிலே கொல்லப்படுவேன் என்று சோம்பேறி சொல்லுவான். 14 ஒழுங்கீனமான பெண்களின் வாய் ஆழமான படுகுழி; கர்த்தருடைய கோபத்திற்கு ஏதுவானவன் அதிலே விழுவான். 15 பிள்ளையின் இருதயத்தில் மதியீனம் ஒட்டியிருக்கும்; அதைத் தண்டனையின் பிரம்பு அவனைவிட்டு அகற்றும். 16 தனக்கு அதிகம் உண்டா கத்தரித்திரனை ஒடுக்குகிறவன், தனக்குக் குறைச்சல் உண்டாகவே செல்வந்தனுக்குக் கொடுப்பான்.*


**ஞானிகளுடைய சொல்**

*17 உன் செவியைச் சாய்த்து, ஞானிகளுடைய வார்த்தைகளைக் கேட்டு, என் போதகத்தை உன் இருதயத்தில் வை. 18 அவைகளை உன் உள்ளத்தில் காத்து, அவைகளை உன்னுடைய உதடுகளில் நிலைத்திருக்கச் செய்யும்போது, அது இன்பமாக இருக்கும். 19 உன் நம்பிக்கை கர்த்தர்மேல் இருக்கும்படி, இன்றையதினம் அவைகளை உனக்குத் தெரியப்படுத்துகிறேன். 20 சத்திய வார்த்தைகளின் யதார்த்தத்தை நான் உனக்குத் தெரிவிக்கும்படிக்கும், நீ உன்னை அனுப்பினவர்களுக்குச் சத்திய வார்த்தைகளை பதிலாக சொல்லும்படிக்கும், 21 ஆலோசனையையும், ஞானத்தையும் பற்றி நான் உனக்கு முக்கியமானவைகளை எழுதவில்லையா? 22 ஏழையாக இருக்கிறான் என்று ஏழையைக் கொள்ளையிடாதே; சிறுமையானவனை நீதிமன்றத்தில் உபத்திரவப்படுத்தாதே. 23 கர்த்தர் அவர்களுக்காக வழக்காடி, அவர்களைக் கொள்ளையிடுகிறவர்களுடைய உயிரைக் கொள்ளையிடுவார்.*

**- நீதிமொழிகள் 22: 1- 23**

**தொடரும்...**

# கண்ணீர் அஞ்சலி #61



மண்ணில் 06.06.1939

விண்ணில் 06.12.2023

## அமரர். சிவபாக்கியராசா சாமித்தம்பி

**எங்கள் OSTBA உறுப்பினர் #29 மார்கழி 6, 2023 இறைவனடி சேர்ந்தார். அவரது ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திப்போம்.**

**ONTARIO SENIOR TAMILS BENEVOLENT ASSOCIATION**

**OSTBA2014@GMAIL.COM WWW.OSTB5.CA**
**416-473-6880**

# இவ்வார ராசிபலன்

(28 பக்கத் தொடர்ச்சி)




**தனுசு:** புதிய பொறுப்பு வரும் வாரம். தேவைகள் பூர்த்தியாகும். விருப்பங்கள் நிறைவேறும். திறமைகள் அதிகமாகும். பயணம் லாபம் தரும். சூழ்நிலைகளால் மாறுதல் உண்டு. சகோதர விசுவாசம் கூடும். பெற்றோர் நலம் கவனம் தேவை. விவாதம் தவிர்ப்பது நல்லது. செயல்களில் துணிவு கூடும். செய்த்தொழில் நன்மை தரும். செல்வாக்கு அதிகமாகும். வழக்குகள் திருப்பம் தரும். புதியப்பொருள் சேரும். பொறாமைகள் விலகும். கூட்டுத்தொழில் நன்மை தரும். வருமானம் திருப்தி தரும். பணம் புரளும். குடும்ப தேவைகள் பூர்த்தியாகும். உத்தியோக ஏற்றம் உண்டு. சோதனைகள் நீங்கும். சாதனைகள் ஓங்கும். சந்தோஷம் அதிகரிக்கும். பாதகம் விலகும். பணியார்வம் கூடும். பண நெருக்கடிகள் தீரும். வில்லங்கம் தீரும். வியாபாரம் மேன்மை தரும். வெற்றிகள் தேடி வரும். வியப்பான செய்தி வரும். வீடு, மனை யோகம் வரும். வாகன மாற்றம் வரும். வாய்ப்புக்கள் தேடி வரும். தன வரவுகள் பெருகும். பொருள் வரவு உண்டு. மனநிறைவு ஏற்படும். கடன் பிரச்சனை தீரும். குதூகலம் தழைத்தோங்கும். நிலம் வாங்கும் யோகம் உண்டு. வளம் பெருகும். உடல்நலம் கவனம் தேவை. இரும்புத்தொழில் ஏற்றம் தரும். பெற்றோர்களால் பாராட்டுப் பெறுவீர்கள். தனவரவு உற்சாகம் தரும். பணிமாற்றம் நன்மை தரும். இறுகிய நிலை மாறும். போட்டிகள் வெற்றி தரும். பரபரப்பான சூழ்நிலை மாறும். மங்களகரமான வாரம். மன அமைதி கெடும். மற்றவர் தொல்லை நீங்கும். குடும்ப கௌரவம் ஓங்கும். வெற்றி நிலை தொடரும். இடமாற்றத்தால் நன்மை உண்டு. பதவியில் உயர்வு வரும். நண்பரால் சங்கடம் நேரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: திருமுருகர், அதிர்ஷ்ட எண்: 3,9,5,1

அதிர்ஷ்ட நிறம்: இளம் பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,Q




**மகரம்:** ஆரோக்கியத்தில் திருப்தி தரும் வாரம். ஆபரண பொருட்கள் சேரும். மாணவர்களுக்கு மதிப்பெண் சேரும். எண்ணிய காரியம் கூடும். வியாபாரத்தில் எதிர்பாரா லாபம் சேரும். நடவடிக்கையில் மாற்றம் வரும். பதவியில் உயர்வு வரும். புகழ் கூடும். புதிய வாய்ப்பு கிட்டும். மாற்று எண்ணம் உதயமாகும். தோற்றப் பொலிவு கூடும். வேற்று மதத்தினரால் உதவிகள் சேரும். பொதுப்பணியில் ஆர்வம் கூடும். சுபகாரியம் கூடி வரும். அரசியல் சந்தர்ப்பம் அமையும். பழைய நட்பு தொல்லை தரும். இல்லத்தில் நல்லவை நடக்கும். இனிய வாய்ப்பு கூடி வரும். தெய்வப் பணியில் ஈடுபாடுகள் அதிகரிக்கும். கற்பனை ஆற்றல் பெருகும். பெண்களின் திறமை பெருமை தரும். அடுத்தவர் நட்பு ஆக்கம் தரும். வெளிநாட்டு வாய்ப்பு தேடி வரும். உறவினர் பாராட்டுக் கிட்டும். அளவான பேச்சு நன்மை தரும். வழக்குகள் சாதகமாகும். தொலைதூரப் பயணம் உண்டு. பணிச்சுமை குறையும். வியாபார மந்தநிலை அகலும். கடன் உதவி கிட்டும். தொழிலில் மாற்றம் ஏற்படும். சொந்த தொழில் அமையும். குடும்ப அமைதி கெடும். திருப்தி ஏற்படும். திண்டாட்டங்கள் குறையும். திறமைகள் அதிகமாகும். பெருமைகள் கூடி வரும். வாழ்த்துக்கள் வந்து சேரும். வாய்ப்பேச்சில் கவனம் வேண்டும். நிர்வாகத்திறமை அதிகரிக்கும். வெளியூர் பயணம் உண்டு. விசேஷ பலன்கள் உண்டு. அரசியல் ஆதாயம் உண்டு. சொத்துக்கள் சேர்க்கையுண்டு. பெண்களின் அடிப்படைத் தேவைகள் பூர்த்தியாகும். தீய எண்ணங்கள் விலகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: தர்ம சாஸ்தா, அதிர்ஷ்ட எண்: 6,9,4,3

அதிர்ஷ்ட நிறம்: ஊதா நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G,Q




**கும்பம்:** பொறுப்பும், சிறப்பும் சேரும் வாரம். ஏஜென்சி தொழில் ஏற்றம் தரும். எண்ணங்கள் மாற்றம் தரும். உழைப்பு உயர்வு தரும். விவசாயம் விளைச்சல் தரும். கடனால் பிரச்சனை வரும். காரிய அனுகூலம் தரும். எச்சரிக்கையோடு செயல்பட வேண்டும். எதிலும் நிதானம் தேவை. எடுத்த காரியம் தடைப்படும். அடுத்த நபரால் தொல்லை உண்டு. அந்தஸ்து உயரும். விவசாயம் மேன்மை பெறும். கலைஞர்களுக்கு வாய்ப்பு பெருகும். கூட்டுப் பிரார்த்தனை மாற்றம் தரும். செயல் திறமை வெளிப்படும். கடின உழைப்பு தேவைப்படும். கால்நடைகளால் லாபம் தரும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். விருந்தினர் வருகை உண்டு. வீண் செலவுகள் ஏற்படும். விரக்திகள் மறையும். வீடு, மனை ஆசை பூர்த்தியாகும். அயல்நாட்டுப் பயணம் உண்டு. ஆடம்பர எண்ணம் மேலோங்கும். ஆபரணம் வாங்குவீர்கள். ஆரோக்கியம் கூடும். அரசியலில் புகழ் கூடும். திடீர் வரவு உண்டு. கல்வியில் மேன்மை கிட்டும். நெருக்கடிகள் நீங்கும். பெரியோர்கள் விரோதம் ஏற்படும். கணவன், மனைவி கௌரவம் அதிகரிக்கும். காதலில் கண்ணியம் கூடும். அலைச்சல் அதிகரிக்கும். எதிரிகள் பலம் குறையும். தொழில் போட்டிகள் மறையும். ஏற்றமதி தொழில் கவனம் தேவை. பூர்வீகச் சொத்து தடைப்படும். சந்தோஷம் கூடும். சங்கடங்கள் நிவர்த்தியாகும். குடும்ப நிர்வாகம் சீராகும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். கல்விச் சலுகைகள் கிட்டும். தொழில் வளர்ச்சி கூடும். எதிர்பாராத நன்மை கிட்டும். குடும்ப வாழ்வில் வளம் பெருகும். உத்தியோகம் திருப்தி தரும். பணி மாற்றம் ஏற்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கந்தப்பெருமான், அதிர்ஷ்ட எண்: 8,4,3,1

அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,I




**மீனம்:** நவகிரஹம் அனுகிரஹம் கிடைக்கும் வாரம். நலம் விளையும் காலம். நன்மைகள் அதிகமாகும். நட்புக்கள் பெருகும். நற்காரியங்களில் ஈடுபடுவீர்கள். குடும்ப நலம் மகிழ்ச்சி தரும். வருமானம் உயரும். ஸ்திர சொத்துக்கள் சேரும். மங்களச் செய்தி வரும். உத்தியோக முன்னேற்றம் தடைப்படும். நிர்வாகத் திறன் கூடும். செயல்திறன் கூடும். கலைத்தொழில் கவனம் தேவை. கால்நடைகளால் சிரமம் உண்டு. உள்ளம் மகிழும். முக்கிய எண்ணம் நிறைவேறும். முகப்பொலிவு கூடும். முயற்சி பலன் தரும். பொருளாதாரம் உயரும். போட்டிகள் மறையும். லாபம் திருப்தி தரும். கல்வியில் கவனம் குறையும். எதிர்ப்புக்கள் விலகும். கணவன், மனைவி சலசலப்பு ஏற்படும். உறவால் பணவிரயம் ஏற்படும். உடல் ஆரோக்கியம் குறையும். இரும்புத்தொழில் ஏற்றம் தரும். பங்குச்சந்தை மாற்றம் தரும். பணப்புழக்கம் அதிகரிக்கும். பழையக்கடன் தீரும். சொத்துக்கள் சேரும். உத்தியோகத்தில் சலுகைகள் கிடைக்கும். முதலீடுகளை தவிர்க்கவும். குடும்ப மனநிறைவு தரும். காதலில் பிரிவு ஏற்படும். கடமையில் தடங்கல் ஏற்படும். புதிய வாகனம் வாங்குவீர்கள். பாராட்டுக்கள் தேடி வரும். ஸ்டேஷனரி தொழில் திருப்பம் தரும். புதிய முயற்சிகள் பலன் அளிக்கும். வெளிநாட்டுப் பயணம் உண்டு. வெகுமதிகள் சேரும். உடல்நலனில் அக்கறை தேவை. அலைபேசித் தகவல் ஆனந்தம் தரும். பணிவு அவசியம். பணவரவு உண்டு. தந்தை நலம் கூடும். மற்றவரால் பாராட்டப்படுவீர்கள்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஆதிசேஷன், அதிர்ஷ்ட எண்: 9,6,3,1

அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,V

- கனகராசா சரவணன் -

## மட்டு தரவை மாவீரர் நினைவேந்தலில் பயங்கரவாத தடைச்சட்டத்தில் கைது செய்த 4 பேர் பிணையில் விடுவிப்பு

மட்டக்களப்பு தரவை மாவீரர் இல்லத்தில் நினைவேந்லில் ஈடுபட்ட சம்பவம் தொடர்பில் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிந்த 4 பேரையும் தலா ஒருவர் ஒரு இலச்சம் ரூபா ஆட்பிணையில் செல்வதற்கு வாழைச்சேனை நீதவான் நீதிமன்ற நீதவான் செவ்வாய்க்கிழமை (19) அனுமதியளித்து பிணையில் விடுவித்தார்.

கடந்த நவம்பர் மாதம் 27ம் திகதி கிரான் பிரதேசத்திலுள்ள தரவை மாவீரர் துயிலும் இல்லத்தில் நினைவேந்தல் இடத்தினை அலங்கரித்த கொடிகள் கம்பங்கள் ஜெனரேற்றர். ஒலி பெருக்கியை என்பவற்றை கழற்றி வாகனத்தில் வீட்டிற்கு எடுத்துக் கொண்டு திரும்பினர்.

இதன் போது சந்திவெளி பிரதேசத்தைச் சேர்ந்த மாவீரர் நினைவேந்தல் ஏற்பாட்டாளரும் முன்னால் புலிகள் அமைப்பைச் சேர்ந்த நிதர்சன் என்றழைக்கப்படும் சின்னத்தம்பி காஞ்சிநிதி, ஒலிபெரிக்கி உரிமையாளரான 43 வயதுடைய பிரான்சிஸ் அன்ரனி நியூட்டன், அவரது மகனான 19 வயதுடைய நியூட்டன் சதுர்சன், வாகனசாரதியான 33 வயதுடைய சண்முகநாதன் நவஜீவன் ஆகிய 4 பேரையும் பயங்கரவாத தடைச்சட்டத்தில் வாழைச்சேனை பொலிசார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட 4 பேரையும் தொடர்ந்து விளக்கமறியலில் வக்கப்பட்டிருந்த நிலையில் அவர்களை பிணையில் விடுவிப்பதற்கான முன்நகர்வு விண்ணப்ப பத்திரத்தை அவர்கள் தரப்பில் ஆஜரான சட்டத்தரணிகள் இன்று நீதிமன்றில் விண்ணப்பித்ததையடுத்து குறித்த வழக்கு விசரணைக்கு எடுத்துக் கொண்ட நிலையில் 4 பேரையும் தலா ஒருவர் ஒரு இலச்சம் ரூபா ஆட்பிணையில் செல்வதற்கு அனுமதியளித்து நீதவான் பிணையில் விடுவித்தார்.

இதனையடுத்து அவர்கள் பிணையில் விடுவித்து நீதவான் உத்தரவிட்ட பத்திரத்தை சிறைச்சாலையில் ஒப்படைக்கப்பட்டதையடுத்து அவர்களை சிறையில் இருந்து விடுவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வவுணதீவில் போதை பொருள் வியாபாரியின் வீடடை பொலிசார் முற்றுகை – ஒரு கிலோ 565 கிராம் கஞ்சாவுடன் பெண் கைது



மட்டக்களப்பு வவுணதீவு பொலிஸ் பிரிவில் உள்ள 10 ம்கட்டை பிரதேசத்தில் போதை பொருள் வியாபாரி ஒருவரின் வீடை முற்றுகையிட்ட பொலிசார் ஒரு கிலோ 565 கிராம் கஞ்சாவுடன் பெண் வியாபாரி ஒருவரை வியாழக்கிழமை (21) மாலையில் கைது செய்துள்ளதாக மாவட்ட குற்ற விசாரணை பிரிவு பொலிசார் தெரிவித்தனர்.

மாவட்ட குற்ற விசாரணை பிரிவுக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் அமல் ஏ. எதிரிமானவின் ஆலோசனைக்கமைய மாவட்ட குற்ற விசாரணை பிரிவு பொறுப்பதிகரி டி.எஸ்.எஸ்.கே. தெலங்காவலகே தலைமையிலான உதவி பொலிஸ் பரிசோதகர் எம.எம்.ஏ.ஷகி மற்றும் பொலிஸ் குழுவினர் சம்பவதிமான நேற்று மாலை குறித்த வியாபாரியின் வீட்டை முற்றுகையிட்டு சோதனை நடாத்தினர்.

இதன்போது அங்கு மறைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு கிலோ 565 கிராம் கஞ்சாவை மீட்டதுடன் கஞ்சா வியாபாரியான பெண் ஒருவரை கைது செய்ததுடன் அவரை விசாரணையின் பின்னர் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

## யாழ்ப்பாண மக்களின் அன்பு அளப் பரியது – நடிகை ரம்பா தெரிவிப்பு!



யாழ்ப்பாண மக்களின் அன்பு அளப் பரியது என தென்னிந்திய நடிகை திருமதி. ரம்பா இந்திரகுமார் தெரிவித்தார்.

வரலாற்று சிறப்புமிக்க நல்லூர் கந்தசாமி தேவஸ்தானத்தின் நல்லையம்பதி அலங்கார கந்தனின் சண்முக அர்ச்சனையினை முன்னிட்டு தென்னிந்திய முன்னாள் நடிகை திருமதி. ரம்பா இந்திரகுமார், தொழிலதிபர் ப.இந்திரகுமார், குடும்பத்தினர்கள் விஷேட வழிபாட்டினை இன்று காலையில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் இதனை தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணத்தில் நல்லூர் கந்தன் ஆலயத்திற்கு வருவது இதுதான் முதற்தடவை மிகவும் சந்தோசமாக இருக்கின்றது. யாழ்ப்பாணம் அழகான ஒரு மாவட்டம். அடிக்கடி நாங்கள் வருவோம். தற்போது பிள்ளைகளுக்கான பொழுது போக்குக்காக வந்ததோம்.

ஹரிகரனின் இசை நிகழ்ச்சிறயானது எதிர்வரும் டிசம்பர் 21 அன்று நடத்தவிருந்த நிலையில் வளிமண்டத்தில் ஏற்பட்ட தாழமுக்கம் காரணமாக நடைபெறமால் போய் விட்டது. அது மிகவும் கஷ்டமாக இருக்கு அதற்காக கவலை அடையவில்லை. எதிர்வரும் மாசி மாதம் 09.02.2024 அன்று வரயிருக்கின்றோம். இந்திய பிரபலங்கள் வளிமண்டத்தில் ஏற்பட்ட தாழ்யமுக்கம் காரணமாக அடுத்ததடவை வருவார்கள் என்று நம்புகின்றேன்.

இந்த வருடம் கொழும்பு, யாழ்ப்பாணம் மட்டும்தான் சுற்றுலாவில் ஈடுபட்டுள்ளோம். பின்னர் டுபாய்க்கு சுற்றுலா விடுமுறையினை கழிக்க போகின்றோம். அதுபிள்ளைகளின் பயணமாக இருக்கின்றது. என்றார்.

மேலும் இதுதொடர்பாக நோத் யூனியின் தலைவரும் தொழிலதிபருமான ப.இந்திரகுமார் கருத்து தெரிவிக்கையில், கல்விக்கான நிறுவனத்தை ஆரம்பித்து இருக்கின்றோம். எதிர்வரும் காலத்தில் 10,000 மாணவர்களுக்கான கல்வியினை வழங்க எதிர்பார்த்து இருக்கின்றோம்.



வசதிகுறைந்த மாணவர்களும் படிப்பதற்கான லோன் அடிப்படையில் கல்வியினை கற்க நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் இங்க கற்றவர்களுக்கான வேலைவாய்ப்பினை உருவாக்கவும் நடவடிக்கை எடுக்கவுள்ளோம்.

எங்களுக்கு உழைக்க வேண்டும் என்ற நோக்கம் இல்லை? எங்களது சந்தயினருக்கு தேவையான வசதி வாய்ப்புக்கள் எங்களிடம் இருக்கிறது. அது வட அமெரிக்கா, இந்தியாவிலும், இருக்கிறது. அதுவும் வடக்கு மக்களுக்கு உதவி செய்யவேண்டும் என்ற நோக்கில் தான் நாங்கள் வந்துள்ளோம் என்றார்.

MORTGAGE FINANCIAL SOLUTIONS

RESIDENTIAL COMMERCIAL INDUSTRIAL VACANT LAND CONSTRUCTION




Our Services

• 1st & 2nd Mortgages • Purchase • Refinance • Renewal • Switches • Equity line of Credit
• Pre-approvals •Self-employed • Multi-rental properties • New immigrants

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

1585 Markham Rd, Unit #406,
Toronto, ON. M1B 2W1
Canada

www.nesan.ca

WE DEAL WITH ALL BANKS

Powered By
MORTGAGE ALLIANCE
RIGHTBROKER=RIGHTMORTGAGE
Brokeerage #10330 / Licence # M15001465

Scotiabank TD Canada Trust RFA FIRST NATIONAL FINANCIAL LP

MCAP HOME TRUST EQUITABLE BANK radius financial RMG mortgages

மொன்றியல் நகரில்
UTHAYAN உதயன்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள்,
பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும்
அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பழமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519




26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்




உதயம் 1446 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday December 22, 2023

# கனடிய பல்லின பத்திரிகையாளர்கள் கழகத்தின் விருதுகளைப் பெற்ற "கனடா உதயன்" நண்பர்களாம், தொழிலதிபர் திரு தேவதாஸ் சண்முகலிங்கம் மற்றும் மொன்றியால் எழுத்தாளர் வீணைமைந்தன் சண்முகராஜா ஆகியோர்



கடந்த வெள்ளிக்கிழமை 15ம் திகதி கனடாவின் ரொறன்ரோ மாநகரில் அழகிய மண்டபம் ஒன்றில் இடம்பெற்ற கனடிய பல்லின பத்திரிகையாளர்கள் கழகத்தின் சமூக சேவையாளர்களுகள் மற்றும் பத்திரிகைத்துறை ஆசிரியர் ஆகியோர்களுக்கான விருதுகள் வழங்கும் விழா சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கழகத்தின் தலைவர் திரு தோமஸ் சாரஸ் அவர்கள் தனது குழுவினருடன் அனைத்து ஏற்பாடுகளையும் சிறப்பாகச் செய்திருந்தார்.

இங்கே காணப்படும் படத்தில் தமிழர் சமூகத்திற்கான விருதுகள் வழங்கப்பெற்ற தொழிலதிபர் தேவதாஸ் சண்முகலிங்கம் மற்றும் எழுத்தாளர் வீணை மைந்தன் ஆகியோர் மாகாண கல்வி அமைச்சர் அவர்களின் வாழ்த்துக்களைப் பெறுவதைக் காணலாம்.

(உள்ளே விபரமான செய்தி 26ம் பக்கத்தில்)

# பாரிஸ் நகரில் இதழ் TNTR ஊடகநிறுவனம் நடத்திய "சுயம்பு" விருதுகள் வழங்கும் விழாவும் கலை விழாவும் ஒரே மேடையில்



"சுவிற்சலாந்து வாழ் எழுத்தாளர் கல்லாறு சதீஸ், கனடா வாழ் பத்திரிகையாளர் ""உதயன்"லோகேந்திரலிங்கம், ஜேர்மனி வாழ் திரைப்பட இயக்குனர் சிபோ சிவகுமாரன் மற்றும் பிரான்ஸ் வாழ் திரைப்படத்துறை கலைஞர் நடிகர் திருமலையூரான் அசோக்குமார் அவர்கள், ஆகியோர் "சுயம்பு" விருது கௌரவிக்கப்பெற்ற அழகிய மேடை

கடந்த 17-12-2023 ஞாயிற்றுக்கிழமையன்று பிரான்ஸில் இருந்து இயங்கி வரும் இதழ் தொலைக்காட்சி வானொலி குழுமத்தின் சர்வதேச (நம்மவர்களுக்கான ) "சுயம்பு" 2023 என்ற விழாவினை சிறப்பாக நடத்தியது. இதழ் TNTR ஊடகத்துக்கும் அதன் இயக்குனர் அனுசா ரூபன் அவர்களுக்கும் அவரது கணவர் மற்றும் பிரான்ஸ் வாழ் கலைஞர் பெருமக்களுக்கும் நன்றி!

(உள்ளே விபரமான செய்தி 21ம் பக்கத்தில்)

# தற்போது இலங்கையில் தங்கியிருக்கும் கனடா உதயன் லோகேந்திரலிங்கத்தை நேர்காணல் செய்த தொலைக்காட்சி "நேத்ரா" வின் கலைஞர் காயத்திரி

பிரான்ஸ் தேசத்தில் இடம்பெற்ற "சுயம்பு" விருதுகள் விழாவில் கலந்து கொண்ட பின்னர் அங்கிருந்து இலங்கை சென்று தற்போது அங்கு தங்கியிருக்கும் கனடா உதயன் லோகேந்திரலிங்கத்தை அரச தொலைக்காட்சியான "நேத்ரா" வின் கலைஞர் காயத்திரி அவர்கள் நேர்காணல் செய்தார். அங்கு கலையகத்தில் பணியாற்றிய அனைத்து தொழில்நுட்பக் கலைஞர்கள் சகிதம் மேற்படி நேர்காணலை வெற்றிகரமாக நிறைவேற்றினார் காயத்திரி அவர்கள்.

இங்கு காணப்படும் படங்களில் "நேத்ரா" வின் கலைஞர் காயத்திரி அவர்கள், கனடா உதயன் லோகேந்திரலிங்கம் மற்றும் உதயன் சென்னைப்பிரதிநிதி பிரகாஸ். ஜேர்மனி-பேர்லின் வாழ் நாகமணி தேவதாஸ் இலங்கை எழுத்தாளர் பவானி சச்சிதானந்தன் ஆகியோர் ஒன்றாக நிற்பதைக் காணலாம்.





# கனடாவில் வெற்றிகரமான இயங்கிவரும் தொழில் நிறுவனமான SQM Janitorial Services நடத்திய வருடாந்த கிறிஸ்த்துமஸ் விழா

கனடாவில் வெற்றிகரமான இயங்கிவரும் தொழில் நிறுவனமான **SQM Janitorial Services** நடத்திய வருடாந்த கிறிஸ்த்துமஸ் விழா கடந்த வாரம் பிரம்ரன் மாநகரில் சிறப்பாக நடைபெற்றது. விழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் நிறுவனத்தின் தலைவர் கெம் பாக்கியராஜா அவர்கள் தனது குடும்பத்தார் மற்றும் பணியாளர்கள் சகிதம் செய்திருந்தார்.

விழாவிற்கான ஏற்பாடுகளை **SQM Janitorial Services** அதிபர் கேம் பாக்கியராஜா சிறப்பாகச் செய்திருந்தார்.

பிரதம விருந்தினராக பிரம்ரன் மாநகர மேயர் பெற்றிக் பிரவுண் அவர்கள் கலந்து சிறப்பித்தார்.

இங்கே காணப்படும் படங்களில் கனடா உதயன் நண்பர்கள் விசு கணபதிப்பிள்ளை மற்றும் இலங்கேஸ்வரன் ஆகியோர் **SQM Janitorial Services** அதிபர் கேம் பாக்கியராஜா ஆகியோர் நிற்பதைக் காணலாம்.



# நாளை கனடாவில் நடைபெறவுள்ள சகோதரக் கலைஞர்களின் வீணை அரங்கேற்றம்

நாளை கனடாவில் நடைபெறவுள்ள **Peruthekka Jayaratnam Priyanka Jayaratnam** ஆகிய சகோதரக் கலைஞர்களின் வீணை அரங்கேற்றத்தினை சிறப்பிக்க அவர்கள் குருவும் நாத வீணா இசைப் பயிற்சிக் கூடத்தின் அதிபருமான ஸ்ரீமதி குககேஸ்வரி சத்தியமூர்த்தி அவர்களும் பெற்றோர்களான திரு. திருமதி ஜெயரட்ணம் ஆகியோர் அன்புடன்அழைக்கின்றனர்.

அரங்கேற்றம்நடைபெறும் திகதி: **December 23, 2023 at 5.00 PM**

அரங்கேற்றம் நிகழும் மண்டபம்: ***Chinese Cultural Centre of Greater Toronto, 5183 Sheppard Ave East. Scarborough. ON M1B 5Z5***

செல்விகளின் அரங்கேற்றம் சிறப்புற நடைபெற கனடா உதயன் பத்திரிகை நிறுவனம் வாழ்த்துகின்றது.

